Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 24 ரூபா 30.00
மார்ச் 01 - 07, 2012

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 952

## ஜெனீவாவில் அமைச்சர் தேவானந்தா



புதிய முயற்சிகளும் நடைமுறை அரசியலும்

தேசிய மேடையில்

## சர்வதேச எதிர்ப்புகள்!



மேரி கொல்வினின் ஊடகம் ஓர் ஆயுதம்



## தீர்ந்துபோகாத நெருப்பு

புதிய தொடர்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது மக்களின் வாழ்வை பாதுகாக்கக் கூடிய தீர்வுக்கு

# நாமே முயற்சிகளை எடுக்கவேண்டும்

### ஈ.பி.டி.பி.யின் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார்



**யதார்த்தத்தையும் சூழ்நிலையினையும் புரிந்து கொண்டும் நாட்டின் நலனை கருத்தில் எடுத்தும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எமது அணுகுமுறைக்கே வந்துள்ளமை மகிழ்ச்சியளிப்பதோடு வரவேற்கத்தக்கதுமாகும் என கிளிநொச்சியில் நடைபெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் போது உரையாற்றிய, ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.**

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இன முரண்பாட்டினாலும் போர்ச் சூழலினாலும் அல்லலுற்ற நாம் போர் முடிந்த பின்னர் உருவாகியிருக்கும் தற்போதைய சூழலின் மெல்ல மெல்ல இயல்புநிலைக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறோம். தினமும் சாவுகளின் மத்தியில் உத்தரவாதங்களற்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருந்த நாம் இப்பொழுதே நிம்மதிப் பெருமூச்சு விடக்கூடியதாக உள்ளது.

அரசியல் முரண்பாடுகளுக்கு அப்பால் கடந்த காலத்தின் பட்டறிவின் அடிப்படையில் இலங்கைச் சமூகங்கள் அமைதியை நோக்கிய பாதையைத் தேர்வு செய்யும் மனநிலைக்கு வந்துள்ளன.

இந்த நிலையில் கடந்த போர்க் காலத்தில் நடந்த சம்பவங்கள் குறித்த நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அரசாங்கம் கவனத்திற் கொள்வதாகத் தெரிவித்திருக்கும் சூழலை மேலும் கவனப்படுத்துவதை நாம் வரவேற்கிறோம். அதேவேளை போர்க்காலச் சம்பவங்களின் மேரான வெளியுலகத்தின் அணுகுமுறைகள் நிச்சயமாக இலங்கையில் தமிழ் சிங்களச் சமூகங்களிடையே எதிர்நிலை அம்சங்களையே உருவாக்கும்.

தூரத்து தண்ணி ஆபத்திற்கு உதவாது. எனவே நாங்கள் இலங்கை தீவினுள் எமது மக்களின் வாழ்வை பாதுகாக்கக் கூடிய தீர்வை பெறுவதற்கான முயற்சியினை எடுக்கவேண்டும். இதற்கு தென்பகுதி மக்களின் மனங்களை வென்றெடுக்கவேண்டும். இந்த நிலைமையினை தமிழ் கூட்டமைப்பும் நன்றாக உணர்ந்துள்ளது அவர்களுடைய இந்த முடிவை நாம் வரவேற்கின்றோம். எந்த இடத்தில் எப்படி தீர்மானம் எடுக்கின்றோம். எந்தச் சந்தர்ப்பத்தில் எவ்வாறு செயற்படுகின்றோம் என்பதை பொறுத்தே வெற்றித் தோல்விகள் அமைகின்றன.

எனவே வெளிச்சக்திகளின் தலையீடென்பதும் அவற்றின் அழுத்தங்கள் என்பதும் இலங்கையிலுள்ள சமூகங்களை மேலும் பிளவுபடுத்தும் வகையிலேயே அமையும் என்பதால் இதனைத் தவிர்ப்பதற்கான கவனத்தைக் கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

## சட்டவிரோதமாக சொத்து குவித்தவர்களுக்கு சட்ட நடவடிக்கை

சட்டவிரோதமான முறையில் சொத்துக்களை குவித்ததாக 40 அரசாங்க அதிகாரிகளுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இதில் பதினாறு பேர் அரசியல்வாதிகள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரசியல்வாதிகளில் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் இவர்களுள் அடங்குவதாகக் குறிப்பிடப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்டுள்ள அதிகாரிகள் சொத்து விபரங்கள் தொடர்பில் ஏற்கனவே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அதிகாரிகளிடம் தரவுகள் திரட்டப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## வலைகளைப் பயன்படுத்துவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்

திருகோணமலை சல்லிபே கடற்கரையில் மீன் வலைகளைப் பயன்படுத்தி தொழில் செய்வோர் மீது தடை ஏற்படுத்த வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. குறித்த பிரதேசத்தில் சுமார் 45 குடும்பங்களைச் சேர்ந்த மீனவர்கள் கடந்த பல வருடங்களாகத் தூண்டிலைப் பயன்படுத்தி தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இப்பகுதிகளில் படகுகளில் வருவோர் வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடிப்பதால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும், இதனால் மீன் பெருக்கம் குறைந்து வருவதாகவும், எனவே குறித்த விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் அப்பகுதி மக்களால் பிரதியமைச்சர் சுசந்த புஞ்சி நிலமேயிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## யாழில் போதைப்பொருள் ஒழிப்பு பொலிஸ் தீவிர நடவடிக்கை

யாழ்ப்பாணத்தில் போதைப்பொருள் விற்பனை மற்றும் பாவனை பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் அதிகாரி சமன் சிகேரா தெரிவித்துள்ளார்.

"யாழில் போதைப்பொருள் விற்பனை செய்தவர்கள் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் யாழில் முழுமையான போதைப் பொருள் பாவனையைத் தடுப்பதற்கு விசேட பொலிஸ் பிரிவுகள் அமைக்கப்பட்டு போதை ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டனர் எனத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கிராமப்புறங்களில் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

யாழ்.நகரப்பகுதியில் சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பாக சில முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அவை தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மீண்டும் மலேரியாத் தாக்கம்

யாழ் மாவட்டத்தில் என்றும் இல்லாதவாறு மலேரியா பரவிவருவதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் கடந்த காலங்களில் இல்லாத அளவுக்கு மீண்டும் மலேரியாவின் தாக்கம் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளதாகவும் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் இருந்து தற்போது இலங்கைக்கு திரும்புபவர்கள் மூலமாக மலேரியா நோய் மீண்டும் யாழ்ப்பாணத்தில் தலைதூக்கியுள்ளதாகவும் இதனைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்."

## வன்னி தொண்டர் ஆசிரியர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம்

### ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி



வன்னியில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு விரைவில் நியமனங்கள் வழங்கவுள்ளதாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திர சிறி தெரிவித்துள்ளார். குடாநாட்டில் இருந்து பதிலீட்டு ஆசிரியர்கள் வன்னிப் பிரதேசங்களுக்கு அனுப்பப்படுவதால் அங்கு கடமையாற்றுகின்ற தொண்டர் ஆசிரியர்கள் தமது நிரந்தர நியமனங்களை இழக்கவேண்டி ஏற்படும் என்று இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தினரால் எழுப்பப்பட்ட சந்தேகத்தைக் கருத்தில் எடுத்துக்கொண்டு வடமாகாண ஆளுநர் வன்னியில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க சகல நடவடிக்கைகளும் பூர்த்தியாகியுள்ளதாகவும், அது உடனடியாக நடைபெறும் என்றும் உறுதியளித்துள்ளார்.

அண்மையில் யாழ்ப்பாண பொது நூலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஒன்றுகூடலின் போதே இது பற்றிக் கூறப்பட்டுள்ளது. இதன்போது வன்னிப் பிரதேசத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்கள், வன்னியில் இருந்து குடாநாட்டுக்கு வருகை தரும் ஆசிரியர்கள் ஆகியோரின் விபரங்கள் உட்பட பல்வேறு விடயங்கள் வலயக் கல்விப் பணிப்பாளர்களால் ஆளுநருக்குத் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பில் மொழிப் பயிற்சி

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகளுக்கான மொழிப்பயிற்சி செயலமர்வு ஒன்று நடைபெற்றுள்ளது. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அரச கரும மொழித் திணைக்களத்துடன் இணைந்து நடாத்திய இச் செயலமர்வில் சுமார் 50 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## பசறையில் உணவு ஒவ்வாமை 28 பேர் வைத்தியசாலையில்

பசறையில் டெமேரியத்தை என்னும் தோட்டத்தில் அமைந்துள்ள ஆலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற உற்சவத்தில் வழங்கப்பட்ட உணவை உட்கொண்டவர்களில் 28 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஒரு கைக்குழந்தை உட்பட 28 நோயாளர்களையும் பரிசோதனை செய்த வைத்தியர்கள் உணவு ஒவ்வாமையே இவர்களின் சுகவீனத்திற்குக் காரணம் எனத் தெரிவித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமுரசு வாரமலர்
த.பெ.இல:-1772, கொழும்பு.
த.பெ.இல:-157, யாழ்ப்பாணம்.
தொலைபேசி:-021 222 1811
தொலைநகல்(Fax):-021 222 1811
மின்னஞ்சல்(E-mail):-thinamurasu@live.com

## முரசம்
## அரசியல் சதிராட்டங்கள்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

கடந்தவாரம் இலங்கைக்கு எதிரான சர்வதேச சக்திகளுக்கு எதிராக நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. எதிர்க்கட்சிகள் விலையேற்றங்களை எதிர்த்து எதிர்க்கட்சிகள் நடத்தியதை விடப் பெருந்தொகையான மக்களை இந்த ஆர்ப்பாட்டங்களில் காணமுடிந்தது.

உள்ளகப்பிரச்சினைகளுக்கும் அந்நிய தலையீடுகளுக்குமான வித்தியாசத்தை மக்கள் புரிந்து கொண்டுள்ளனர். இங்கேயும் இலங்கையின் பாரம்பரியம் வெற்றிபெற்றுள்ளது. அதாவது ஒருபிரச்சினையை இன்னொரு பிரச்சினையால் விழுங்கிவிடுவது.

நேற்றுவரை விலையுயர்வுக்காக ஒலித்த குரல்களும் நடந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் இப்போது ஓரங்கட்டப்பட்டுவிட்டது. எதிர்க்கட்சிகளால் பத்துத் தடவை ஏற்பாடு செய்வதும் சரி அரசு ஒரு தடவை ஏற்பாடு செய்வதும் சரி அந்த வகையில் சர்வதேச எதிர்ப்புக்காக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களினால் அரசுக்கு இரண்டு நன்மைகள் கிடைத்துள்ளன.

குற்றச்சாட்டுக்கள் எதுவாக இருந்தாலும் இலங்கை அரசுக்கு மக்கள் ஆதரவு உள்ளது. அத்துடன் விலையுயர்வுப் பிரச்சினையை அரசியலாக்கத் திட்டமிட்டவர்களின் எண்ணங்களைக் கவிழ்த்து பொடியாக்குவது.

இங்கே என்ன நடந்திருந்தாலும் வறுமையில் வாடும் மக்களுக்கும், எரிபொருள் விலையுயர்வால் ஏற்பட்டிருக்கும் விலையேற்றங்களுக்கும் பரிகாரம் காணப்படவில்லை.

மக்களுக்கு எரிபொருள் மானியம் வழங்கப்படவேண்டும். தான்தோன்றித்தனமாக நாளுக்கு நாள் உயர்வடையும் தனியார் துறைகளின் விலையேற்றத்தை அரசு கட்டுப்படுத்தவேண்டும்.

விவசாயிகள், கடற்றொழிலாளர்கள், மலையகத் தொழிலாளர்கள், சுயதொழில் முயற்சியாளர்கள் போன்றவர்களுக்கு விசேடமான பொறிமுறையூடாக உதவிகள் வழங்கப்படவேண்டும்.

இவ்விவகாரத்தை எதிர்க்கட்சிகளின் அரசியல் கூச்சலாக எண்ணிவிடலாகாது. மக்களின் பிரச்சினையாக பார்க்கப்படவேண்டும்.

மக்களின் பிரச்சினைகளை எதிர்க்கட்சிகள் தமது கைகளில் எடுத்துக் கொள்வது வழமையாகும். எதிர்க்கட்சிகள் தமது சுயலாப அரசியலுக்காக மக்களின் பிரச்சினைகளை திசைப்பிரச்சினைகளாக்கி விடக்கூடாது.

எப்போதும் பிரச்சினைகளை இனங்கண்டு அணுகவேண்டும். தேசிய ரீதியில் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினைகளை விட்டு கட்சி, அரசியல் வேறுபாடுகளுக்கப்பால் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி அனைத்தும் வெளிப்படையாக பேசவேண்டும். மேற்கு நாடுகளில் காணப்படும் இந்த அரசியல் கலாசாரம் இங்கேயும் தேவையாகவுள்ளது.

அவ்வாறான கலாசார அரசியல் தலைவர்கள் நம்மிடையே தோன்றும் வரை மக்களும் பிரச்சினைகளும் பிரிக்கமுடியாதவைகளாகவே இருக்கப்போகின்றது. பிரச்சினைகளில் முதலீடு செய்து அரசியல் நடத்தும் கோமாளிகள் மக்களின் பிரச்சினைகள் தொடர்வதையே விரும்புகின்ற சூழலில் மக்கள் மீண்டும் மீண்டும் தோற்றுப்போவதைத் தவிர வேறு என்ன செய்யமுடியும்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

# ஜெனீவாவில் அமைச்சர் தேவானந்தா
# புதிய முயற்சிகளும் நடைமுறை அரசியலும்

**ஈ.பி.டி.பி இலங்கை அரசோடும் இணக்க அரசியல் நடத்துகின்றது. அதேவேளை சர்வதேச சமூகத்திடமும் தமிழ் மக்கள் சார்பில் பேசுகின்றது. இந்த அணுகுமுறை காலத்தின் அவசியமாகும். இதை புலம்பெயர்ந்த புலி ஆதரவாளர்களும் கூட்டமைப்பின் ஆதரவாளர்களும் எப்படி எடுத்துக் கொள்வார்கள் என்று நாம் கவலைப்படவில்லை. ஆனால் தற்போதைய உலக ஒழுங்கோடும் இலங்கையின் நடைமுறை அரசியலோடும் சிந்தித்து நியாயத்தைப் புரிந்து கொள்ளவேண்டும்.**

இலங்கை அரசாங்கத்துக்கு ஜெனீவா முள்ளிவாய்க்காலாக மாறிவிடாதா? என்பதுதான் புலி ஆதரவாளர்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

உலகளாவிய ரீதியில் பரந்துவாழும் இலங்கைத்தமிழர்கள் தாம் வாழும் அந்தந்த நாடுகளின் பிரஜைகளாகி இருப்பதோடு மட்டுமல்லாமல் அங்கு அரசியல் தளத்திலும் தாக்கம் செலுத்துகின்ற அளவுக்கு வளர்ச்சி கண்டுள்ளனர்.

இந்த வளர்ச்சியை, பலத்தை, இலங்கையில் வாழும் மக்களின் பாதுகாப்பான எதிர்காலத்துக்காகவும் அபிவிருத்திக்காகவும் பயன்படுத்தினால் யுத்தத்தினால் எல்லாம் இழந்து அநாதரவாகி நிற்கும் தமிழர்களின் வாழ்வு உயர்ந்துவிடும்.

இதற்கான அழைப்பை இலங்கை அரசும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் தொடர்ந்தும் விடுத்துவருகின்றனர். ஆனால் புலம்பெயர்ந்து வாழ்பவர்களில் ஒரு பிரிவினரில் பெரும்பான்மையானவர்கள் இன்னும் புலிகளின் அனுதாபிகளாகவே இருக்கின்றனர். ஆகையால் புலிகளின் கனவுகளை சுமந்தவர்களாகவும் அரசுக்கு எதிரான பிரச்சாரங்களுக்கு எடுபட்டுப்போகின்றவர்களாகவும் இருக்கின்றனர்.

இலங்கை அரசுக்கு சர்வதேச தளத்தில் முறையான எதிர்ப்புச் சக்தியாக இயங்கமுடியாவிட்டாலும், புறநிலையில் கனிசமான அழுத்தசக்தியாக இருப்பதற்கு முயற்சித்து வருகின்றனர் என்பதை இலங்கை அ[illegible] தமிழர்கள் தொடர்பான அறிக்கைகளும் கவலைகளும் வெளியிடப்படுகின்றன.

இவ்வாறானதொரு பின்னணியில், அமைச்சரும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா இலங்கை அரசின் உயர்மட்ட அமைச்சர் குழுவுடன் சேர்ந்து ஜெனீவாவுக்குச் சென்றுள்ளார்.

தமிழ் மக்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு அதிகப்படியான வாக்குகளை வழங்கிவருவதற்கு புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் செல்வாக்கும் உள்ளது என்று மேலோட்டமான அபிப்பிராயம் உள்ளது. ஆனாலும் தற்போதைய இலங்கையின் சூழலில் இணக்க அரசியல் வழிமுறையூடாகத்தான் தமிழ் மக்கள் தமது அரசியல் அபிலாஷைகளை அடையமுடியும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நிலைப்பாட்டை ஆதரிக்கும் மக்கள் அமைச்சருக்கும் அவரது கட்சியினருக்கும் வாக்களித்து வருகின்றனர்.

ஒப்பீட்டளவில் ஈ.பி.டி.பிக்கு ஒவ்வொரு தேர்தல்களிலும் வாக்கு வங்கி அதிகரித்துவருவது கவனிக்கத்தக்கது. அப்படியாயின் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அரசியல் நிலைப்பாட்டில் நடைமுறை யதார்த்தத்தை தமிழ் மக்கள் புரிந்து கொள்வதுபோல் தெரிகின்றது.

இதற்கு இன்னொரு காரணம் டக்ளஸ் தேவானந்தா தன்னை ஆதரிக்கும் மக்களுக்கு எதைச் சொல்லுகின்றாரோ அதையே செய்து காட்டுகின்றார். இப்படிக் கூறும்போது அமைச்சரால் ஏன் இந்த அரசாங்கத்திடமிருந்து தமிழ் மக்களுக்கு தீர்வொன்றைப் பெற்றுக் கொடுக்க முடியாதுள்ளது என்ற கேள்வியை சிலர் கேட்கக் கூடும்.

ஈ.பி.டி.பி இணக்க அரசியல் வழிமுறையூடாகத் தற்போது தமிழ் மக்களுக்காக விடயங்களை நகர்த்துவதில் வெற்றிகளைப் பெற்றுள்ளது. தீர்வு தொடர்பில் விரைவான பலனைக்காண வேண்டுமானால் ஈ.பி.டி.பிக்கு கூடுதல் அரசியல் பலம் இருக்கவேண்டும். தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு அடுத்தடுத்து பலத்தைக் கொடுத்து தோற்றுப் போனது போல் அல்லாமல் ஈ.பி.டி.பிக்கு அந்த வாய்ப்பைத்தரவேண்டும். ஈ.பி.டி.பி தமிழ் மக்களை ஒருபோதும் தோற்றுப்போக இடமளிக்கப்போவதில்லை என்று ஈ.பி.டி.பி விளக்கம் தருகின்றது.

இலங்கை அரசும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசுக்கு வாக்களித்த பெரும்பான்மை மக்களுக்கும் எதிராக தமிழ் மக்களை நிறுத்த தமிழ் கூட்டமைப்பு முயற்சிக்கின்றது. புலிகளும் இதைத்தான் செய்தார்கள். ஆனால் ஈ.பி.டி.பி அப்போதும் இப்போதும் தமிழ் மக்களை பாதுகாக்கவும் தமிழ் மக்களுக்கான நேசக்கரங்களை துண்டித்துவிடாமலும் மிகவும் நிதானத்துடன் செயற்பட்டு வருகின்றோம் என்கிறார் ஈ.பி.டி.பியின் ஊடகச் செயலாளர் ஒருவர்.

அவரிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஜெனீவா பயணம் தொடர்பில் கேட்டபோது, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தமிழ் மக்களிடம் எதைச் சொல்கின்றாரோ அதைத்தான் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடமும் சொல்கின்றார். இதில் ஒளிவுமறைவு இல்லை. ஈ.பி.டி.பியை ஆதரிக்கும் மக்களுக்கு மட்டுமல்ல ஏனைய தமிழ் கட்சிகளுக்கும் இது தெரியும். தமிழ் மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வொன்றைப் பெறவேண்டிய பிரதான தரப்பாக இலங்கை அரசாங்கமேயுள்ளது. ஆகவே இலங்கை அரசோடு நடைமுறைச்சாத்தியமான வகையில் தமிழ் மக்களின் நியாயங்களை தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பை நாம் ஏற்றிருக்கின்றோம். அதை வெளிப்படையாகவே செய்கின்றோம்.

குருட்டுத்தனமாக எதிர்ப்பதனூடாக தமிழ் மக்களுக்கு இங்கே எதுவும் பெற்றுக்கொடுக்கப்படவில்லை. புலிகளுக்கும் கூட்டமைப்புக்கு மிடையே இதில் பாரிய வேறுபாடுகளை காணமுடியவில்லை. தமிழ் கூட்டமைப்பு, தமிழ் மக்களிடம் கொடுத்த வாக்குறுதிகளை ஒருபோதும் நிறைவேற்றியதில்லை. இதற்கு அண்மைய உதாரணம், இலங்கை அரசுக்கு ஜெனீவாவில் நெருக்கடி உள்ளது என்று அவர்கள் நம்பவில்லை. ஆனால் ஜெனீவாவில் அரசுக்கு தாக்குதல் நிச்சயம் அதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்துவிட்டோம் என்று கூறுகின்றனர்.

உண்மையில் அவர்கள் சொல்வதில் அவர்களுக்கு நம்பிக்கை இருந்திருந்தால் தாம் செய்ய நினைப்பதை நேரில் நின்று செய்யவேண்டும். தாம் நேர நாடுகளோடு பேசிவிட்டதாக கூறுகின்றனர். அதுவும் பொய்; அதைக்கூட வெளிப்படையாக இவர்களால் சொல்லமுடியவில்லை. இதுவும் தமிழ் மக்களை ஏமாற்றும் வித்தைதான். தமிழ் மக்களை ஏமாற்றுகின்றனர் என்பதை இந்த நிலைப்பாடு தொடர்பில் கூட்டமைப்புக்குள் எழுந்துள்ள முரண்பாடுகளே வெளிக்காட்டுகின்றன.

சம்பந்தரும் சுமந்திரனும் தாம தெரிவித்த கருத்துக்கள் கூட்டமைப்பின் தீர்மானமாகும் என்று கூறும் அதே வேளை கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரான சுரேஷ் பிரேமச்சந்திரன் அதை பகிரங்கமாகவே மறுப்பதோடு ஜெனீவா தொடர்பான சம்பந்தனின் நிலைப்பாட்டுக்கு கூட்டமைப்பின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் மத்தியில் வேறுபட்ட அபிப்பிராயம் இருப்பதாகக் கூறினார். இதில் வேடிக்கை என்னவென்றால் இந்த முரண்பாட்டைக் கூட்டமைப்பின் பிரச்சாரத்துடனான சரணடைபவனின் பத்திரிகை வியாபாரமாக்கி இலாபமாக்கியது.

ஆனால் ஈ.பி.டி.பி. மத்திய அரசின் பங்காளி என்பதோடு தமிழ் மக்களின் குரலாகவும் ஒலிக்கவேண்டும் என்பதை மனதில் கொண்டு அரச குழுவோடு ஜெனீவாவுக்குச் சென்றுள்ளது. அங்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கிடைக்கின்ற சந்தர்ப்பங்களிலும், சந்திக்கின்ற உலகப் பிரதிநிதிகளிடமும் தமிழ் மக்களின் தற்போதைய நிலைமை பற்றியும், எதிர்பார்ப்புகள் பற்றியும் விளக்கமளித்துள்ளார்.

(தொடர்ச்சி 22 ஆம் பக்கம்)

**டக்ளஸ் தேவானந்தா தன்னை ஆதரிக்கும் மக்களுக்கு எதைச் சொல்லுகின்றாரோ அதையே செய்துகாட்டுகின்றார். இப்படிக் கூறும்போது அமைச்சரால் ஏன் இந்த அரசாங்கத்திடமிருந்து தமிழ் மக்களுக்கு தீர்வொன்றைப் பெற்றுக் கொடுக்கமுடியாதுள்ளது என்ற கேள்வியை சிலர் கேட்கக் கூடும். ஈ.பி.டி.பி இணக்க அரசியல் வழிமுறையூடாக தற்போது தமிழ் மக்களுக்காக விடயங்களை நகர்த்துவதில் வெற்றிகளைப் பெற்றுள்ளது. தீர்வு தொடர்பில் விரைவான பலனைக்காண வேண்டுமானால் ஈ.பி.டி.பிக்கு கூடுதல் அரசியல் பலம் இருக்கவேண்டும். தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு அடுத்தடுத்து பலத்தைக் கொடுத்து தோற்றுப்போனதுபோல் அல்லாமல் ஈ.பி.டி.பிக்கு அந்த வாய்ப்பைத்தரவேண்டும். ஈ.பி.டி.பி அப்போதும் இப்போதும் தமிழ் மக்களை பாதுகாக்கவும் தமிழ் மக்களுக்கான நேசக்கரங்களை துண்டித்துவிடாமலும் மிகவும் நிதானத்துடன் செயற்பட்டு வருகின்றது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியாக 20 வருடங்களுக்கு முன் இதே பெப்ரவரி மாதம். அப்போதும் தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதாவின் பிறந்த நாள் தமிழகம் எங்கும் அ.தி.மு.க.வினரால் கொண்டாடப்பட்டது. அமைச்சர்களும், கட்சி முக்கியஸ் தர்களும் ஜெயலலிதாவுக்கு விலையுயர்ந்த பிறந்தநாள் பரிசு கொடுக்க வேண்டும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அன்று அமைச்சர்களை நேரடியாக அழைத்து விலை உயர்ந்த பரிசு சமாச் சாரத்தை சொன்ன நபர், தற்போது அ.தி.மு.க. வில் இல்லை. சசிகலா குடும்பத்தினரில் ஒருவராக கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்.

ரிஷி



# பழைய சமாச்சாரம் தூசு தட்டப்பட்டது ஏன்?

சரியாக 20 வருடங்களுக்கு முன் இதே பெப்ரவரி மாதம். அப்போதும் தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதாவின் பிறந்த நாள் தமிழகம் எங்கும் அ.தி.மு.க. வினரால் கொண்டாடப்பட்டது. அமைச்சர்களும், கட்சி முக்கியஸ் தர்களும் ஜெயலலிதாவுக்கு விலையுயர்ந்த பிறந்தநாள் பரிசு கொடுக்க வேண்டும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அன்று அமைச்சர்களை நேரடியாக அழைத்து விலை உயர்ந்த பரிசு சமாச்சாரத்தை சொன்ன நபர் தற்போது அ.தி.மு.க. வில் இல்லை. சசிகலா குடும்பத் தினரில் ஒருவராக கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்.

உத்தரவிட்ட நபர் கூறிய விலை உயர்ந்த பரிசு, திருவள்ளுவர் சிலையோ, தஞ்சாவூர் தட்டோ அல்ல வங்கி காசோலை!

பெப்ரவரி 24ஆம் திகதி காலையிலேயே, பிறந்தநாள் பரிசு களுடன் வி.ஐ.பி.கள் ஆஜராகி விட்டனர். மொத்தம் 89 பேங்க் டிராஃப்ட்டுகள் ஜெயலலிதாவுக்கு பிறந்தநாள் பரிசுகளாக கிடைத்தன. 21 வெவ்வேறு வங்கிகளில், 57 நபர்களின் பெயர்களில் எடுக் கப்பட்ட 89 டிராஃப்டுகளின் மதிப்பு சுமார் 2 கோடி ரூபா! (20 வருடங் களுக்குமுன் மிகப்பெரிய தொகை அது)

அப்போதைய அமைச்சர் களில் அம்மாவுக்கு அதிக அன்புப் பரிசு கொடுப்பது யார் என்ற போட்டியே ஏற்பட்டதில், முதல் இரு இடங்களையும் தட்டிச் சென்றவர்கள், செங்கோட்டையன், அழகு திருநாவுக்கரசு (இவர் அறந் தாங்கி திருநாவுக்கரசர் அல்ல) ஆகிய இருவருமே! ஒருவர் 30 இலட்சத்துக்கும், மற்றொருவர் 27.5 இலட்சத்துக்கும் டிடி. எடுத்துக் கொடுத்து, போட்டியில் வெற்றி பெற்றிருந்தனர்.

ஆனால், இவர்கள் இருவரால் கொடுக்கப்பட்ட டிடிக்களைவிட பெறுமதி வாய்ந்த டிடி. ஒன்றும் அந்த 89 பரிசுகளில் இருந்தது. நியூயோர்க், அமெரிக்காவில் எடுக் கப்பட்டிருந்த அந்த டிடியின் மதிப்பு 3 இலட்சம் அமெரிக்க டொலர்கள்.

அ.தி.மு.க. ஆட்சி போய், தி.மு.க. ஆட்சி வந்தபோது, இந்த மெகா பிறந்தநாள், விசாரணைக்கு உள்ளானது. கிடைத்த பரிசுகளில் வெளிநாட்டுப் பணமும் இருப்பதை கண்டுகொண்ட தி.மு.க. முதல்வர் கருணாநிதி ஒரு முடிவு எடுத்தார். இப்படியான விவகாரங்களில் நல்ல அனுபவசாலியான அவர், வெளிநாட்டுப் பண வரவு இருப்ப தால், மத்திய அரசு இதில் புகுந்து விளையாட முடியும் என்பதைப் புரிந்து கொண்டு, வழக்கு சி.பி.ஐ.யின் கைகளுக்கு போகும்படி செய்துவிட்டார்.

பிறந்தநாள் பரிசாகக் கிடைத்த டிடிக்கள் முழுவதையும் ஜெயலலிதா தனது சொந்த வங்கிக் கணக்கில் (கனரா வங்கி, மைலாப்பூர் கிளை) வைப்பில் இட்டிருந்தார். அங்கே இருந்த பதிவுகளில் இருந்து விசாரிக்கத் தொடங்கியபோது, பரிசு கொடுக்க டிடி எடுத்த 57 நபர்களில் 12 பெயர்கள் போலியானவை என்று தெரியவந்தது. டிடி. எடுக்கப்பட்டபோது கொடுக்கப்பட்ட முகவரிகளில் யாருமில்லை.

சரியான முகவரிகள, மற்றும் பெயர்கள் கொடுக்கப்பட்டிருந்த வேறு சிலர், தமக்கும், அந்த டிடிக்களுக்கும் எந்த தொடர்பும் கிடையாது என்று நிரூபித்தார்கள். அந்த நபர்களில் ஒருவர், தமது வாழ்க்கையில் முழுசான 1000 ரூபாவை கண்டதே இல்லை. இந்த லட்சணத்தில் அவரது பெயரில் 2.5 இலட்சம் ரூபாவுக்கு டிடி. எடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் அமெரிக்கா வில் இருந்து வந்த பேங்க் டிராஃப்ட்டின் ரிஷி மூலம் அறிய முனைந்தது சி.பி.ஐ. ஜெயலலிதாவால் வைப்பு செய்யப்பட்ட அந்த டிராப்ட், அங்கிருந்து கிளியரன்ஸ் செய்யப்படு வதற்காக கலிபோர்னியாவிலுள்ள யூனியன் வங்கிக்கு அனுப்பப்பட்டது. அங்கிருந்து நியூயோர்க் அனுப்பப் பட்டு, கிளியர் செய்யப்பட்டு, மைலாப்பூருக்கு பணம் வந்து சேர்ந்திருந்தது.

இந்த டிராஃப்ட் தொடர்பான மேலதிக விபரங்களை சி.பி.ஐ. பெறுவதற்கு முடியவில்லை. இந்தியாவில் இருந்து அனுப் பப்பட்ட கடிதங்களுக்கு சரி யான பதில்கள் அமெ ரிக்காவில் இருந்து வரவில்லை. அதை யடுத்து, சி.பி.ஐ. அமெரிக்காவுக்கு யாரையாவது அனுப்பி விபரங்களைப் பெற முடிவு செய்தது.

சி.பி.ஐ.யின் சென்னை அலு வலகத்தில் அப்போது பதவியில் இருந்தவர் டி.முகர்ஜி. அவர் சி.பி.ஐ. சார்பில் அமெரிக்கா சென்றார்.

அங்கே நேரில் சென்று விசாரித்த போது, 3 இலட்சம் டொலருக்கான டிராஃப்டை ஜெயலலிதாவுக்கு பிறந்த நாள் பரிசு கொடுக்க எடுத்த நபரின் பெயர் கே.டி.பி.மேனன் என்று தெரிய வந்தது.

இந்தத் தகவல் கிடைத்தும், அதனால் சி.பி.ஐ.க்கு எந்தப் பலனும் இல்லை. காரணம், ஜெயலலிதாவுக்கு பணம் அனுப்பிய ஆளான, கே.டி.பி. மேனன் மர்மமான முறையில் மரண மடைந்திருந்தார்.

இதனால், அமெரிக்க டொலர் டிராஃப்ட் விவகாரத்தை மேலும் கிளறுவதில் பலன் இல்லை என்று விட்டுவிட்டது சி.பி.ஐ. 2000ஆம் ஆண்டு சி.பி.ஐ. அதிகாரி ஒருவர் இந்த வழக்கை தூசுதட்டி எடுத்து, புதிய கோணம் ஒன்றில் விசாரிக்கத் தொடங்கினார்.

இறந்துபோன மேனன், அ.தி. மு.க. அரசில் ஏதோ காரியம் செய்வ தற்காக பணம் கொடுத்திருந்தார். அந்த காரியம் கைகூடும் முன் இறந்து போனார் என்பதே சி.பி.ஐ. யின் பழைய கற்பனையாக இருந்தது. 2000ஆம் ஆண்டு இந்த வழக்கை தூசு தட்டி எடுத்த சி.பி.ஐ. அதிகாரி, புதிய கோணமாக, மேனன் ஒருவேளை தமது சொந்த காரியத் துக்கு அல்லாமல், வேறு யாருக் காகவோ இந்த டிராஃப்டை எடுத் திருக்கலாம் அல்லவா என்று யோசித்தார்.

அதையடுத்து, தன்னிடமிருந்த சொந்தப் பணத்தை ஜெயலலிதா வுக்கு பிறந்தநாள் பரிசாக கொடுத் தாரா என்று பார்க்க விரும்பிய அதிகாரி மீண்டும் அமெரிக்க வங்கி பணப் பரிமாற்றங்களை கிளறத் தொடங்கினார். அங்கே அவருக்கு ஆச்சரியம் காத்திருந்தது.

குறித்த பணம், மேனனின் கணக் கில் இருந்து பரிமாற்றம் செய்யப்பட் டிருந்தது. ஆனால், அந்தக் கணக்கு, இந்த டிராஃப்ட் எடுப்பதற்காக என்றே விசேடமாக திறக்கப்பட்டி ருந்தது. அதில் வேறு எந்த கொடுக் கல் வாங்கல்களும் கிடையாது.

இந்தப் புதிய கணக்குக்கு 3 இலட்சம் டொலர் எப்படி வந்தது என்று பார்த்தால், அதே வங்கி யிலுள்ள மற்றொரு கணக்கில் இருந்து வந்திருந்தது. அதுவும் மேன னின் கணக்குதான். மேனனின் இந்த இரண்டாவது கணக்குக்கு வேறு ஒரு புதிய நபரின் கணக்கில் இருந்து வந்த பணமே, இரண்டாவது கணக்கில் இருந்து, புதிய கணக்குக்கு போய், ஜெயலலிதா வுக்கு மாறியிருந்தது.

இந்த புதிய நபரின் பெயர் என்னவென்று விசாரித்தபோது, எம்.ஏ.எம்.ராமசாமி என்றது வங்கி!

சென்னையைச் சேர்ந்த பிரபல தொழிலதிபர் எம்.ஏ.எம்.ராமசாமியின் பெயர் கூறிக்கொண்டு இப்படி வந்து சேர்ந்தது. அந்த கணக்கின் உரிமை யாளரின் பெயர் எம்.ஏ.எம்.ராமசாமி என்ற போதிலும், அவர்தான் சென்னை தொழிலதிபர் எம்.ஏ.எம்.ராமசாமி என் பதை சட்டபூர்வமாக சி.பி.ஐ.யால் அப் போது நிரூபிக்க முடியாது போனது.

சென்னை தொழிலதிபர் ராம சாமி, தமக்கு அமெரிக்க வங்கியில் கணக்கு கிடையாது என்று கூறி விட்டார். வழக்கு அத்துடன் மீண்டும் முடங்கிக் கொண்டது.

இப்போது, சி.பி.ஐ. மீண்டும் அதே வழக்கை தூசு தட்டி எடுப்பது எதற்காக? 2000ஆம் ஆண்டில் நிரூ பிக்க முடியாத தொடர்பை, இப்போது எப்படி நிரூபிக்க முடியும்? அதற்கு ஒரு வாய்ப்பு இருப்பது உண்மை.

இந்த விவகாரம் எல்லாம் நடந் தது அமெரிக்கா மீதான அல்-கொய்தா தாக்குதல் நடப்பதற்கு முன்பு என்பதைக் கவனியுங்கள். செப்.11 தாக்குதலின்பின், தீவிரவாத அமைப்பு களுக்கு பணம் போகும் பாதைகளை அடைக்க அமெரிக்க அரசு, வெளி நாட்டு பண பரிமாற்றங்களில் பல ஒழுங்குகளைக் கொண்டு வந்திருக் கிறது. முன்பு போல வங்கிகள் மறுக்கமுடியாதபடி இறுக்கமான சட்ட விதிமுறைகள் தற்போது உள்ளன.

(22ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆபத்தானவர்கள்

அப்போது டிரான்ஸ் மீட்டர் 'பீப்... பீப்...' ஒலி யெழுப்பியது.

ஜான்ஸன் அதை நெருங்கினான்.

"ஸ்" என்ற ஜான்ஸன் கோட் வேர்டைக் குறிப்பிட்டான்.

"நான் கங்காபிரசாத் பேசுகிறேன். என்ன விசேஷமான தகவல் ஏதாவது உண்டா? தலைமையகத்திலிருந்து என்னிடம் தகவல் கேட்டார்கள்."

"இங்கு ஒரே குழப்பமாக உள்ளது."

"என்ன குழப்பம்? புரபசர் பத்திரமாக இருக்கிறார் இல்லையா?"

"அவர் பத்திரமாக இருக்கிறார்."

"பிறகு என்ன குழப்பம்."

"கப்டனுக்கு உடம்பு சரியில்லை. அவருக்குப் பதிலாக யாரோ ஒருவர் வந்திருக்கிறார். அவர் யார் என்று தெரியவில்லை."

"ஒருவேளை ராபின்சனா?"

"அவர் என்ன ஆனார் என்றே தெரியவில்லை."

அப்பொழுது டேவிட், டிரான்ஸ் மீற்றரை நெருங்கினான்.

"அவனை நான்தான் கொன்றேன். நான் இந்த அறைக்குள் வரும் போது அவர்கள் இருவரும் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். ராபின்சன் நமக்கு எதிராகச் செயற்படுகிறானோ என்ற சந்தேகத்தில்தான் அவனைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றேன்."

"அப்படியானால் அவனது பிணம் எங்கே?"

"அதை, உடனிருந்தவன் கடலில் வீசி எறிந்திருக்க வேண்டும்."

"இருக்கலாம். இவர் சொல்கிற சம்பவம் தொடர்பாக உங்களுக்கு ஏதாவது தெரியுமா?"

ஜான்ஸன், புஷ்பராஜின் பக்கமாகத் திரும்பினான்.

"மன்னிக்கவும்... நீங்கள் என்ன பேசுகிறீர்கள் என்றே எனக்கு விளங்கவில்லை. நான் ஏன் இந்த மாதிரியான விஷயத்தில் அனாவசியமாக ஆர்வம் காட்ட வேண்டும்? மருத்துவம் எனது தொழில். அது தொடர்பாக நீங்கள் என்ன கேட்டாலும் நான் பதிலளிக்க முடியும்! வேறு என்ன சொல்ல?"

அதன் பிறகு புஷ்பராஜ் தனது மருத்துப் பெட்டியுடன் அந்த அறையிலிருந்து வெளியேறினார். மற்ற இருவருக்கும் அவர் மீது சந்தேகம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

"அதோ போகிறவர் உண்மையான டாக்டர் தானா?" டேவிட் கேட்டான்.

"டாக்டர்தான். மாலைதீவில் டாக்டர் ஒருவரைக் கப்பலில் நியமித்தோம்." ஜான்ஸன் கூறினான்.

"அப்படியானால், அவர் அந்த டாக்டராக இருக்கலாம். நமது கேள்வி, கப்டனாக இங்கு நடித்த மனிதன் எங்கே? ராபின்சன் உண்மையிலேயே இறந்திருந்தால், அந்த உடலை அவன் எதற்காகக் கடலில் வீசி எறிந்திருக்க வேண்டும்?" டேவிட் கேட்டான்.

"அதைச் சோதித்து விடுவோம். இந்த நிலைமையில் நாம் மிகவும் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும். நிலைமை ஒரே குழப்பமாக உள்ளது." ஜான்சன் பதிலளித்தான்.

கப்பல் அப்போதும் வடக்குத் திசையில் நகர்ந்து கொண்டிருந்தது. புஷ்பராஜ் டாக்டரின் அதே வேடத்தில் மேற்புற டெக்கில் நின்று கொண்டிருந்தார்.

நேரம் நள்ளிரவு ஆகி விட்டிருந்தது. ஆகாயப் பரப்பில் நட்சத்திரங்கள் எதுவும் தென்படவில்லை. கடலில் சின்னஞ்சிறு அலைகள் எழும்பிக் கப்பலின் மீது மோதிக் கொண்டிருந்தன. பைனாகுலரை பயன்படுத்தி புஷ்பராஜ் கடற்பகுதியைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அப்போது வடதிசையிலிருந்து வெளிச்சப் புள்ளி ஒன்று அசைவதாகப்பட்டது. அது கப்பலை நோக்கி வந்து கொண்டிருந்தது.

உடனேயே அவர் கப்டனின் அறைக்கு விரைந்தார். டிரான்ஸ் மீற்றர் இயந்திரம் அப்போதுதான் உயிர் பெற்றுக் கொண்டிருந்தது.

"ஆமாம்... பிளாக்ரிப்பன்தானே. என்ன செய்தி?" புஷ்பராஜ் கேட்டார்.

"முக்கிய தகவல்..."

"சொல்லுங்கள்."

"விரைவிலேயே கப்பல் ஒன்று உங்களை நெருங்கும். எதிர்பாராமல் இப்படியொரு வாய்ப்புக் கிடைத்தது. வழக்குப்படி நமது அடையாளம் கிடைக்கும். அதன் பிறகு விஞ்ஞானியை அதற்குள் ஏற்றியனுப்ப வேண்டும்." தலைமையகத்திலிருந்து வந்த தகவல் புஷ்பராஜை நிம்மதி இழக்கச் செய்தது.

"இன்னொரு விஷயம்... அதற்குள் புரபசரை மட்டும் ஏற்றியனுப்பினால் போதும். வேறெவரும் தேவை யில்லை."

"ஜான்ஸன்?"

"தேவையில்லை. புரபசரைக் கவனித்துக் கொள்ள அந்தக் கப்பலில் ஆட்கள் இருக்கிறார்கள். எனவே, அவருடன் எவரும் தேவையில்லை."

"சரி..."

டிரான்ஸ் மீற்றரை அணைத்துவிட்டு புஷ்பராஜ் அவசரமாக வெளியே வந்தார். நேராக அவர் டிக்சனின் அறைக்கு விரைந்தார்.

புரபசர் மிகுந்த ஆவலுடன் அவரை வரவேற்றார்.

"என்ன விஷயம்?" புரபசர் கேட்டார்.

"உடனடியாக [illegible] தொடர்புகொள்ள வேண்டும்." புஷ்பராஜ் கூறினார்.


புரபசர் உடனே தனது கழுத்தில் உள்ள டிரான்ஸ்மீற்றருக்கு உயிர் கொடுத்தார். [illegible] குரல் கேட்டது.

"ஜோனைப் [illegible] கூப்பிட முடியுமா?"

**தொடரும்**

# பணம் விளையாடும் அரசியல்

**சங்கரன்கோவில்** இடைத்தேர்தல் தயாராகி வரும் நேரத்தில், அ.தி.மு.க. மற்றும் தி.மு.க.வின் தீவிர கவனிப்புக்கு உள்ளாகியிருக்கிறது விஜயகாந்தின் தே.மு.தி.க.! என்ன காரணம்? ஒருவேளை தே.மு.தி.க. ஜெயித்து விடலாம் என்ற பயமா?



அதெல்லாம் கிடையாது. வேறு வேறு விவகாரம். தமிழக அரசியல் அடுத்து எப்படித் திரும்பப் போகின்றது என்பதற்கான நிதி, தே.மு.தி.க.வின் சில நடவடிக்கைகளைப் பொறுத்தே உள்ளது என்கிறார்கள் ஆய்வாளர்கள். தனித்துப் போட்டியிடுவதாக தே.மு.தி.க. வெளிப்படையாகக் கூறினாலும், உள்ளே வேறு ஒரு திட்டம் ஒழுங்கொன்று இருக்கிறதா என்ற சந்தேகம், அ.தி.மு.க., தி.மு.க. தலைமைகளுக்கு உள்ளது. சங்கரன்கோவில் இடைத்தேர்தலில் போட்டியிடும் எண்ணம் இல்லாமல் இருந்த விஜயகாந்தை போட்டியில் குதிக்க வைத்தது, ஜெயலலிதாவின் சட்டசபை உரைபோற்றல் பேச்சு மட்டுமல்ல. அதையும் தாண்டி, இதில் வேறு ஒரு விவகாரமும் உள்ளது.

இந்த இடைத் தேர்தலில் விஜயகாந்த், தி.மு.க.வுடன் நெருங்கி வருவதற்கான சான்ஸ் கிட்டத்தட்ட இறுதிக் கட்டம்வரை வந்தபின், சில காரணங்களால் திசை மாறியது. அதன்பின் தி.மு.க.வும், தே.மு.தி.க.வும் தனித்தனி வேட்பாளர்களை அறிவித்தனர். தி.மு.க.வுடன் நெருங்கும் வாய்ப்பை கடைசி நிமிடத்தில் தட்டி விட்டது விஜயகாந்த் தரப்புதான் என்பது எமக்கு கிடைத்த தகவல்.

தி.மு.க. தாம் பெரிய கட்சி என்ற கௌரவத்தையும் பார்க்காமல், நன்றாகவே கீழிறங்கி வரத் தயாராக இருந்தது என்பதை தி.மு.க. வட்டாரங்கள் ஒப்புக் கொள்கின்றன. அப்படியிருந்தும் விஜயகாந்த் ஏன் தட்டிவிட்டார்?

தி.மு.க. வட்டாரங்களில் அடிபடும் கதையின்படி, விஜயகாந்தின் முடிவின் பின்னணியில் இருப்பது, அவரது மனைவி பிரேமலதா. தி.மு.க. தலைமைக்கு நெருக்கமான பிரமுகர் ஒருவர், "அந்தம்மா சொந்தமாக வேறொரு திட்டம் பேசி முடிச்சிட்டாங்க. அது நம்ம(தி.மு.க.) தலைமைக்கும் தெரியும்" என்றார்.

நாம் விசாரித்தவரை, தி.மு.க. பிரமுகரின் கூற்றில் உண்மை இல்லாமல் இல்லை. இதற்குள் மற்றொரு திட்டம் ஓடத்தான் செய்கிறது.

விஜயகாந்துடன் நெருங்கிவர தி.மு.க. எந்தளவுக்கு கீழிறங்கி வரத் தயாராக இருந்தது? தி.மு.க. வட்டார தகவல்களின்படி, தமது சொந்த வேட்பாளரை நிறுத்தாமல், தே.மு.தி.க. வேட்பாளரை வெளிப்படையாக ஆதரிக்க தி.மு.க. தயாராக இருந்தது. அதுமட்டுமின்றி, தேர்தல் தே.மு.தி.க.வின் செலவுகளை சமாளிக்க [illegible] கணிசமாக கவனிக்க தயாராகவும் இருந்திருக்கிறது.

தி.மு.க.வின் இந்த நிலைப்பாட்டுக்கு அவர்கள் கட்சிக்குள் அழகிரியின் எதிர்ப்பு இருந்தாலும், கலைஞரின் பூரண ஆசி இருந்தது. அதுவே போதும் கூட்டணி உறுதியாவதற்கு. ஆனால், உறுதியாகவில்லை.



தி.மு.க.வின் இந்த ஆதரவுக் கரத்தை பிரேமலதா தட்டிவிட்டதன் காரணம், வேறு ஒரு தரப்பு தேர்தல் செலவுகளை கவனித்துக் கொள்வதாக கூறி, இவர்களை மலைத்துப் போகும் அளவுக்கு கொடுக்க ஆரம்பித்த தொகைதான் னகிறார்கள்.

அந்தப் பணத்தை கொடுத்தது யாரோ என்றாலும், பணத்தின் பொயின்ட் ஒப் ஒரிஜின், சசிகலா குடும்ப வட்டாரங்களில் ஒன்று என்பதே இதிலுள்ள சுவாரசியமான அம்சம். இதில் சசிகலாவின் தொடர்பு நேரடியாக இல்லை என்று தெரிகிறது. ஆனால், அவருக்கு விடயம் தெரிந்தும், எதிர்ப்பு காட்டவில்லை என்கிறார்கள். சமீபத்தில் நடைபெற்ற தே.மு.தி.க. பொதுக்குழு கூட்டத்தில் பிரதானமே, விஜயகாந்த் மனைவி பிரேமலதாவின் பேச்சுதான் என்கிறார்கள் தே.மு.தி.க. வட்டாரங்களில். அதில் அவரது பேச்சு முழுவதுமே காரசாரமாக அ.தி.மு.க.வை தாக்கும் வகையில் இருந்ததாகவும் தே.மு.தி.க.வினர் சொல்கிறார்கள். ஜெயலலிதாவுக்கு நேரடியாக சவால்விட்டு பிரேமலதா பேசிய ஆவேசப் பேச்சுக்குத் தான் பொதுக்குழுவில் ஆரவார வரவேற்பு அதிகம் இருந்தது என்கிறார்கள்.

தே.மு.தி.க.வுக்கு கிடைத்த இந்த பணம், சங்கரன்கோவில் இடைத் தேர்தலில் வெற்றியைப் பெற்றுக் கொடுக்கப் போவதில்லை என்பதை இப்போதே சொல்லி விடலாம். பணம் கொடுத்தவர்களுக்கே இது ஜெயிக்கிற குதிரை அல்ல என்பது தெரிந்திருக்கும். ஆனால், தமிழக அரசியலில் சில அதிரடி மாற்றங்களை கொண்டு வரக்கூடியது இந்த பண முதலீடு.

ரிஷி

தமிழக அரசியல் ஸ்பெஷல் ரிப்போர்ட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாம்பத்தியத்திற்கு முன் ஆண்கள் செய்யக்கூடாத விடயங்கள்



பாலியல் உறவு என்பதை உடல் ரீதியான விடயமாகவே பெரும்பாலான ஆண்கள் நினைக்கிறார்கள். ஆனால் பெண்கள் அப்படி இல்லை. அதை மனதோடும் சம்பந்தப்படுத்தி உண்மையான இன்பத்தை அனுபவிப்பவர்கள் பெண்கள் மட்டுமே. உடலும், மனதும் இணையும் நிகழ்வாகவே உடல் உறவை பெண்கள் கருதுகிறார்கள்.

சில ஆண்கள் மென்மையான இசையை கேட்டுக்கொண்டே செக்ஸில் ஈடுபட விரும்புவார்கள். ஆனால் பெரும்பாலான பெண்களுக்கு இது பிடிப்பதில்லை. இசை உண்மையான லயிப்பைத் தருவதில்லை என்பது பெண்கள் கூறும் காரணம். எனவே உங்களது துணைக்கு இசை பிடிக்குமா, இல்லையா என்பதை அறிந்து கொண்டு இசையை பரவவிடுங்கள்.

இன்று கிட்டத்தட்ட அத்தனை பேருமே செல்லும் கையுமாகத்தான் உள்ளனர். சாப்பிடும்போதும் செல்போனில் பேச்சு, குளிக்கும் போதும்கூட சிலர் பேசப் பார்த்திருக்கலாம். ஆனால் உறவின்போது மட்டும் எப்பாடுபட்டாவது இந்த செல்போனை சுவிட்ச் ஓப் செய்துவிடுங்கள், உறவு தொடர்பான பேச்சுக்களை மட்டுமே ஓன் செய்து வைத்திருங்கள். பெண்களுக்கு இந்த செல்போன் பேச்சு, குறிப்பாக அந்த நேரத்தில் அரட்டை அடிப்பது அறவே பிடிக்காது.

அவசரக் குடுக்கைகளை பெண்களுக்கு கண்டிப்பாக பிடிக்காது. எதிலும் அவசரம் காட்டாமல் நிதானமாக அணுகுங்கள். உடல் ரீதியான தழுவல்களும் சரி, உறவும் சரி, மென்மையாக, அதேசமயம், சீரான வேகத்தில் இருக்குமாறு பார்த்துக் கொள்வது அவசியம்.

பெரும்பாலான பெண்களுக்கு ஐஸ் வைப்பது, கெஞ்சுவது, தாஜா செய்வது பிடிக்காது. நேர்மையாக, நேருக்கு நேராக கேட்பதும், தெளிவாகப் பேசுவதுந்தான் பல பெண்களுக்குப் பிடித்திருக்கிறது. அதைத்தான் அவர்கள் ஆண்களிடம் பொதுவாக எதிர்பார்க்கிறார்கள். எப்போது ஒருவர் தாஜா செய்கிறாரோ, ஐஸ் வைக்கிறாரோ அவர் நிச்சயம் வெளிப்படையான ஆள் இல்லை என்று பெண்கள் கருதத் தொடங்கி விடுகிறார்களாம். எனவே உறவுக்காக கெஞ்சுவதை தவிருங்கள். மாறாக, வெளிப்படையாக பேசுங்கள். இன்று வேண்டாம், இன்னொரு நாள் பார்ப்போம் என்று உங்கள் துணை கூறினால் உடனே முகம் சுளிக்காதீர்கள். இதன்மூலம் உங்கள் துணையின் மனதை நீங்கள் முழுமையாக ஆக்கிரமிக்க முடியும்.

பாலியல் உறவின்போது பெண்கள் முழுமை அடைய நிறைய நேரம் பிடிக்கும். ஆண்களுக்கோ சில நிமிடங்களில் எல்லாம் நெருங்கி வந்து முடிந்தும் விடும். அதை பெரும்பாலான பெண்கள் விரும்புவதில்லை. முத்தமிடுவது, தொடுதல், உரசுதல், தழுவுதல் உள்ளிட்ட சின்னச் சின்ன விஷயங்களை பெண்கள் பெரிதும் விரும்புவார்கள். ஆண்கள் இதையெல்லாம் செய்வதற்கு பொறுமை இழக்கக் கூடாது.


மேலும் ஒரு பெண்ணுக்கு உச்ச நிலை ஏற்பட 2 நிமிடங்களுக்கும் மேலாகும். எனவே எந்த அளவுக்கு பெண்ணின் உணர்வுகளை தூண்ட முடியுமோ, அந்த அளவுக்கு இன்பத்தில் பூர்த்தி நிலை கிடைக்க வாய்ப்புண்டு. மாறாக அதிவேகமாக உறவுக்குப் போக முற்பட்டால் இன்பத்திற்குப் பதில் கசப்புதான் வந்து சேரும்.

முத்தமிடுவதில் சொதப்புவதை தவிருங்கள். எந்த மாதிரியான முத்தம் உங்களது துணைக்குப் பிடிக்கும் என்பதை அறிந்து அதை வாரிக் கொடுங்கள். அது உங்கள் மீதான சர்ப்பை அதிகரிக்க உதவும். முத்தம் கொடுப்பதற்கு முன்பு வாயை சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள்.

உறவின்போது நடைபெறும் முன் விளையாட்டுக்களில் முக்கியமான ஒரு விடயம் உணர்வுகளைத் தூண்டும் பேச்சு. இது இருபாலாருக்கும் முக்கியமானது. இருவரும் பேசுவதற்கு நிறைய விஷயங்களை யோசித்து வைத்துக் கொள்ள வேண்டும். அந்த சமயத்தில் சித்தாந்தம் பேசுவதை விட்டு விட்டு செக்ஸியாக பேசுவதற்கு முயலுங்கள்.

இப்படி சின்னச் சின்னதாக நிறைய உள்ளன. இவற்றைப் புரிந்து கொண்டு, அறிந்து கொண்டு தெளிந்து செயற்படும் ஆண்கள் மீது பெண்களுக்குக் கொள்ளைப் பிரியம் உண்டாகுமாம்.

# முத்தம்



உலகின் மிகப்பழமையான காதல் பாடல் நான்காயிரம் வருடங்களுக்கு முன்பே யூப்ரடிஸ் - டைகிரீஸ் நதிகளுக்கிடையே தோன்றி விட்டது.

ஒவ்வொரு வலென்டைன் தினத்தின் போதும், இத்தாலியின் வெரோனா நகரில் ஷேக்ஸ்பியரின் 'ரோமியோ ஜூலியட்' நாடகம் நிகழ்த்தப்படும். அப்போதெல்லாம் ஜூலியட்டுக்கு ஆயிரத்துக்கும் அதிகமான காதல் கடிதங்கள் வரும்.

கொரியாவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 'லவ் டிடெக்டர்' என்ற வேடிக்கைக் கருவி காதல் உரையாடல்களின் நம்பகத் தன்மையையும் காதலின் அளவையும் குரல் ஆய்வு மூலம் வெளிப்படுத்துகிறது.

ஒருவருக்கு காதல் பிறந்துவிட்டால் மனதிலும் உடலிலும் பல மாற்றங்கள் நிகழ்கின்றன. மனதையும் உடலையும் அமைதியாக்குவதோடு, நரம்பு வளர்ச்சிக் காரணிகளை சில காலத்துக்கு அதிகரிக்கும். இதனால் காதலர்களின் நினைவாற்றல் அதிகமாகிறது.

65 சதவிகிதத்தினர் தங்கள் தலையை வலப்பக்கமாக சாய்த்து முத்தமிடவே விரும்புகிறார்கள். காலை நேரத்தில் முத்தமிட்டுக் கொள்ளும் தம்பதிகளின் ஆயுட்காலம் ஐந்து ஆண்டுகள் அதிகரிக்கும் என்கிறது ஓர் ஆய்வு.

# பாலுறவு ஆசை தேவையா?




திருமணமாகி தம்பதிகளாக வாழும் இளைஞர்களும், இளம் பெண்களும் கூட இப்போது பாலுறவு ஆசைக் குறைபாட்டால் பாதிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். குறிப்பிட்ட கால இடைவெளியில் அடிக்கடி ஒருமுறை கூட செக்ஸ் வைத்துக்கொள்ளவேண்டும் என்ற ஆசை இல்லாமல் போவதையும் அல்லது அந்த ஆசை குறைந்து போவதையும் பாலுறவு ஆசைக் குறைபாடு என்கிறோம். ஆசை இருந்தாலும் பாலுறவு கொள்ளும் திறன் குறைந்துபோனால் அதனை பாலுறவு திறன் குறைபாடு என்கிறோம்.

மன இறுக்கத்தில் இருப்பவர்களுக்கும், நோய்வாய்ப்பட்டிருப்பவர்களுக்கும் திறன் குறையும். பெண்களுக்கு கர்ப்ப காலத்தில் ஆசை குறைகிறது. சிலருக்கு மாதவிடாய் காலத்தில் ஆசை குறையும். குறிப்பிட்ட சில நோய்களுக்கு சாப்பிடும் மருந்துகளாலும் தற்காலிக குறைபாடு ஏற்படுவதுண்டு. பாலுறவில் விருப்பம் இல்லாமல் இருக்கும் ஆண்களில் 65 சதவிதம் பேர், தங்களுக்கு ஏற்பட்ட அலைச்சலால் ஆசை குறைகிறது என்று குறிப்பிடுகிறார்கள். நீரிழிவு நோயாளிகளைப் பொறுத்தவரையில், நாட்பட்ட நிலையில் அதிக களைப்பு, மயக்கம், படபடப்பு போன்றவைகள் தொடர்ந்து கொண்டிருந்தால் அவர்களால் செக்சில் நாட்டம் செலுத்த முடிவதில்லை. உறவின்போது அவர்களுக்கு தானாக சிறுநீர் கசிவதும் புதுவித நெருக்கடியை உருவாக்கும். அவர்களுக்கு இரத்த ஓட்டம் போதிய அளவில் இருக்காது. சீராகவும் இருக்காது. அதனால் அவர்களது மூளை தேவையான இரசாயன மாற்றங்களை ஏற்படுத்தாது.

பாலுணர்வு உறுப்புகளும் நரம்பு நோய் இருப்பவர்களுக்கு வேகமாக செயல்படுவது வயதிற்கும் பாலுணர்வு செயல்பாடுகளுக்கும் தொடர்பு இருக்கிறது. மனிதனின் ஆயுள் முன்பைவிட இப்போது மருத்துவத்தால் அதிகரித்திருக்கிறது என்றாலும், மனிதர்கள் ஆயுளின் பெரும்பகுதியை நோயுடன் கழிக்கும் நிலை நிலவுகிறது. சமீபத்திய புள்ளிவிவரப்படி பெண்களின் சராசரி வயது ஆண்களைவிட ஆறு ஆண்டுகள் அதிகரித்திருக்கிறது. ஆனாலும் நம் நாட்டு நடுத்தரவயது பெண்கள் மாதவிலக்கு முற்றுப்பெற ஆரம்பித்ததும், தாம்பத்திய உறவுகளும் ஒரு முற்றுப்புள்ளி விழுந்துவிடுவதாக நினைக்கிறார்கள். இது தவறான எண்ணமாகும். உண்மையில் நடுத்தர வயதைக் கடந்தாலும் பெண்களுக்கு தாம்பத்திய உறவில் நாட்டம் இருக்கவே செய்யும்.

அவர்களது துணைவர்கள் தான் வயது மூப்பின் காரணமாக தாம்பத்தியத் திறன் குறைபவர்களாகிறார்கள். தற்போது எடுக்கப்பட்ட ஆய்வுப்படி ஐம்பது வயதுக்கு உட்பட்ட திருமணமான ஆண்களில் 98 சதவிதம் பேருக்கு செக்ஸ் செயல்பாட்டில் ஆர்வம் போதுமான அளவு இருக்கவே செய்கிறது. இந்த ஆர்வம் 50 வயதைக் கடப்பதில் இருந்து படிப்படியாக குறைய ஆரம்பிக்கிறது. 50 வயதுக்கு உட்பட்ட பெண்களில் 93 சதவிதம் பேருக்குத்தான் செக்ஸ் ஆர்வம் உள்ளது.


50 வயதைக் கடந்த பின்பு ஆண்களைவிட வேகமாக அவர்கள் ஆசை குறைந்து விடுவதாகவே தற்போதைய புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. 50 முதல் 60 வயதில் பெண்களின் செக்ஸ் ஆர்வத்தில் பெரும் மாற்றங்கள் நிகழ்கின்றன. அப்போது கிட்டத்தட்ட 50 சதவிதம் பேருக்கு நாட்டம் குறைந்துவிடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழ்ச்சி என்பது நீதி தராசைக் கூட சில சமயம் அசைத்து விடும்.

பேகன்

## வாரம் ஒரு திருக்குறள்



**ஊக்கம் உடைமை**

**வெள்ளத் தனைய மலர் நீட்டம் மாந்தர்தம்**
**உள்ளத் தனையது உயர்வு.**

நீர்ப்பூக்களின் தாளின் நீளம் அவை நின்ற நீரின் அளவினவாகும்; மக்களின் ஊக்கத்தின் அளவினதாகும் வாழ்க்கையின் உயர்வு

குறள்:595



# பேராசையால் வந்த வினை

நெடுங்குளம் என்ற நாட்டில் அமலன், ராஜன், உதயன் என்ற 3 பேர், சிறுவயது முதலே இணை பிரியாத நண்பர்களாக இருந்தனர்.

அவர்கள் ஒருநாள், பொருள் தேடி வேறு நாட்டிற்கு பயணம் மேற்கொண்டனர்.

வழியில் ஒரு முதியவரிடம், செல்லும் இடம் பற்றி ஆலோசனை கேட்டனர்.

"இன்னும் கொஞ்ச தூரம் பயணம் மேற்கொண்டால், மூன்று பாதைகள் பிரியும். அதில் ஒரு பாதையில் சென்றால், சுமக்க முடியாத அளவிற்கு செல்வம் கிடைக்கும்" என்று சொன்னார்.

திமேரென்று அமலன், ராஜன் மனதில் பேராசை குடி வந்தது.

"டேய், நான் ஒரு பாதையில் தனியாக செல்கிறேன். நீங்கள் யாரும் என்னுடன் வர வேண்டாம்" என்றான், அமலன். அதற்கு ராஜன் மௌனமானான்.

ஆனால் உதயன், "டேய் நாம் இத்தனை நாட்கள் எவ்வளவு ஒற்றுமையாய் இருந்தோம். வாங்கடா, நாம் மூன்று பேரும் ஒரே பாதையில் செல்லலாம்" என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தான்.

ஆனால், எதையும் கேட்காமல் அமலன் தன் பயணத்தை மேற்கொண்டான். ராஜனும், அமலனைப் போலவே தனிபாதையை தேர்ந்தெடுத்து நடந்தான்.

உதயன் நண்பர்களை பிரிந்த வேதனையில் மீதமுள்ள பாதையில் நடக்க ஆரம்பித்தான்.

அமலன் வெகுதூரம் சென்றான். சூரிய ஒளி பிரகாசித்தது.

தூரத்தில் ஏதோ ஒன்று பளபளவென்று மின்னியது. அருகில் சென்று பார்த்தான். அது ஒரு பெரிய தங்கக் கட்டி. அவன் ஆவலுடன் தூக்கிப் பார்த்தான். அவனால, தூக்க முடியவில்லை. மூன்று பேர் சேர்ந்து தூக்கினால் தான் தூக்க முடியும். நண்பர்களும், சேர்ந்து வந்திருந்தால், தூக்கிக் கொண்டு போயிருக்கலாமே என்று எண்ணி வருந்தினான்.

ராஜன், வெகுதூரம் நடந்ததும், அவனுக்கு தாகம் எடுத்தது. அப்போது தூரத்தில் ஒரு கிணறு இருந்தது. அதை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

அந்த கிணற்றை அடைந்ததும், அதில் நீர் உள்ளதா என்று எட்டிப் பார்த்தான்.

என்ன ஆச்சரியம்! அதன் உள்ளே வைரங்களும், வைடூரியங்களும் ஜொலித்துக் கொண்டிருந்தன. ஆவலில் உள்ளே குதித்து தான் அணிந்திருந்த ஆடையில், முடிந்த அளவு அள்ளி மூட்டையாகக் கட்டினான்.

ஆனால், அவனால், அந்த மூட்டையை கிணற்றை விட்டு மேலே தூக்கி வர முடியவில்லை. தன் நண்பர்களும் வந்திருந்தால், கிணற்றை விட்டு மேலே தூக்கி வந்திருக்கலாமே என்று எண்ணி, வேதனைப்பட்டான்.

உதயன் வெகுதூரம் சென்றதும், ஒரு பெட்டி அவன் கண்ணில் பட்டது. அதைத் திறந்து பார்த்தான். உள்ளே தங்க நாணயங்கள் இருந்தன. பேராசை கொள்ளாத உதயன், பெட்டியை எடுத்துக் கொண்டு, தன் நண்பர்களைத் தேடிப் புறப்பட்டான்.

## பாப்பா முரசு சிறுகதை

**கதை சொல்லும் நீதி:**
**எப்பொழுதும், பேராசைப்பட்டால் அது துன்பத்தைத் தான் கொண்டு வந்து சேர்க்கும். உண்மையான நட்பு என்பது சந்தோஷப்படும் நேரம் மட்டும் உடன் இருப்பது அல்ல. நண்பன் துன்பப்படும் போதும், அவனுடன் சேர்ந்து இருக்க வேண்டும்.**

# பாப்பா முரசு



**நல்ல நல்ல நூல்களை**
**நாடிச் சென்று படித்திடுவாய்**
**தினமும் படிக்கும் பழக்கத்தை**
**நீயும் என்றும் கடைப்பிடிப்பாய்!**

**நுட்பமான கருத்து பல**
**நூல்கள் நமக்கு சொல்லிடுமே**
**நெடிய நட்பை தந்திடுமே**
**நேசம் தன்னை வளர்த்திடுமே!**

**நைச்சியம் பேசித் திரிவோரை**
**நொடியில் அறிந்திட உதவிடுமே**
**நோக்கம் உயரச் செய்வதால்**
**நேர்ந்து நூல்கள் படித்திடுவாய்!**

## நூல்கள் படி

## தகவல் களஞ்சியம்

* இந்தியாவின் விடிவெள்ளி என்று அழைக்கப்படுபவர் – இராஜாராம் மோகன்ராய்

* ஈகின் என்ற நட்சத்திரம் சூரியனை விட 6 ஆயிரம் மடங்கு பிரகாசமானது.

* மனித உடல் 60 சதவீதம் நீரால் ஆனது.

* காகிதம் கண்டுபிடிப்பதற்கு முன்பு, பட்டங்கள் பட்டுத் துணியில் செய்யப்பட்டன.

* வங்காள விரிகுடாவின் நீளம், 2 ஆயிரத்து 250 மைல்.


* உலகிலேயே அதிக தூரம் நடந்து சாதனை படைத்தவர் ஒருவர் இருக்கிறார். இவர் மொரீசஸ் நாட்டைச் சேர்ந்தவர். இவர் 1.35 இலட்சம் கிலோமீற்றர் நடந்து இருக்கிறார்.

* சிக்காக்கோவில் 1972இல் ஆள் இல்லாமல் பலூன் ஒன்று பறந்தது. இது ஒரு இலட்சத்து 70 ஆயிரம் அடி உயரத்தில் பறந்தது. அதன்பின்னர், எந்த ஒரு பலூனும் இவ்வளவு உயரத்தில் பறக்கவில்லையாம்.


* நோர்வே நாட்டில் வீடுகளின் கூரைகளில் புற்களை பயிரிடுகின்றனர்.

* உடலில் உள்ள பல நோய்களையும் தண்ணீர் அருந்துவதன் மூலம் குணப்படுத்த முடியும் என்று ஜப்பான் மருத்துவர்கள் கண்டறிந்துள்ளனர். இந்த சிகிச்சை முறைக்கு 'ஹீமட்டோபய்லைஸ்' என்று பெயர்.

## இலக்க வண்ணத்துப்பூச்சி




கோஸ்டாரிகா நாட்டில் உள்ள வண்ணத்துப்பூச்சிகளின் பெயர், நம்பர் வண்ணத்துப் பூச்சிகள். இவற்றின் ஒவ்வொரு பக்கத்திலும் உள்ள இரண்டாவது சிறகின் அடிப்பாகத்தில் 88 என்ற எண் தெளிவாக தெரிகிறது.



## அதிசயப் பாலம்


அமெரிக்காவில் கொலராடோ என்ற இடத்தில் அர்கன்சாஸ் நதி ஒரு பயங்கர பள்ளத்தாக்கில் ஓடுகிறது. அந்தப் பள்ளத்தைக் கடக்க 1929இல் ஒரு பாலம் கட்டினார்கள். நீர் மட்டத்தில் இருந்து உயரமாக உள்ள பாலம் இதுதான். நீர் மட்டத்தில் இருந்து பாலம் 1053 அடி உயரத்தில் உள்ளது. அப்போதைய தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டே இந்த பாலத்தை 6 மாதங்களில் கட்டி முடித்துவிட்டனர்.



## பொருத்துங்கள்

இங்கு குழம்பியிருக்கும் உடற்பாகங்களைப் பொருத்தி முழுமைப்படுத்துங்கள்

## வீடு கட்டும் எறும்புகள்




எறும்புகளில் பல வகைகள் உண்டு. அவற்றில், சுமார் ஆயிரம் வகைகள் உண்டு. பாலைவனத்தில் கூட எறும்புகள் வாழ்கின்றன. கடற்கரையில், மலைச்சாரலில், காட்டில் என்று எறும்புகள் வாழ ஏகப்பட்ட இடங்கள் இருக்கின்றது. என்றாலும், பெரியளவில் புற்றுகளை அமைக்கும் எறும்புகள் எதுவென்று தெரியுமா? டெர்மைட்ஸ் என்ற எறும்பு தான் சுமார் 20 அடி உயரம் வரை புற்றுகளை உருவாக்குகிறது. இவை ஆபிரிக்கா, வட அமெரிக்காவில் உள்ள காடுகளில் தான் சுதந்திரமாக சுற்றிக்கொண்டு இருக்கின்றது.



## பதற்றம் வருவது ஏன்?

நமக்கு சில நேரங்களில் திடீரென்று பதற்றம் உண்டாகும். இதற்கு என்ன காரணம் என்று பார்ப்போம். நம் உடலில் உணர்வுகளை மூளைக்குத் தெரியப் படுத்துவது நரம்புகள். சில நேரங்களில் திடீரென்று எதிர்பாராத வகையில் விபத்து நேர்ந்தால் பதற்றம் உண்டாகும். அப்போது நம்மைத் தற்காத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது. அந்த சூழ்நிலையில் நம்மை ஒரு சில வினாடிகளில் சுதாரிக்கச் செய்யும் ஹோர்மோன், அட்ரினலின். இதை நம் 'உடலின் செய்தியாளர்' என்றும் அழைப்பர். சிலருக்கு நாயைக் கண்டால் பயம் வரும். அப்போது அதனிடம் இருந்து தப்பிக்க ஓடுவர். இந்த வேலையைச் செய்வது அட்ரினலின் தான். மூளையில் உள்ள மெடுல்லா பகுதியில் அட்ரினலின் சுரக்கிறது. இதை பிட்யூட்டரி சுரப்பி கண்காணிக்கிறது.




போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் நிறுவனத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபால் அட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் தீட்டி அனுப்பும் பத்துப்பேருக்கு பரிசுகள் காத்திருக்கின்றன. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 11.03.2012

**வர்ணம் தீட்டும் போட்டி இல.931**
**தினமுரசு வாரமலர்**
த.பெ.இல.1772, கொழும்பு. த.பெ.இல.107, யாழ்ப்பாணம்.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 929**

பரிசுக்குரியவர்: கார்த்திகேயன், பெரியகுளம் மகா வித்தியாலயம்.

ஆறுதல் பரிசுக்குரியவர்கள்

01. ச.கோபிகன், கொக்குவில் பாலர்பாடசாலை.
02. எஸ்.துபரசன், ஆனைக்கோட்டை.
03. அகபிரத்தன், அரியாலை, யாழ்ப்பாணம்.
04. சிவதாங்கி, கரவெட்டி.
07. யோ.சிவரஞ்சினி, சரசாலைதெற்கு, சாவகச்சேரி.
08. கு.வித்தியாதரன், முள்ளியவளை, முல்லைத்தீவு.
09. க. அபிஷ்ணு, பிரதானவீதி, திருகோணமலை.
10. எஸ்.கஜானனா, தாரக்கதோர் வீதி, மன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூக்கமின்மையின் முக்கிய அறிகுறி!



மற்றைய காலங்களை விட கோடை காலத்தில் தூக்கம் குறைந்தால் அதிக பாதிப்புகள் நேரிடும். கடுமையான வெயிலின் கூடிய நீர் இழப்பால் கண் எரிச்சல், நாக்கு வறட்சி, உடல் சோர்வு போன்றவை அதிகமாக இருக்கும். கோடையில் மனநலம் பாதிக்கப்படுவதும் அதிகம் என்கின்றன ஆய்வுகள்.

உடலும், உள்ளமும் தன்னை புதுப்பித்துக் கொள்ள நிம்மதியான உறக்கம் அவசியம். பொதுவாக எட்டு மணிநேர தூக்கம் பரிந்துரைக்கப்படுகிறது. தொடர்ந்து சில நாட்கள் சரியாக தூக்கம் இல்லை என்றால் எரிச்சல், சிடுசிடுப்பு, கவனக்குறைவு போன்றவை ஏற்பட்டு அன்றாட வாழ்வில் உறவுகளிலும், பணியிலும் சிக்கல்களை ஏற்படுத்தலாம். தூக்கமின்மை மனநோய்களின் முக்கிய அறிகுறியாகவும் உள்ளது.

தூக்கமின்மை ஏன்?

அன்றாட வாழ்வில் ஏற்படும் நெருக்கங்கள் கூட நல்ல உறக்கத்தைத் தடுக்கலாம். புதியதொரு சூழ்நிலைக்கு தயாராகும்போது, உறவுகளில் ஏற்படும் தற்காலிக சிக்கல்கள், பயம், கவலை, கோபம் போன்ற எதிர் உணர்ச்சிகளுக்கு ஆட்படும்போது அன்றைய தூக்கம் பாதிக்கப்படலாம். இவை தற்காலிகமானவை. சில நாட்களில் தானாகவே சரியாகிவிடும். ஆனால், தொடர்ந்து தூக்கமின்மை மனம் தீவிரமாக பாதிக்கப்பட்டுள்ளதை தெரிவிக்கிறது. தீர்க்க முடியாத பிரச்சினைகள் அல்லது மூளையில் ஏற்பட்டுள்ள வேதியல் மாற்றம் காரணமாக இருக்கலாம். இவர்களுக்கு மனநல மருத்துவத்தின் உதவி தேவை. தயங்காமல் நல்ல மருத்துவரை சந்திப்பது தீர்வுக்கு வழிவகுக்கும்.

அனைத்து சத்துக்களும் சரிவிகிதமாக கொண்ட உணவு-களை சாப்பிடுங்கள். காய்கறிகளும், பழங்களும், கீரைகளும் அதி-களவாக இருக்கட்டும்.

முட்டைகோஸ், காலிபிளவர், வெங்காயம் போன்ற வாயுவை உற்பத்தி செய்யும் உணவுகளையும், அசைவ உணவுகளையும் தவிர்க்கவும். நிறைய தண்ணீர் அருந்துங்கள். இரவு உணவை எட்டு மணிக்குள்ளாக சாப்பிடுவது நல்லது. போதுமான எளிய உடற்பயிற்சிகளை தினமும் செய்யுங்கள். யோகா, மூச்சுப்பயிற்சி போன்றவை நல்லது.

வீட்டில் உள்ளவர்களிடையே மனம் விட்டு பேசுங்கள். வீட்டில் பிரச்சினை என்றால் நண்பர்களிடம் மனம் திறந்து பேசுங்கள். படுக்கையறை சுத்தமாக இருக்கட்டும். மாலைநேரத்திற்கு பிறகு தேநீர், கோப்பி, காபனீரொக்சைட் கலந்த குளிர்பானங்களை தவிர்க்கவும். நகைச்சுவை படிக்கும், டி.வி.சேனல்கள் மனதை லேசாக்கும். வெதுவெதுப்பான குளியல் நல்லது.

இரவில் ஒரு டம்ளர் பால் தூக்கத்திற்கு உதவும். நேர்மறை சிந்தனைகளை கொண்டிருங்கள். ஏற்கெனவே நீங்கள் சந்தித்த பல பிரச்சினைகளிலும் நீங்கள் நினைத்த மாதிரியே நடக்கவில்லை. என்றாலும் தொடர்ந்து பிரச்சினை இருந்தால் மனநல ஆலோசகரையோ, மருத்துவரையோ தயக்கமின்றி அணுகவும்.






**எல்லோருக்கும் – அவள் பயங்கரக் கொள்ளைக்காரி, படு பயங்கரக் கொலைகாரி என்று தான் தெரியும். அவள் அதுவும் ஒரு பெண் – ஏன் அப்படி மாறினாள் என்று எத்தனை பேருக்குத் தெரியும்? பூ ஒன்று புயலான கதை. ஏற்கனவே முரசில் புரட்டப்பட்ட இப்பக்கங்கள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் புரட்டப்படுகின்றன.**

"நீங்கள் மட்டும் தானே?" என்றான். பூலானுக்குச் சிரிப்பாக இருந்தது.

"இல்லையப்பா. இவரும் இன்னொரு வரும் என்கூட வரு வார்கள். உனக்கு என்ன தேவையானாலும் கேள்!" இறுதி வாக்கியத்தை அழுத்திச் சொல்லி சட்டென்று பூலான் கண் சிமிட்டினாள். கான்பூருக்கு மட்டுமல்ல, இந்தியாவின் எந்த மூலைக்குக் கூப்பிட்டாலும் போகத் தயாராக இருந்தான்.

"வருகிறேன்!"

"வா!" கிறக்கமாய்ச் சிரித்தாள். பெண் என்பதால் இப்படியும் சில சௌகரியங்கள் இருக்கத் தான் செய்கின்றன என்று நினைத்தாள்.

மல்லாவையும், ஏற்றிக் கொண்டு கான்பூருக்குப் புறப்பட்டார்கள்.

தொழிற்சாலைகளும், அந்த தொழிற்சாலைகள் விடும் புகையாலும் தூசடைந்த நகரம் கான்பூர். எப்போதுமே வீதிகளில் மசமசவென்று சனநெரிசல்.

சில்காலம் தலை-மறைவாக இருக்க கான்பூர்தான் உபயோ-கம். யாரும் கண்டுபிடிக்க முடியாது. மல்லாதான் கான்பூரை தலைமறைவாக இருக்கத் தகுந்த இடமாகத் தெரிவு செய்திருந்தான்.

கான்பூரில் இறங்கியதும் உழவு இயந்திரக்காரப் பையனுக்கு பணம் கொடுத் தாள் பூலான். அவன் கண்களில் ஏமாற்றம் அப்பட்டமாகத் தெரிந்தது. பூலானுக்குப் பாவமாக இருந்தது.

கான்பூரில் ஒரு சிறிய அறையை வாடகைக்குப் பிடித்துக்கொடுத்தார் ராம்லால்.

நீண்டகாலத்தின் பின்னர் மக்கள் செறிந்த நகருக்குள் வாழ்வது மல்லாவுக்கு ஒரு மாற்றமாக இருந்தது. பூலானுக்கு மல்லாவுடன் குடித்தனம் நடத்துவது சந்தோசமாக இருந்தது.

காய்கறிகளைப் பேரம்பேசி வாங்குவதில் பூலானுக்குத் தனி உற்சாகம். பூலானுக்கு முதன்முதலாகப் பல சிநேகிதிகள் கிடைத்த தும் கான்பூரில்தான்.

மல்லாவும், பூலானும் விபத்தில் பலியானதா கச் செய்தி வெளியிட்ட அதே பத்திரிகைகள், மல்லாவும், பூலானும் உயிரோடிருப்பதாகப் பின்னர் செய்திகள் போட்டதோடு, சம்பல்பள்ளத்தாக்கில் நடைபெற்ற சில கொள்ளைகளோடும் அவர்கள் இருவரையும் சம்பந்தப்படுத்திச் செய்திகள் வெளியிட்டன.



பூலானைப் பற்றி பத்திரிகைகள் தங்கள் கற்பனையையும் சேர்த்து செய்திகள் வெளியிடத் தொடங்கின. அதனால் பூலானின் பெயர் வெகு பிரபலமானது.

"ஏன் இப்படி எழுது கிறார்கள்? நாங்கள் செய்யாததை எல்லாம் எங்கள் தலையில் கட்டுகி றார்களே?" என்று பூலான் கேட்டாள். மல்லாவிடம் இருந்து சிரிப்புத்தான் பதிலாக வரும்.

பூலான் தன் சிநேகிதிகளு டன் அரட்டை அடிப்பதில் பொழுதைப் போக்குவாள். ஒருநாள் பூலானின் சிநேகி திகள் பூலானைப் பற்றிய பேச்சை எடுத்தார்கள். தன்னை யாரென்று தெரி யாமல் அவர்கள் தன் முன்னாலேயே தன்னைப் பற்றிப் பேசுவதைக் கேட்க பூலானுக்குச் சிரிப்புச் சிரிப்பாக வந்தது.

ஒரு நாள் பூலானின் சிநேகிதி ஒருத்தி பூலா னிடம் கேட்டாள். "பூலான் எப்படி இருப்பாள்?"

பூலான் சிரித்துக் கொண்டே சொன்னாள்.

"என்னைப் போலத் தான் இருப்பாள்" அவள் சொன்னதைக் கேட்ட தும் சிநேகிதிகள் விழுந்து விழுந்து சிரித்தார்கள். கண்களில் நீர் வரும் வரைக்கும் சிரித்தார்கள்.

"நீ, நீ... பூலான் போல இருக்கிறாயா?" தொடர்ந்து சிரித்தார்கள்.

அவர்களின் அறி யாமையை நினைத்து பூலானும் சிரிக்க, "பார்த்தாயா உனக்கே சிரிப்பாக இருக்கிறது. பூலானாம்.. இவள் மாதிரியாம்... என் னம்தான்!"

"ஏன் பூலானுக்கு கொம்பு முளைத்திருக்குமா? என்றாள் பூலான். சிரிப்பின் ஊடே.

"கொம்புதான். எங்களுக்கும் இருக்கிறதே!" என்று குலுக்கினார்கள்.

மல்லாவுடன் சீட்டாட வருவான் பக்கத்து வீட்டு இளைஞன். அவனும் பூலான்-மல்லா ஆகி யோரைப் பற்றிப் பேசுவான்.

"கொள்ளைக்காரர்களைப் பற்றி உனக்கென்ன பேச்சு? அவர்கள் கெட்டவர்கள்." என்பான் மல்லா.

"அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். பூலான் தேவியும், மல்லாவும் ரொம்ப நல்லவர்களாம், தெரியுமா?"

"உனக்கெப்படித் தெரியும்?"

"ஒரு பொம்பிளை துப்பாக்கியை ஏந்தத் துணி கிறாள் என்றால் அவள் எத்தனை துயரங்களைச் சந்தித்திருக்க வேண்டும் தெரியுமா? எனக்கென்னவோ பூலான் ஒரு தேவதைக்கு சமமானவள் என்றுதான் தோன்றுகிறது. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்... அக்கா?"

"அவள் என்ன நினைப்பது. மிகவும் சந்தோஷப்படுவாள்."

"ஏன்?"

"அவள்தானே நீ சொல்லும் பூலான்தேவி." என்றான் சீட்டுக்கட்டை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்த மல்லா.

பையன் இடியாகச் சிரித்தான்.

"ஏன்டா சிரிக்கிறாய்?"

"இந்த அக்காவை பூலான்தேவியாக கற்பனை செய்து பார்த்தேன்! சிரிப்பை அடக்க முடியவில்லைப் போங்கள்.

"எப்படி கற்பனை செய்தாய்?"

"பூலானைப் போல கையில் துப்பாக்கியுடன் குதிரையில் சவாரி செய்தபடி, குறுக்கே யார் வந்தாலும் டுமீல் டுமீல் என்று சுட்டபடி, முகத்தில் காளிமாதிரி கனல்தெறிக்கும் தோற்றத்துடன்.. மனதும் கற்பனைக்கே ரையக்கில்லை, பசுமாதிரி அப்பாவியாக இருக்கிறார்கள்.. இவரைப்போய்..

(திருப்பங்கள் தொடரும்...)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வதந்திக்கு கிடைத்தது விளக்கம்

சூர்யா ஜோடியாக மீண்டும் ஸ்ருதிஹாசன் நடிக்கிறாரா என்றதற்கு பதில் அளித்தார். இதுபற்றி அவர் அளித்த பேட்டி: மங்காத்தா வெற்றியை தொடர்ந்து மீண்டும் அஜீத் படம் இயக்குகிறீர்களா என்கிறார்கள். மீண்டும் இயக்குவேன். ஆனால் அதற்கு இன்னும் நேரம் இருக்கிறது, என்று கூறும் வெங்கட்பிரபு, தொடர்ந்தும் கூறுகையில்,

தற்போது சூர்யா நடிக்கும் படத்தை இயக்குகிறேன். ரவி தேஜாவும் நடிக்கிறார். இருவரும் வெவ்வேறு படங்களில் நடித்து வருகின்றனர். அப்படங்களை முடித்தவுடன் என் படத்தில் நடிப்பார்கள். இப்படத்தின் திரைக்கதை முடிந்துவிட்டது. இது அக்ஷன் - த்ரில்லர் படம். அதே நேரம், ஹீரோக்கள் காமெடி காட்சிகளிலும் நடிக்க உள்ளனர். இப்படத்தில் முன்னணி நடிகை ஒருவர் நடிக்க உள்ளார். 7ஆம் அறிவு படத்துக்கு பிறகு இப்படத்திலும் சூர்யா ஜோடியாக ஸ்ருதிஹாசன் நடிக்கிறாரா என்கிறார்கள். அது வதந்திதான். இவ்வாறு வெங்கட்பிரபு கூறினார்.

## உதட்டைக் கடித்தார் நாயகி

ஆயிரம் முத்தங்களுடன் தேன்மொழி படத்தில் புதுமுக கதாநாயகர்களாக வெங்கடேஷ், அக்ஷரா அறிமுகமாகிறார்கள். இப்படத்திற்கு முத்தக்காட்சி தேவைப்படுவதால் நாயகன் வெங்கடேஷ், நாயகி அக்ஷரா உதட்டுடன் உதடு சேர்த்து முத்தங்களை பரிமாறிக்கொண்டனர். இக்காட்சி படமாக்கப்படும்போது அக்ஷரா முத்தம் கொடுக்க முதலில் மறுத்தார். பின்னர் வெங்கடேஷ் முத்தம் கொடுக்க ஆரம்பித்ததும், உணர்ச்சிவசப்பட்டு உதட்டை கடித்துவிடுவதுபோல் நடித்து காட்சியை முடித்தார்.

படத்திற்கு கதை, வசனம், திரைக் கதை அனைத்தையும் இயக்குனர் ஷண்முகராஜ் எழுதியிருக்கிறார். தாஜ்னூர் இசையமைத்து வருகிறார். 3 தேசிய விருகளை பெற்ற 'தென்மேற்கு பருவக் காற்று' மற்றும் 'வர்ணம்' ஆகிய படங்களை வெளியிட்ட மைக்கல் ராயப்பன் வளியிடுகிறார்.



## புலம்புகிறார் பத்மபிரியா!

சினிமாவுக்கு வரும் முன்பு மல்ட்டி நேஷனல் கம்பெனியில் வேலை பார்த்தேன். கை நிறையச் சம்பளம். அங்கேயே வேலை பார்த்திருந்தால், இத்தனை நேரம் நல்ல இடத்தில் மாப்பிள்ளை கிடைத்து திருமணமாகி செட்டில் ஆகியிருப்பேன். சினிமாவுக்கு வந்த பிறகு, வெளியுலக தொடர்பு குறைந்துவிட்டது. பெரும்பாலான நேரம் ஷூட்டிங் லொக்கேஷன்களிலும் மற்ற நேரம் ஓட்டல் அறைகளிலுமே கழிகிறது. சினிமாவை பொருத்தவரை மம்முட்டி, மோகன்லால், திலிப், பிருத்விராஜ், ஜெயராம் போன்றவர்களுடன் நடிக்கிறேன். எல்லோருமே திருமணம் ஆனவர்கள். சினிமாவில் எனக்கு பொருத்தமான மாப்பிள்ளை யாரும் இல்லை. பொருளாதார சுதந்திரம் மட்டுமே எல்லா சுதந்திரத்தையும், முழு மகிழ்ச்சியையும் கொடுத்துவிடாது. வேலைக்கு போகும், பெண்கள் வீட்டுக்கு வந்ததும் தினசரி வேலைகளை கவனிக்க வேண்டி உள்ளது. இதில் கொடுமை என்னவென்றால் அந்த பெண்ணுக்கு இரவில்தான் ஜிம்முக்கு சென்று உடற்பயிற்சி செய்ய நேரம் கிடைக்கும். எந்த ஆணும் குண்டான மனைவியை பார்ட்டிகளுக்கு அழைத்து செல்ல விரும்பவதில்லை. அதேநேரம் வீட்டு வேலையை பகிர்ந்துகொள்ளவும் பல ஆண்கள் முன்வருவதில்லை, என மூச்சு விடாமல் புலம்புகிறார் நடிகை பத்மபிரியா.

## நடனம் தெரியாத நடிகைகள்

'விஸ்வரூபம்' படத்தை இயக்கி நடிக்கிறார் கமல்ஹாசன். இப்படத்துக்காக பிரபல நடன இயக்குனர் பிஜு மஹராஜ் என்பவரிடம் சமீபத்தில் கதக் நடனம் கற்றார். இதுபற்றி மஹராஜ் கூறும்போது, "விஸ்வரூபம் படத்துக்காக கமல்

...ன்னி ...டம் சமீபத் ...தில் கதக் நடன ...யிற்சி பெற்றார். ...நான் பார்த்தவர்களில் ...னத்தை ஆர்வமாக கற்றவர் கமல். இந்த காலத்தில் பெரும்பாலான நடிகைகளுக்கு நடனம் ஆடத் தெரிய ...வில்லை. ...கையையும், ...காலையும் அசைக்கி...றார்கள் அவ்வளவு...தான். சமீ...பத்தில் ...டி.வி ஒன்றில் கேத்ரினா கைப் ஆடிய நடனம் பார்த்தேன். அது நடனமாக எனக்கு தெரியவில்லை. முறையான நடனம் ஆடும் அளவுக்கு அவர் தகுதியாக இல்லை. அந்த கால நடிகை-ளுடன் ஒப்பிடும் போது இப்போதுள்ள நடிகைகள் ஒன்றுமே இல்லை. மாதுரி தீட்சித் மட்டுமே ஓரளவுக்கு ஆடும் திறமை பெற்றவர். ...காட்சி முடிந்தபிறகுகூட ...நடன அசைவு எப்படி இருந்தது என்று ...ஆர்வமாக கேட்பார்" என்றார்.

## சமந்தாவுக்கும் சந்தானத்துக்கும் காதல்...!?

நடிகை சமந்தா, காமெடி நடிகர் சந்தானத்தை காதலிக்கிறார். இது நிஜத்தில் கிடையாது. உருவாகி வரும், 'நான் ஈ' என்ற புதிய படத்தில், நடிகர் நானிக்கு ஜோடியாக நடிகை சமந்தா நடிக்கிறார். வில்லன் சுதீப், காமெடி நடிகர் சந்தானம் இவர்களுடன் நடித்து வருகின்றனர்.

"படத்தின் கதையில் ஹீரோயின் சமந்தா, ஹீரோ நானியை காதலிக்கிறார். அதேபோல் படத்தின் வில்லன் சுதீப்பும் சமந்தாவை ஒரு தலையாக காதலிக்கிறார். ஆனால் சமந்தா அவரது காதலை நிராகரிக்கிறார். இதனால் கோபமடைந்த வில்லன் சுதீப், தன்னுடைய காதலுக்கு எதிர்ப்பாக இருக்கும் ஹீரோ நானியை கொன்றுவிடுகிறார். இதன் பிறகு ஹீரோ நானி மறுபிறவியில் ஈ -ஆக பிறவியெடுத்து வில்லன் சுதீப்பை எப்படி அழிக்கிறார் என்பதை சுவாரஸ்யமாக சொல்லப்பட்டிருக்கிறது. இதுவரை தமிழ் சினிமாவில் ஈ-யை வைத்து படம் வரவில்லை. நான் தான் முதல்முறையாக முயற்சி செய்து எடுத்திருக்கிறேன். மறுபிறவியில் சந்தானத்தை, ஞானியாக நினைத்து காதலிக்கும் கதாபாத்திரத்தில் நடிக்கிறார் சமந்தா. அதேபோல் சந்தானமும், சமந்தாவை துரத்தி, துரத்தி காதல் செய்கிறார். சந்தானத்திற்கு இந்த படத்தில் தான் டயலொக் ரொம்ப குறைவு. இதில் இவருடைய நடிப்பு திறமையை வெளிப்படுத்தும் விதமாக இப்படம் கண்டிப்பாக அமையும் என்றார்.

## உயிருக்கு போராடிய ஹீரோ

'வட்டாரம்', 'சிக்கு புக்கு' படங்களில் ஆர்யாவுடனும், 'கத்திக் கப்பல்' படத்தில் ஹீரோவாகவும் நடித்தேன். இப்போது 'மறுமுகம்' படத்தில், மென்மையான ஹீரோவாக நடிக்கிறேன். ரன்யா ஜோடி. டேனியல் பாலாஜியும் இருக்கிறார். கொடைக் கானல் மலையில் உயரமான குன்றில் நின்று, பாடல் காட்சியில் நடித்தேன். பலத்த காற்றால் தடுமா-றினேன். கீழே பார்த்தபோது, மரண பள்ளம் பயமுறுத்தியது. அந்த இடத்தில் நடிக்கமாட்டேன் என்றேன். இயக்குனர் கமல் உள்ளிட்ட படக்குழுவினர் கொடுத்த தைரியத்தில், நடித்தேன். இப்போது நினைத்தாலும் புல்லரிக்கிறது. மறுமுகத்தின் நாயகன் அனூப் குமார்.





## அபாரமான தெ...

நடிகர் மாதவன், பொலிவூட் நடி... சேர்ந்து ஜோடி பிரேக்கர்ஸ் என்ற இந்... இந்த படம் குறித்து மாதவன் கூறியதா...

ஜோடி பிரேக்கர்ஸ் படத்தில் என... கதாபாத்திரம் மிகவும் பிடித்துள்ளது. ந... நடித்து போர் அடித்துவிட்டது. அதனா... பாத்திரம் சுவாரஸ்யமாக உள்ளது. செ... என்று நினைப்பவன் நான். படத்திற்கு ... நிர்வாணமாகக் கூட ஓடுவேன்.

## கண்மாய்கள...

ஜெர்மன் நாட்... செல்வின் ஜோடி ... இப்பட இயக்குனர்... தண்ணீரின் தேவை... தடுப்பணைகள் ... போன்றவற்றை ... உருவாகி உள்... கிறது. பயிர் செ... திறக்கப்படாமல் ... திறக்கப்படுகிறது... நடக்கிறது. முல்... பென்னி குக் என்ற...

## விரைவி...

திருமணத்துக்கு... குறைவது சகஜ... அதில் நானும் ... ஏற்பட்ட திருப்பங்... சினிமாவில் ஹீ... என்றாலும் எனது... பலன், 'வானம்' ப... நடிகையின் வாக்கு... யின். இதில் 4 ம... கிறேன். இதனை... வில் இசை பள்... உள்ளேன்" சோனியா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# தமிழுக்கு முதல் மரியாதை

பெங்களூரை சேர்ந்த மொடல் அழகி சுபா புட்லா. தென்னிந்திய அழகி போட்டியில் வென்றவர். கன்னட பட இயக்குனர் ரவிவர்மா இயக்கும் படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டார். பின்னர் திடீரென்று அப்படத்தில் இருந்து விலகி தமிழ் படத்தில் நடிக்க கால்ஷீட் கொடுத்தார். இதுபற்றி ரவிவர்மா கூறுகையில், "என் படத்தில் சுபா நடிக்க இருந்தது. சில நாட்களுக்கு முன்பே இது முடிவானது. ஆனால், அவர் நடிப்பதில் அவரது அப்பாவுக்கு விருப்பம் இல்லையாம். நடிக்கக் கூடாது என்று அவர் சொல்லிவிட்டதால் சுபா அப்படத்தில் இருந்து விலகிவிட்டார். அம்மாவிடம் பேசியும் அனுமதி கிடைக்கவில்லை. யாரையும் கட்டாயப்படுத்தி நடிக்க வைக்க எனக்கு விருப்பம் இல்லை" என்றார். கன்னடத்தில் நடிக்காமல் விலகிய சுபா தமிழில் "மாலை பொழுதின் மயக்கத்திலே" என்ற படத்தில் நடித்து வருகிறார். தமிழ் படத்தில் நடிப்பதால்தான் கன்னட படத்தில் நடிக்க மறுத்துவிட்டேன் என்று அவர் கூறியிருக்கிறார். இதுகுறித்து அவர் கூறும்போது, "ஏற்கனவே தமிழ் படங்களுக்கு கால்ஷீட் கொடுத்ததால் கன்னட படத்தில் நடிக்க முடியவில்லை. என்றார்.



# சரண்யா நாக் நிர்வாண போஸ்?

'மழைக்காலம்' படத்தின் கிளைமாக்ஸ் காட்சியில் சரண்யா நாக் நிர்வாணமாக நடித்திருப்பதாக தகவல் வெளியானது. இதுபற்றி அவரிடம் கேட்டபோது கூறியதாவது: இந்தப் படத்தின் கதைப்படி ஓவியக்கல்லூரியில் மொடலாக போஸ் கொடுக்கும் கேரக்டர். இக்காட்சியை சென்னையில் செட் போட்டு படமாக்கினார்கள். நான் நிர்வாணமாக போஸ் கொடுக்கவில்லை. ஸ்கின் டிரெஸ் அணிந்து, முதுகு காட்டியபடி நடித்தேன். இது சில விநாடிகள் மட்டும் இடம்பெறும். இதை பெரிதுபடுத்தி விட்டார்கள். இதில் ஆபாசம் துளியும் இருக்காது.

## ' தொழில் பக்தி

ூட் நடிகை பிபாஷா பாசுவுடன்
ற இந்தி படத்தில் நடித்துள்ளார்.
கூறியதாவது.
தில் எனக்கு கொடுக்கப்பட்டுள்ள
ளது. நல்ல பையனாக நடித்த.
அதனால் இந்த படத்தில் எனது
ாது. செய்யும் தொழிலே தெய்வம்
ந்திற்கு தேவைப்பட்டால் தெருவில்

# கரையில் தூங்கிய வெளிநாட்டு ஹீரோயின்

ன் நாட்டை சேர்ந்த எலினா அசன்,
ஜோடி நடிக்கும் படம் 'ஒண்டிப்புலி'.
யக்குனர் ராஜகுரு கூறியதாவது:
ன் தேவை, அணைகளின் அவசியம்,
னகள் கட்ட வேண்டியதின் அவசரம்
ற்றை மையமாக வைத்து இப்பட கதை
ி உள்ளது. மழைநீர் கடலில் வீணா-
யிர் செய்யும் காலத்தில் அணைகள்
டாமல் அறுவடை காலத்தில் தண்ணீர்
டுகிறது. இந்த தவறுகள் இப்போதும்
. முல்லைப் பெரியாறு அணையை
க் என்ற ஒற்றை மனிதர் தலைமை

தூங்கி கட்டி முடித்தார். இந்த வரலாறும் இப்படத்தில் இணைக்கப்பட்டிருக்கிறது. செல்வின் ஹீரோ. எலினா அசன் என்ற ஜெர்மன் நாட்டு இளம்பெண் ஹீரோயின். இவர் டெல்லியில் இந்தோ-ஜெர்மன் தூதரக அலுவலகத்தில் வேலை செய்துகொண்டிருந்தார். நடிப்பதற்காக தனது வேலையை இராஜினாமா செய்துவிட்டார். நெல்லை, கன்னியாகுமரி மற்றும் தேனி, பெரியகுளம், நாங்குநேரி உள்ளிட்ட பகுதிகளில் ஷூட்டிங் நடந்தது. தும்பிபுரம் என்ற இடத்தில் கண்மாய் அருகே ஷூட்டிங் நடந்தது. ஓய்வு நேரத்தில் கண்மாய் கரை ஓரத்திலேயே எலினா அசன் தூங்கி ஓய்வெடுத்தார். ஏசி கேரவேன் தந்தால்தான் ஷூட்டிங் வருவேன் என்று பல ஹீரோயின்கள் கண்டிஷன்போடும் இந்நாளில் கண்மாய் கரையோரம் ஒரு ஹீரோயின் தூங்கியதை என்னால் சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியவில்லை. அவரது எளிமை வியக்க வைத்தது. ஜேம்ஸ்வசந்தன் இசை. வைரமுத்து பாடல்கள். இப்பட பாடல் வெளியீட்டு விழாவுக்கு பென்னி குக்கின் கொள்ளுப்பேரன் சாம் சான் குக்கை அழைத்து வர உள்ளோம். இதற்கான பேச்சுவார்த்தை நடக்கிறது.

## ரவில் இசைப் பள்ளி

னத்துக்கு பிறகு நடிகைகள் மவுசு
சகஜம். சிலர் மீண்டிருக்கிறார்கள்.
ானும் ஒருத்தி. என் வாழ்க்கையில்
திருப்பங்கள் எதிர்பாராதவை. மீண்டும்
ஹீரோயின் வேடம் எதிர்பாராதது
எனது காத்திருப்புக்கு கிடைத்த
னம்' படத்தில் சிறிய வேடம். 'ஒரு
் வாக்குமூலம்' படத்தில் ஹீரோ
ல் 4 மாறுபட்ட மேக்அப் அணி
இதனைத் தொடர்ந்து விரை
ச பள்ளி ஒன்றை ஆரம்பிக்க
ளேன்" என்று கூறுகிறார்
னியா அகர்வால்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# காதலுக்காகத் தன்மானம் இழக்காதே!



ஒரு பெண்ணோ, ஆணோ காதலிக்க வில்லையா? விட்டுத் தள்ளுங் கள். ஆற்றில் எத்தனையோ மீன்கள் இருக் கின்றன. நாம் விரும்பும் பெண் ஆண் அல்லது உங்களைக் காதலிக்கவில்லை என்பது அசிங்கம் இல்லை. நம்மை அவர்கள் காதலனாகவோ காதலியாகவோ நினைக்கவில்லை என்பதைப் புரிந்து கொள்ளாமல் அவர்களைத் துரத்துவதுதான் அசிங்கம். உங்களைக் காதலிக்கும் ஆள் கிடைக்கும் வரை காத்திருங்கள். காதலுக்காகத் தன்மானம் இழக்காதே!

காதலிக்க முன் காதலியின் அன்றாட வாழ்க்கையைப் பற்றி விசாரியுங்கள். காதலுக்காக உங்கள் மரியாதையைக் குறைக்கும் விதமான செயல்களில் ஈடுபடாதீர்கள். அந்த மாதிரி காதல் ஆபத்தானது!

**காதலிக்காகப் பணத்தை வாரி இறைக்காதே!**

படத்திற்கு பர்சை காலி பண்ணி பிளாக்கில் டிக்கெட் வாங்குவது, காதலியின் பிறந்த நாளுக்காகப் பெரிய தொகை கொடுத்து அன்பளிப்பு வாங்கிக் கொடுப்பது - இது போன்ற கெட்ட பழக்கங்கள் காதலுக்கு எதிரி! நீங்கள் இவ்வளவு செலவு செய்தால் சில பெண்களுக்கு உங்கள் மேல் நம்பிக்கை குறைந்துவிடக்கூட வாய்ப்பிருக்கிறது. காதலிக்கு ஏதாவது வாங்கிக் கொடுத்தே ஆகவேண்டுமா? இப்படி ஆசைப்படுவது சகஜம்தான். அதில் தப்பில்லை. அதற்கான விதிமுறைகளுக்கு 07 ஆம் கட்டளையைப் பாருங்கள்!

**காதலனின்/காதலியின் பெற்றோரைத் தெரிந்துகொள்!**

காதலை வலுப்படுத்துவதற்கும் அதை நீடிக்கச் செய்வதற்கும் இது முக்கியம்! உங்கள் காதலி அல்லது காதலனிடம் அவர்களது பெற்றோரை அறிமுகப்படுத்தும்படி வற்புறுத்துங்கள். சில சமயம் இது சிக்கலில் மாட்டிவிடும்தான். ஆனால் சிக்கலை உண்டாக்காத பெற்றோர்களை அவசியம் தெரிந்து கொள்ளுங்கள். எந்த சிக்கல் வந்தாலும் சமாளிக்கப் பாருங்கள். பயத்தில் சந்திப்பைத் தள்ளிப் போடாதீர்கள்.

**காதலனின், காதலியின் நண்பர்களை நட்பு கொள்.**

உங்கள் காதலுக்குப் பிரச்சினை என்று ஒன்று வந்தால் அப்போது நண்பர்களைப் போல் யாரும் உதவ மாட்டார்கள். உங்களுக்குள் சண்டை வந்தாலும் அவர்கள் சமாதானப் புறாக்களாக இருப்பார்கள். முக்கியமான ஒரு விஷயம். உங்கள் காதலிக்கு ஆண் நண்பர்கள் இருந்தால் பொறாமைப்படாதீர்கள். ஏனெனில் பொறாமையால் நீங்கள் பல விஷயங்களை இழந்துவிடுவீர்கள்.

அன்பளிப்புகள் தரும் சந்தர்ப்பங்கள் கிடைத்தால் தவறவிடாதே! காதலர் தினம், பொங்கல், தீபாவளி, தமிழ்ப் புத்தாண்டு தினம், ஆங்கிலப் புத்தாண்டு தினம், கிறிஸ்தவராக இருந்தால் கிறிஸ்துமஸ், முஸ்லிமாக இருந்தால் ரம்ஜான், பக்ரீத் என்று சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் காதலனுக்கு அல்லது காதலிக்கு குறைந்த செலவில் சின்னச் சின்ன அன்பளிப்புகள் வாங்கிக் கொடுங்கள்.

**விட்டுக் கொடு, தியாகம் செய்யாதே!**

"ஒரு இலட்சியத்திற்காக சாவதை விட அந்த இலட்சியத்திற்காக வாழ்வதுமேல்," என்ற பழமொழியைக் கேட்டிருக்கிறீர்களா? அது போலத்தான் இதுவும். காதல் உங்களை உயர்த்தவேண்டுமே தவிர நடுத்தெருவில் பைத்தியமாக அலையவிடக் கூடாது.

**காதலுக்காக எதையும் தியாகம் செய்யாதீர்கள்!**

ஆனால் நிறைய விஷயங்களை விட்டுக் கொடுங்கள். காதலனுக்கு / காதலிக்கு உங்களிடம் இருக்கும் சில குணங்கள் பிடிக்கவில்லையா? அவசியம் மாற்றிக் கொள்ளுங்கள். சின்னச் சின்ன விஷயங்களில் உங்கள் சௌகரியங்களைத் தியாகம் செய்யலாம். ஆனால் வேலையை விடுவது, நண்பர்களைப் பகைத்துக் கொள்வது - இதெல்லாம் உங்களுக்கும் உங்கள் காதலுக்கும் நல்லதில்லை.

# தேன் கிண்ணம்

## நிலவின் விருப்பு

எல்லோர்க்கும்
நிலவை இரசித்திட
நெஞ்சத்தில் விருப்பு.

நிலவுக்கு
எதை இரசிக்க
இருக்குது விருப்பு.

இதோ...
வாசற் கதவில்லா
எங்கள்
ஓலைக் குடிசையுள்ளே
உள் நுழைக்கிறதே
நிலவுக் கதிர்கள்
அழைக்காமலே
ஆசைப்பட்டு நுழைவதால்
வான நிலவுக்கு
ஏழைக் குடிசைகளை
இரசித்திடத்தான்
ஏராளம் விருப்போ!

யோ. புரட்சி.

## காலம் எழுதுகிறது ஒரு வரலாறு!

நாம்க்கு வரிகட்டி
நாறிப்போய்க் கிடக்கிறது
நம்வாழ்வு!
எங்கோ
தப்பிய தலைகள் கூட
இப்போ
திசை திரும்பிப் பார்ப்பதாயில்லை.

இயற்கை உபாதையின் நிமித்தம்
காலைலயோரங்களில்...
நாம் உண்மையாம் செலுத்திய
ஒரு கடமை
இன்று
ஓய்யாரமாம் வாழ்கிறது
உண்டு கொழுத்த நிலையாம்.

மரண வாழ்விலும்
மண்ணை நம்பிச் சீவித்தோர்
உழைப்பின் ஒரு பகுதி
உறிஞ்சப்பட்டுவிட்டது
வரி...வரியாக...
பெருவாரியாக!

சுதந்திர சோசலிஷத்திற்குள்
பிதுங்கப்பட்ட
சம்பிரதாயசையின் பலன்களை
வியர்வையின் மணம் அறியாதவர்கள்
விரும்பியபடி சுவைக்கிறார்கள்
'வெளியில்'

வரியின் சுவை கண்டவர்க்கு
எங்கள்
வலியின் துயர் புரியவில்லை!
அதனால்தான் மீண்டும்
வரிச்சுமை - புளிச்சுமை போல
ஒரு வரலாற்றை எழுதுகிறது
எங்களின் காலம்!

அலெக்ஸ்பரந்தாமன்,
புதுக்குடியிருப்பு.

காலத்தின் ஏடுகளிலே
காவியமாம் நம் காதல்
மாற்றானின் மடியினிலே
மனைவியாம் என் காதலி
வேடிக்கை பேச்சல்ல - இது
வேதனையான என் இளமை
புதிரான புதிராக - என்
புதையல்கள் இருந்துவிட
கிளிப்பேச்சுப் பேசுமென் கவி
கிளறுகிறது கவிச் சொற்களினால்
அன்றொரு நாள் ராத்திரியில்
அவளிருக்கும் அறைக்குள்ளேயே
தஞ்சம் தேடி அருகே செல்ல
தயங்காமல் இடம் கொடுத்தாள்
தாகம் என்றுரைத்தேன்
தமிழ் முத்தங்கள் பல கொடுத்தாள்
பசியென நான் சிணுங்க
பஞ்சணையில் இலை விரித்தாள்

கட்டியே இணைத்தணைத்துக்
கனிவித்துக் களித்திருக்க
எமைக் கண்டு கலங்காமல்
எம்மிடம் காரணமும் கூறாமல்
கண்படி விலந்தது என் பொழுது?
வாலிபத்தின் வாசலிலே - என்
வாழ்க்கை காலப் பருவத்திலே
இதயத்திலே இடம் கொடுத்தேன்
இன்னமும் வலிக்குதடி
பொய்யினால் மேனி போர்த்தி
பொம்மையாய் ஆடவிட்டாய்
ஆடுகின்ற வேளையிலே
ஆழ்கடலில் தள்ளிவிட்டாய்
கண்ணீரில் கவி பாட - அன்று
கனவோடு 'கலை'யானேன்
தண்ணீரில் தள்ளாடி - இன்று
தனத்தின் இரையானேன்.

நவாலியூர்
கே.வண்ணன்.

பொழுதுக்கு புத்தியில்லை



## தேசத்தின் காதலன்

இந்த தேசத்தை
தூய்மையாக
காதலித்துக் கொண்டிருந்தேன்
சொந்த பூமி இல்லாத நான்.

என் அடிமைத்தனத்தை
சமர்ப்பணம் செய்துவிட்டுத்தான்
எதிர்காலத்துக்கள்
என் கால்கள் புதைகிறது.

என் வறுமைக்கு விலாசம்
தந்துவிட்டு
என் வயிற்றுக்கு
விலங்கிட வந்திருக்கிறார்கள்.

சிதைந்து போன ஒரு
நாட்காட்டியை
எடுத்து
வைத்தியன் சொன்ன
சாவின் தேதியைப் பார்த்தேன்
அந்த தேதிக்கான மாதம்
அழிந்து போயிருந்தது
என் வாழ்க்கையைப் போல

இந்த தேசத்தை
தூய்மையாகக் காதலித்துக்
கொண்டிருந்தேன்
ஜனங்கள் அதிகரித்த
நம் நகரில்
பிச்சைக்குக் கையேந்தும்
பட்டினி வயிறுகளை.

இங்கு
பயங்கரவாதம் ஆக்குவதும்
நம் தேசந்தான்
அதிகம்
பிச்சைக்காரர்களை ஆக்குவதும்
நம் தேசந்தான்.

தேசத்தின் ஒருமைப்பாட்டை
நேசிக்கின்றவர்கள் கூட
ஒற்றுமையோடு இல்லை
இதன் மத்தியில் தேசம் எப்படி...?

இப்படி நினைவுகளை அசைப்பதனால்
நேரமும் ஓடிவிடும்
நமக்கான காலத்தைத்தான்
கடவுள் களவாடி விட்டானே...

செ.மோகன்ராஜ்,
நெடுந்தீவு - 12

## ம(ா)து இவள் யார்?

தண்ணீரைப் போல்
தன்மானமும் அழகி இவள்
தொட்டவரைத் தொடர்ந்திழுத்து
வளைத்துப்போடும்
வஞ்சி இவள்!

வளைத்தவன் கண்ணாலே
கண்டவுடன் குளிர் - அந்த
உண்டாகும் மனதில்
புதுக்களிர்!

உடல் தந்து உயிர் சுக
உறவைக்கூட கொண்டவள்
உறவாகும் வரை
புது ஞானம்
தந்து வைப்பாள்!

புரிந்தவனுக்கு புத்துணர்ச்சி!
தெரிந்தவனுக்குத் தெரியும் - மகிழ்ச்சி!

அவளுக்கு அழகை சொறுபேர்!
அவளும் சில வேளை மறந்த பேர்!

பார்த்தவுடன் பழகக் கஷ்டமாம்
பழகினால் அஷ்டமும் துச்சமாம்!

ஒரு தடவையிலேயே
ஆம்பிளோங்களையே
விழுங்கிவிடுவாள் - மனிதன்
மனி சில கடந்தால் மறக்கிறானே!

வெளிக்குரிய ஆடை கொண்டவள்
அதிலும் அவளுக்கு - சில
இடங்களில் தம்பனை!

மன்றாடி அடைவார் சிலர் - இவளை
சிணுங்கி சிணுங்கி - இவளை
கொஞ்சுவார்!

அடைந்தவுடன் விடைகொடுப்பார்
- பிறகு
புதுதி நிலம் பட்டுப்பாய் பெறுவார்!

மதியிழந்து மானமிழப்பார்
மறந்து விட
மறு பதமும் பெற வருவார்!

இத்தனை நிறைந்தும்
இன்பத்தொழியவள் - உடலில்
அன்புக்கும் எதிரி!
அபலைக்கும் எதிரி!
ஆண்டவனுக்கும் எதிரி!

எஸ்.சிபானி நூறும்மா,
ஓலுவில்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிரச்சினைகளின் நடுவே தத்தளிக்கும்



நன்றி இணையம்

# இஸ்ரேல்?

**பொதுவாக** எந்த ஒரு சம்பவம் நடந்தாலும் அதை நடத்தியவர்கள் யார் என்பது தெரியவில்லையாயின் அதனால் பயனடைபவர்கள் யார் என்பதைக் கண்டுபிடித்தால், அது உண்மை குற்றவாளிகளை அடையாளம் காட்ட உதவலாம். டில்லியில் நடந்த குண்டுவெடிப்புக்கு ஈரானை நோக்கியே அனைவரும் கை நீட்டுகின்றனர். சமீப காலங்களில் ஈரான் அணுசக்தி விஞ்ஞானிகள் கார்க் குண்டு கலாச்சாரத்தை பயன்படுத்தி இஸ்ரேலால் கொல்லப்பட்டது குறித்தோ தன்னுடைய அரசியல் எதிரிகளை எவ்வழிமுறையையாவது பயன்படுத்தியாவது கொல்லும் இஸ்ரேல் குறித்து எவ்வித அபிப்பிராய பேதங்களும் வெளிவரவில்லை.

இந்தியாவுக்கும் ஈரானுக்கும் இடையே நெடுங்காலமாய் இருந்து வரும் உறவை பிரிக்க அமெரிக்கா நீண்ட காலமாய் முயன்று வருகிறது. இந்தியாவின் பெருகி வரும் கச்சா எண்ணெய் தேவையைப் பூர்த்தி செய்ய இந்தியா ஈரானை பெரிதும் நம்பியிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவின் மிரட்டலை மீறி இந்தியா ஈரானுடன் தொடர்பு வைத்து கொண்டிருக்கும் நேரத்தில், குறிப்பாக தான் விற்கும் கச்சா எண்ணெய்க்கான தொகையை இந்திய நாணயத்திலே வாங்க ஈரான் முதல் முறையாக சம்மதித்திருக்கும் நிலையில் இத்தாக்குதல் நடந்திருப்பது நிச்சயமாக ஈரானுக்குப் பயனளிக்க கூடிய செய்தி அல்ல. எனவே இத்தாக்குதல் காரணமாக இந்திய ஈரான் உறவு பாதிப்புக்குள்ளானால் யாருக்கு இலாபம் எனும் இக்கோணத்திலிருந்தே இத்தாக்குதல் ஆராயப்பட வேண்டும்.

நிச்சயமாக இத்தாக்குதலால் பயனடையப் போவது இஸ்ரேல்தான் என்றாலும், அதற்காக இஸ்ரேலியர்களே அவர்களின் காரில் குண்டு வைத்தார்கள் என்று சொல்வதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை, ஈரானியர்கள்தான் குண்டு வைத்தார்கள் என்று சொல்வதற்கு ஆதாரம் இல்லாதது போலவே. ஆனால் இப்படி ஒரு சம்பவத்துக்குத் தான் இஸ்ரேல் காத்து கொண்டிருந்தது என்பது, இச்சம்பவத்தை வைத்து இந்திய ஈரான் உறவை பாதிப்படையச் செய்ய இஸ்ரேல் மேற்கொள்ளும் நடவடிக்கைகளிலிருந்து நன்கு விளங்குகிறது.

ஈரானை ஒரு சண்டைக்கார நாடாகவும் தீவிரவாத செயல்களை பிற நாடுகளில் அரங்கேற்றும் போக்கிரி நாடாகவும் சித்தரிக்க இஸ்ரேல் படாத பாடுபடுகிறது. ஆனால் உண்மை என்னவெனில் இஸ்ரேல்தான் ஈரான் மீது தாக்குதல் நடத்தத் தயாராய் இருக்கிறது என்பது நடுநிலையான வெளிநாட்டு பத்திரிகையாளர்களே ஒத்து கொள்ள கூடிய உண்மை. தாக்குதல் நடந்த ஒரு சில மணி நேரத்திலேயே இது ஈரானின் கைங்கரியம் என்று இஸ்ரேல் பிரதமர் நேதான்யாஹு எவ்வித ஆதாரமும் இல்லாமலே சொன்னார்.

"இத்தாக்குதலுக்கும் எந்த ஒரு நாட்டுக்கும் தொடர்பிருப்பதற்கான ஆதாரம் இதுவரை இல்லை" என இந்தியா அறிவித்துள்ளது.

ஆச்சரியம்! இந்தியாவுக்குள் நடந்த ஒரு தாக்குதலுக்கு எந்த ஒரு வெளிநாட்டு சக்தியாவது காரணம் என்பதற்கான எந்தவித ஆதாரமும் இதுவரை இல்லை என இந்தியா அறிவித்திருக்கும் நிலையில், தாக்குதல் நடந்த செய்தி வெளியான நிமிடத்திலேயே அத்தாக்குதலுக்கு ஈரான்தான் காரணம் என இஸ்ரேல் பிரதமர் அறிவிக்கிறார் எனில், ஈரான்மீது இஸ்ரேல் எந்த அளவுக்கு வஞ்சம் வைத்துள்ளது என்பது தெளிவாவதோடு, இது இந்தியாவுக்கும் ஈரானுக்கும் இடையில் பகைமை மூட்டுவதற்கான இஸ்ரேலின் கைங்கரியமாக ஏன் இருக்கக்கூடாது என்ற சந்தேகத்தையும் பெரிதாக எழுப்புகிறது.

திரும்பத் திரும்ப பொய்யைச் சொன்னால் உண்மையாகிவிடும் எனும் கோயபல்ஸ் தத்துவத்தைப் போல், ஈரான் குறித்து பொய்களைத் திரும்ப திரும்ப உண்மையைப் போல் சொல்கிறது இஸ்ரேல். ஈரான் அணு ஆயுதம் தயாரிக்க போகிறது என்று 2012இல் இஸ்ரேல் சொன்ன இதே கருத்தைத்தான் 1992இல் தற்போதைய பிரதமர் பெஞ்சமின் நேதான்யாஹுவும் 1996இல் அப்போதைய இஸ்ரேல் பிரதமர் ஷிமான் பெரஸும் சொன்னது குறிப்பிடத்தக்கது.

தனக்கு பிடிக்காதவர்களை கொலை செய்வதில் கை தேர்ந்தது மொசாத் என்பது அனைவரும் அறிந்ததே. தெஹ்ரானின் மையப் பகுதியிலேயே முஸ்தபா அஹமதி ரோஷன் எனும் அணு விஞ்ஞானி கொல்லப்பட்டதன் பின்னால் இஸ்ரேல்தான் உள்ளது என்பது நடுநிலையாளர்கள் ஒத்து கொண்ட உண்மை. (தொடர்ச்சி 22 ஆம் பக்கம்...)

# கண்ணதாசனின்

## அவள் ஒரு இந்துப் பெண்

04



**சாந்தி** முகூர்த்தத்திற்கு நாள் பார்க்கப்பட்டது. அந்தச் செய்தி ஸ்ரீதேவிக்கு வேதனை கலந்த சந்தோஷத்தைக் கொடுத்தது.

ஆனால் ரவிச்சந்திரனுக்கோ தலைவிதியாகத் தோன்றிற்று.

ஆன்மாவும், ஆன்மாவும் கூடுகின்ற கதையை விளக்கமாக அறிந்து கொண்ட அவன், 'தேகமும் தேகமும் கூடுகின்ற' கதையை வெறுக்கத் தொடங்கினான்.

அதில் என்ன இருக்கிறது?

இரண்டு மாமிசக் கத்தைகள் மோதிக் கொள்வதிலே என்ன ஆனந்தம்?

வாழ்க்கையின் மிகப் பெரிய இன்பத்தை அது எப்படி வழங்க முடியும்?

சிந்தித்தான்.

முதியவர்களின் சிந்தனை கூட மழுங்கிப் போன உலகத்தில் ஒரு இளம் பருவம் தத்துவ விசாரத்தில் ஆழ்ந்தது. பலன்?

சாந்தி முகூர்த்தத்தில் தேக சாந்திக்காகக் காத்திருந்தாள் ஸ்ரீதேவி.

அந்த இரவே யாருக்கும் தெரியாமல் ஆன்ம சாந்திக்காகப் புறப்பட்டுவிட்டான் ரவிச்சந்திரன்.

எங்கு தேடியும் அவன் அகப்படவில்லை.

கண்ணீரில் விழுந்தாள் ஸ்ரீதேவி. கவலையில் ஆழ்ந்தார் பெரிய ஜமீன்தார்.

அவர் இறக்கும் தருவாயில் இட்ட கட்டளைதான் பன்னிரண்டாவது ஆண்டில் விதவைக் கோலம்!

-2-

1933 ஆம் ஆண்டில் சென்னை நகரில் ஓடிய வாடகைக்கார்கள் சுமார் ஐம்பதுதான் இருக்கும்.

அவையும் பழங்காலத்து 'செவர்லெ' 'போர்ட்' கார்கள்.

பல்பு ஹாரன் வைத்த அந்தக் கார்களின் பிரதிநிதிகள் இன்றைக்கும் சில சென்னை நகரத்தில் இருக்கின்றன. அந்தக் கார்களில் ஒன்று கொடுக்குப் பேட்டை வேதாசல நாயக்கருக்குச் சொந்தமானது.

அதை ஓட்டிக்கொண்டிருந்த வைரமுத்து ஓரளவு படித்தவன். வயது முப்பதிருக்கும். தன் விதவைத் தங்கைக்காக அவன் திருமணமே செய்து கொள்ளாமல் வாழ்ந்து கொண்டிருந்தான்.

சத்தியத்துக்குக் கட்டுப்பட்டவன். பெரம்பூர் குயர் தெருவில் ஒரு சிறிய வீட்டில் வைரமுத்துவும், அவனது விதவைத் தங்கை கல்யாணியும், அவளது ஒரே குழந்தையும் வாழ்ந்து வந்தார்கள். வருமானம் போதுமானதாக இருந்தது; வாழ்க்கையும் நிம்மதியாகத்தான் இருந்தது.

அந்நாளில் சென்னையில் 'கோச்' வண்டிகளும், ஜட்கா வண்டிகளுமே மிக அதிகம். மிகப் பெரிய பணக்காரர்கள் மட்டுமே டாக்சி எடுப்பார்கள்.

மீற்றர் இல்லாத டாக்சியில், கேட்டதுதான் தொகை என்றாலும், அளவறிந்து கேட்பவன் வைரமுத்து. சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனில் நிற்கும் ஆறேழு டாக்சிகளில் அவனது டாக்சியும் ஒன்று.

கம்பீரமாக அதில் சாய்ந்தபடி அவன் நிற்பதே ஒரு அழகு.

காரில் அழுக்கு இருக்கிறதோ இல்லையோ, அடிக்கடி அதைத் துடைப்பது அவன் பணி, ஸ்டேஷனில் ரயில்கள் வந்து நின்று பிரயாணிகள் இறங்கி வந்ததும் 'என் வண்டியில் ஏறுங்கள்' என்று ஜட்கா வண்டிக்காரர்கள்தான் ஓடுவார்களே தவிர, டாக்சிக்காரர்கள் ஓடுவதில்லை. வைரமுத்துவின் ஒரே நெருங்கிய நண்பர் வால்டாக்ஸ்ரோடு போலிஸ் இன்ஸ்பெக்டர் கோவிந்தராஜ்தான். அவர் வேறு யாரோடும் அதிகம் பழகுவதில்லை.

அன்று வெள்ளிக்கிழமை, காலை ஐந்து மணிக்கெல்லாம் எழுந்துவிட்டான் வைரமுத்து. அவன் தங்கை கல்யாணி வெந்நீர் போட்டுத் தயாராக வைத்திருந்தாள்.

தெருவிலிருக்கும் குழாயடிதான் பெரம்பூர் வாசிகளின் குளிக்கும் அறை. கூட்டம் வருவதற்கு முன்பே குளித்து முடித்தான் வைரமுத்து.

ஆறு மணிக்கெல்லாம் அவனது டாக்சி அங்காள பரமேஸ்வரியின் சந்நிதானத்தில் நின்றது. சாலைகளிலும் சரி, மார்க்கெட்டிலும் சரி, கோயில்களிலும் சரி; பட்டணத்துத் தமிழ் பேசும் வைரமுத்து பரமேஸ்வரியின் சந்நிதியில் 'தனம் தரும்' என்ற அபிராமி அந்தாதியின் பாடலைப் பாடி, கீழே விழுந்து வணங்கி எழுந்தபோது, அவன் பையிலிருந்து நாலணாக் காசு தரையில் விழுந்தது.

"நல்ல சகுனம்" என்றார் முதியவர் ஒருவர். அந்தக் காசை உண்டியலில் போட்டுவிட்டு சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு வந்தான் வைரமுத்து.

பழங்கால எஞ்சின் ஒன்று படபடக்கும் சத்தமும், 'கீச்' என்ற அதன் சங்கும் அவன் காதுகளுக்குக் கேட்டன. ஆட்களைத் தேடி அவன் முந்துவதில்லையாதலால் அமைதியாகவே சாய்ந்து கொண்டிருந்தான்.

திடீரென அவன் முதுகிலே ஒரு கை விழுந்தது.

"என்னப்பா, டாக்சி! கன்னிமாராவுக்கு வருகிறாயா?" என்ற குரல் கேட்டது.

"ஏறுங்கள்" என்ற வைரமுத்து, கூப்பிட்டவரின் முகத்தைக் கூடப் பாராமல் தன் ஆசனத்தில் அமர்ந்தான். தனது இரண்டு பெட்டிகளோடு அவர் பின் சீட்டில் ஏறி அமர்ந்தார். நேரே கன்னிமாரா ஓட்டலை நோக்கிக் கார் பறந்தது.

(தொடரும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேரி கொல்வின் ஊடகம் ஓர் ஆயுதம்



இலங்கை உட்பட உலகின் பல்வேறு போர் முனைகளுக்குச் சென்று செய்தி சேகரித்த உலகின் புகழ் பெற்ற போர்முனை நிருபர்களில் ஒருவரான அமெரிக்கப் பெண்மணி மேரி கொல்வின் சிரியாவில் கொல்லப்பட்டு விட்டார் என்ற செய்தி சர்வதேசத்தை ஆட்டிப்படைக்கும் மேற்குலக சக்திகளை அதிர்ச்சியடையச் செய்திருக்கின்றது.

சிரிய நாட்டு அரச எதிர்ப்பாளர்களுடன் முகாமிட்டிருந்த இவரும் இவருடன் கூடவே இருந்த பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த புகைப்பட வல்லுனர் ரெமி ஒச்லிக்கும் சிரியாவில் 22.02.2012 அன்று நடந்த தாக்குதலொன்றில் கொல்லப்பட்டு விட்டார்கள்.

அவர்கள் தங்கியிருந்த கட்டடத்தின் மீது நடந்த ஷெல் தாக்குதலில் அவர்கள் கொல்லப்பட்டதாக அரச எதிர்ப்பு செயற்பாட்டாளர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். சிரியாவின் பாபா அமர் என்கின்ற பகுதியில் இந்த இரண்டு ஊடகவியலாளர்களும் தங்கியிருந்த வீடு, அரச எதிர்ப்பாளர்களின் தற்காலிக ஊடக மையமாகச் செயற்பட்டு வந்தது. குறித்த தாக்குதலில் மேலும் பலரும் கொல்லப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மேரி கொல்வினின் இழப்பிற்கு சக பத்திரிகையாளர்கள் மட்டுமல்லாது பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கெமரூன் உட்பட பல உலகத் தலைவர்கள் அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

இலங்கைப் போரில் ஒரு கண்ணை இழந்து இறுதிக் கட்டம் வரை புலிகளோடு தொடர்பில் இருந்த இந்த மேரி கொல்வின் யார்?

2001 ஆம் ஆண்டு இலங்கை அரசிடம் அனுமதி பெறாமல் ரகசியமாக புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் மேரி கொல்வின் சென்று வந்தார். புலிகளின் அனுசரணையுடனான அசாத்திய துணிச்சலில் புலிகளின் விவகாரங்களை சர்வதேச மயப்படுத்தும் ஒருவராக மேரி கொல்வின் செயற்பட்டார்.

புலிகள் இயக்கத்தினரின் பகுதியிலிருந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அவர் திரும்பி வரும்போது அவர் வந்த வாகனத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் காயப்பட்ட மேரி கொல்வின் தனது ஒரு கண்ணின் பார்வையை இழந்தார். இருந்தும் இலங்கை மீதான செய்திகளில் அவர் தொடர்ந்தும் கவனம் செலுத்தி வந்தார். இலங்கைப் போரின் இறுதிக் கட்டத்தில் தொலைத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருந்த நிலையில் கூட புலிகள் இயக்கத்தின் முக்கிய தலைவர்களுடன் நேரடித் தொடர்பில் இருந்த மேரி கொல்வின் போர் நிறுத்தம் கொண்டு வருமாறு புலிகள் அனுப்பிய தகவல்களை மேற்குலகுக்குத் தெரியப்படுத்தி வந்தார்.

மேரி கொல்வின் இலங்கையின் இறுதிக்கட்டப் போர் வரை புலிகளோடு கொண்டிருந்த தொடர்பு குறித்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தன் சந்திரநேரு பி.பி.சி தமிழோசைக்கு விரிவாகச் சொன்னார்.

"2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடங்கி யுத்தம் முடிவடைகின்ற குறிப்பிட்ட காலம் வரையில் எல்.ரீ.ரீ.ஈ யினர் உலகத்தில் உள்ள பலதரப்பட்டவர்களையும் தொடர்பு கொண்டார்கள். ஒரு யுத்த நிறுத்தத்தைக் கொண்டு வரவேண்டும், உயிரிழப்புகளைத் தடை செய்ய வேண்டும், மக்களுக்கு ஒரு நிரந்தரத் தீர்வைக் கொண்டு வரவேண்டும் என்ற தொடர்புகளை ஏற்படுத்தி மிக மும்முரமாக வேலை செய்து கொண்டிருக்கும்போது அதில் ஒருவராகத்தான் மேரி கொல்வின் அம்மையார் அவர்கள் பங்கு பற்றினார்கள்.

கடைசி நிமிடம் வரையில் புலிகளுடன் அவர் நேரடித் தொடர்புகளை வைத்திருந்தார். அதற்கு ஆதாரமாக அவரது கட்டுரைகளில் பல விடயங்கள் வெளிக்கொண்டு வரப்பட்டிருந்தது. தமிழ் மக்களின் பிரச்சினையும் அதிலே குறிப்பிடப்பட்டிருந்தது. அவர் நேரடியாக களத்தில் விடயங்களைப் பார்த்தவர் என்ற அடிப்படையில் அனுபவத்தினூடாக ஒரு யுத்த நிறுத்தத்திற்கு வழி முறை செய்ய வேண்டும் என்றும், இந்தப் பிரச்சினையை சர்வதேச ரீதியாகக் கொண்டு சென்று தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கும் அவர் பாடுபட்டார்.

இடைக்கால யுத்த நிறுத்தத்தைக் கொண்டு வரவேண்டும் என்ற விடயத்தில் அவர் மும்முரமாக இருந்தவர். எழுத்தினூடாக துணிகரமாகப் பிரச்சினைகளை ஆணித்தரமாக வெளிக்கொணர்ந்த ஒரு பெண்மணி அவர். இறுதிக்கட்டத்தில் மேரி கொல்வின் அவர்கள் தான் அளித்த பங்கு குறித்து அவரே தனது கட்டுரையில் குறிப்பிட்டிருக்கின்றார்.

அந்த விபரங்கள் டைம்ஸ் பத்திரிகையில் வெளியாகியிருந்தன. அதில் புலிகள் சரணடைதல் பற்றிய சில விடயங்கள் வெளியாகியிருந்தன. சரணடைதல், சமாதானம், போர் நிறுத்தம் என்ற இந்த விடயங்களைச் சர்வதேசத்திற்குத் தெட்டத் தெளிவாகக் கொண்டு வந்ததிலும் அதன் பின்னர் நடந்த சில சம்பவங்களை வெளி உலகத்திற்குக் கொண்டு வந்ததிலும் மேரி கொல்வின் அம்மையாருக்குப் பெரும் பங்கு இருக்கிறது.

யுத்தம் நடந்த காலத்தில் கடைசி நிமிடத்தில் நேரடியாகப் புலிகளுடன் தொடர்புகளை வைத்திருந்து அந்தத் தொடர்பினூடாக பல விடயங்களை உலகத்திற்குக் கொண்டு வந்த முக்கிய பங்கு மேரி கொல்வின் அம்மையாருக்கு மட்டும்தான் சாரும்.

தொடர்புகள் துண்டிக்கப்பட்ட நிலையில் கூட அவர் மட்டும்தான் புலிகளுடன் தொடர்பிலிருந்தார். இதை அவர் தனது டைம்ஸ் பத்திரிகையில் எழுத்து மூலமாகவும் எழுதியிருந்தார். அதன் பின்புதான் நூறோ இவ்வாறு விடயங்கள் கடைசி நிமிடத்தில் நடந்திருக்கின்றதே என்று உலகம் அறிந்தது.

**ஏ.எச்.ஏ. ஹுஸைன்**

யுத்த களத்தில் விடயங்களைச் சர்வதேசத்திற்கு முதன் முதலில் வெளிக் கொண்டு வந்த அவரை நாங்கள் ஒரு வீராங்கனையாகத்தான் பார்க்கின்றோம்." என்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தன் சந்திரநேரு.

சண்டே டைம்ஸ் பத்திரிகையின் புகழ் பெற்ற வெளிநாட்டு செய்தியாளரான மேரி கொல்வின் அமெரிக்காவில் பிறந்தவர். பல ஆண்டுகளாக லண்டனில் வசித்து வந்தார். உலகில் மோதல் நடக்கும் பிரதேசங்களில் அவர் இதற்கு முன்னரும் செய்திச் சேகரிப்பில் ஈடுபட்டிருந்தார். கொசோவோ, செச்னியா மற்றும் பல அரபு நாடுகளிலும் அவர் செய்திச் சேகரிப்பில் ஈடுபட்டிருந்தார்.

வன்செயல்களினால் பாதிக்கப்பட்டவர்கள் பற்றியே எப்போதும் மிகுந்த கவனம் செலுத்தும் ஒரு அசாதாரணப் பெண்மணி மேரி கொல்வின் அம்மையார் என்று அவர் பணியாற்றிய லண்டன் சண்டே டைம்ஸ் பத்திரிகை விபரித்திருக்கின்றது.

வாள் முனையை விட பேனா முனை பலம்மிக்கது என்று சொல்வார்கள். சரி, கத்தியை நல்ல பல ஆக்க பூர்வக் காரியங்களுக்கும் பயன்படுத்தலாம். அதேவேளை, அழிவு நாச வேலைகளுக்கும் அதே கத்தியைப் பயன்படுத்தலாம். அதுபோலத்தான் இந்த ஊடகங்கள் எனப்படும் ஆயுதமுமாகும்.

மகத்துவம் மிக்க இந்த ஊடகவியல் பணி என்பது சில சமயங்களில் சமகாலத்தின் அரசியல் சமூக பொருளாதார ஆதிக்கங்களுக்கும் சுய நலன்களுக்குள்ளும் அகப்பட்டு அதன் தனித்தன்மையை இழந்து விட்ட சந்தர்ப்பங்களும் உண்டு.

குறிப்பாக இந்த ஊடகவியலை தான்தோன்றித்தனமாகப் பயன்படுத்தி அழிவு நாச வேலைகளுக்குத் தூபமிட்ட பல சந்தர்ப்பங்களை நாம் அந்த கால அனுபவங்களினூடாக அறிந்திருக்கின்றோம். அழிவுகளை நாம் எதிர்நோக்கியிருந்த போது வன்முறைகள் தலைவிரித்தாடி நமது எதிரி யார் நண்பன் யார் என்று தெரியாமல் தட்டுத் தடுமாறிய போது நமது பிரச்சினைகளால் பிழைப்பு நடத்திய சில ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் ஊடகம் எனப்படுகின்ற ஆயுதத்தை தவறாகப் பயன்படுத்தியதன் விளைவு இறுதியில் என்ன ஆனது என்பது எல்லோருக்கும் தெரியும். ஊடக சுய நலவாதிகளின் சொந்த நலன்களும், சர்வதேச மேலாதிக்க நலன்களும் மேலோங்கியிருந்த படியால் அடிமாடுகளுக்குள் அகப்பட்டிருந்த அப்பாவி மக்களின் நலன்கள் கண்டுகொள்ளப்படாமல் அடிபட்டுப் போய்க்கிடந்தன.

நமது நாட்டிலும் உரிமைப் போராட்டம் என்ற பெயரில் அரங்கேறிய அத்தனை அழிவு நாசகார ஆழ நிலைகளுக்குள்ளும் எமது பாரம்பரிய கலாசார பண்பாட்டின் உயர் விழுமியங்களும் மாண்புகளும் மாண்டு போய்விட்டிருந்தன.

இந்தப் பாரிய இழப்புக்கும் பயங்கரவாதிகளுக்கும் வன்முறையாளர்கள் மாத்திரம்தான் பொறுப்பு என்று பொதுவில் கூறிவிட்டு நியாயம் கற்பித்து விடமுடியாது. இந்த விடயத்தில் ஊடகங்களினதும் ஊடகவியலாளர்களினதும் பங்கும் பணியும் அபாரமானதாக இருந்தது.

ஆனால் துரதிருஷ்ட வசமாக நமது வாள் முனையிலும் பேனா முனையிலும் புத்தியே மழுங்கியிருந்தது என்பதை கடந்த கால வரலாறு நமக்குக் குறிப்புணர்த்தி நிற்கின்றது.

சுய நலத்திற்கு விலைபோன, குறுகிய சிந்தனை வட்டத்திற்குள் வட்டமடிக்கின்ற ஊடகவியலாளர்களினால் பயன்படுத்தப் படுகின்ற ஊடக ஆயுதமும் உலகில் அழிவையே தோற்றுவிக்கும்.



**"மகத்துவம் மிக்க இந்த ஊடகவியல் பணி என்பது சில சமயங்களில் சமகாலத்தின் அரசியல் சமூக பொருளாதார ஆதிக்கங்களுக்கும் சுய நலன்களுக்குள்ளும் அகப்பட்டு அதன் தனித்தன்மையை இழந்து விட்ட சந்தர்ப்பங்களும் உண்டு. குறிப்பாக இந்த ஊடகவியலை தான்தோன்றித்தனமாகப் பயன்படுத்தி அழிவு நாச வேலைகளுக்குத் தூபமிட்ட பல சந்தர்ப்பங்களும் உண்டு. ஆனால், சுய நலத்திற்கு விலை போன, குறுகிய சிந்தனை வட்டத்திற்குள் வட்டமடிக்கின்ற ஊடகவியலாளர்களினால் பயன்படுத்தப்படுகின்ற ஊடக ஆயுதமும் உலகில் அழிவையே தோற்றுவிக்கும்."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானின் அவமானச் சின்னம்?

**உலகம்** முழுவதும் புகழ் பெற்றுவிட்ட பின்லேடன் வீடு திடீரென இடித்துத் தகர்க்கப்படத் தொடங்கியது. பாகிஸ்தான் அபோத்தாபாத்தில், கடந்த மே மாதம் அமெரிக்க சீல் அதிரடிப் படையினர் ஹெலிகொப்டர் மூலம் குதித்து பின்லேடனைச் சுட்டுக் கொன்ற வீடு இது.

இந்த வீட்டை இடித்து தரைமட்டமாக்கி அது இருந்த இடமே தெரியாதபடி செய்துவிடும் திட்டத்தை பாகிஸ்தானிய அரசு கடந்த மாதமே எடுத்திருந்ததாக இப்போது தெரிய வருகிறது. ஆனால், இந்த முடிவை பாகிஸ்தானிய அரசு இரகசியமாக வைத்திருந்தது. இரகசியம் காப்பதற்காக வீட்டை இடிக்கும் பணியை தமது பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்காமல், தனியார் கட்டுமான நிறுவனம் ஒன்றிடம் ஒப்படைத்திருந்தது பாக். அரசு.

அந்தப் பகுதி விழித்துக் கொள்வதற்கு முன்னரே, அதிகாலை வேளையில் புல்டோசர்கள் சகிதம் வந்திறங்கிய ஒரு குழு வீட்டின் மதிற் சுவரை இடிக்கத் தொடங்கிய போதுதான், அக்கம் பக்கத்தில் இருந்தவர்களுக்கே பின்லேடன் வீடு இடிக்கப்படும் விடயம் தெரியவந்தது. பலரும் அங்கே கூடிவிட்டனர்.

இதையடுத்து, தொடங்கிய சில நிமிடங்களில் இடிக்கப்படுவது நிறுத்தப்பட்டது.

அதன்பின் காலையில் ஆயுதம் ஏந்திய பாதுகாப்புப் படையினர் கொண்டுவந்து இறக்கப்பட்டனர். அவர்கள் வீட்டுக்கு வெளியே பாதுகாப்பு வளையம் அமைத்து யாரும் நெருங்க முடியாதபடி பார்த்துக் கொண்டனர். வீடு தரைமட்டமாகும்வரை மீதலை யில்லாமல் வெளியே நடமாட வேண்டாம் என அந்த ஏரியாவாசிகள் எச்சரிக்கப்பட்டனர்.

அப்பகுதியிலிருந்தும் மக்கள் கூடுவதை யாராலும் கட்டுப்படுத்த முடியவில்லை. காலை 10 மணிக்கு அதிகாரிகள் குழு ஒன்று வந்து, வீட்டினுள் மீதமாக இருந்த பின்லேடன் குடும்பத்தின் பொருட்களை ஒரு ட்ரக்கில் ஏற்றி, பெயர் குறிப்பிடப்படாத இடம் ஒன்றுக்கு எடுத்துச் சென்றனர். அதன்பின், இரவு 8.30க்கு வீட்டை இடிக்கும் வேலைகள் மீண்டும் தொடங்கப்பட்டன. இரவோடு இரவாக இடிக்கும் பணி நடைபெற்று, அதிகாலை நான்கு மணியளவில் முடிந்தது.

பின்லேடன் கொல்லப்பட்ட மதிப்பில் அதன் பெறுமதி 85 மில்லியன் பாகிஸ்தான் ரூபா.

பின்லேடன் கொல்லப்பட்டபின் இந்த வீட்டினுள் யாரும் புகுந்து விடாதபடி பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருந்தது பாகிஸ்தான் அரசு. வீட்டுக்கு அருகே நெருங்கி யாரும் போட்டோ எடுக்கக்கூடாது என அறிவிப்புப் பலகை வைக்கப்பட்டிருந்தது. கடந்த 10 மாதங்களில், இந்த வீட்டை நெருங்கி போட்டோ எடுத்ததற்காக மொத்தம் 8 பாகிஸ்தானிய மற்றும் வெளிநாட்டுச் செய்தியாளர்கள் கைது செய்யப்பட்டனர்.



வீடு, பலரும் வந்து பார்வை யிடப்படும் சுற்றுலா மையமாக மாறிவருவதை பாகிஸ்தான் அரசு விரும்பவில்லை என்று கூறப்படுகின்றது. பாகிஸ்தான் அரசுக்கே தெரியாமல் அமெரிக்க அதிரடிப் படை நாட்டுக்குள் புகுந்து பின்லேடனை சுட்டுக்கொன்ற இடத்தை, தமது அரசுக்கு ஒரு அவமானச் சின்னமாக அவர்கள் கருதி இருக்கலாம்.

தமது இறுதிக் காலத்தில் பின்லேடன் வசித்த இந்த மூன்று மாடி வீடு, 38,000 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டிருந்தது. அந்த ஏரியாவில் இன்றைய

இரண்டு மாதங்களுக்குமுன், அனுமதி பெறாமல் இந்த வீட்டை பார்வையிட வந்த ஜெர்மன் நாட்டு தூதுவரும் அவரது மனைவியும் கைது செய்யப்பட்டனர்.

இவ்வளவு கட்டுப்பாடுகள் இருந்தும், பின்லேடன் வீட்டுக்கு வெளியேயிருந்து அனுமதியில்லாமல் எடுக்கப்பட்ட போட்டோக்கள் வெளியாகத்தான் செய்தன. அதை பாகிஸ்தான் அரசால் தடுத்து நிறுத்த முடியவில்லை.

'பூதம் காத்த புதையல்' போல, இந்த வீட்டை பொத்திப் பாதுகாக்க வேண்டிய அவசியம், இனிமேல் பாகிஸ்தான் அரசுக்கு கிடையாது!

நன்றி : இணையம்

# தண்ணீர்!

## பொலிவியா தரும் படிப்பினை

தே. இலட்சுமணன்

**தண்ணீர்** வழங்கும் திட்டத்தை யும், தன்னுடைய பொறுப்பு அல்ல என்று தட்டிக்கழித்துவிட தேவையான மசோதாவை நாடாளுமன்றத்தில் கொண்டு வரத் தயாராகி விட்டது இந்திய மத்திய அரசு. அதற்கு வேண்டிய பல்வேறு விளைநிலங்களை நாடு முழுவதும் ஏற்படுத்தியுள்ளது.

தண்ணீர் மனிதனின் அடிப்படை உரிமை. உயிர் வாழ்வதற்கான ஆதாரம் அது. அரசு, மனிதர்களுக்கு சுத்தமான தண்ணீரை வழங்க வேண்டியது. அதற்கான உத்தரவாதத்தை உறுதிப்படுத்த வேண்டியது அரசின் அடிப்படை கடமை. ஆனால் இப்போதைய மத்திய ஆட்சியாளர்களின் சதித்திட்டத்தின் காரணமாக பயன்படும் வகையில் இயற்கை தந்துள்ள வளங்களை - குறிப்பாகத் தண்ணீரை சந்தைச் சரக்காக ஆக்க ஐந்தாண்டுகளுக்கு முன்னாலேயே உலக வங்கி ஆணையிட்டுள்ளதைத்தான் இந்திய அரசும் அகமகிழ்வோடு அமல்படுத்திட விளைகிறது. இது இயற்கை நீதிக்கே எதிரானது.

இதுதொடர்பாக, நம் முன்பாக பொலிவியா நாட்டில் நடந்த நிகழ்வுகள் நமக்கு நல்ல பாடமாக உள்ளன.

பொலிவியாவில் எல்லா பொது நிறுவனங்களும், மின்சாரம், ஆகாயப் போக்குவரத்து, சுரங்கம், காடுகளில் கிடைக்கும் எல்லா வளங்களும் மற்றும் செய்தித் தொடர்புகள், இப்படி - அனைத்தும் முழுக்க, முழுக்க தனியார்மயம் ஆகிவிட்டன. அந்த நாட்டில் மிச்சமிருந்த தண்ணீர் ஒன்று தான் தனியார்மயமாகாமல் இருந்தது. அதைப் பொறுக்காத உலக வங்கி தண்ணீரையும், தனியாருக்குத் தாரை வார்க்க பொலிவியா அரசை நிர்ப்பந்தித்தது. ஆசை வார்த்தைகள் பல வற்றை அள்ளி வீசியது. பொலிவியா அரசும் மயங்கி போய் விட்டது. பொலிவியாவின் நீர் வளங்களை தனியார் கம்பெனிகளுக்கு ஒப்பந்தம் போட்டுக் கொடுத்து விட்டால், பொலிவியா அரசு உலக வங்கிக்கு கொடுக்க வேண்டிய கடன் 600 மில்லியன் டாலரை இரத்து செய்து விடுவதாக தாஜா செய்தது. அரசும் ஏற்றது. குழியில் வீழ்ந்தது. ஆம், ஆண்டுகள் பலவாக, பல தலைமுறைகளாக சமூகத்தின் ஆளுமையின் கீழ் சொந்தம் கொண்டாடப்பட்ட நீர் சரக்கு - பண்டம் என நாமகரணம் சூட்டப்பட்டு, தனியார் கம்பெனிகளின் ஆளுகையின் கீழ் கொண்டுவரப்பட்டு, அதற்கு விலையும் நிர்ணயிக்கப்பட்டது. மக்களின் அடிப்படை வாழ்க்கையோடு ஜீவாதாரத்தோடு பொலிவியா எதேச்சதிகார அரசு விபரீத விளையாட்டைத் துவக்கி விட்டது. குடிநீர் மட்டுமல்ல, விவசாயத்துக்குப் பயன்படும் பாசன நீரும் அளவின் அடிப்படையில் விலைக்கு விற்கப்பட்டது.

மனித வாழ்க்கையோடு இணைந்து இருந்த தண்ணீர் இப்போது அந்நியப்படுத்தப்பட்டு விட்டது. பொலிவியாவின் ஜனாதிபதியாக இருந்த ஒரு சர்வாதிகாரி - ஹூகோ பென் சர் என்ற தான் தோன்றித்தனமாக ஆட்சி நடத்தியவர் தான் இந்தக் கொடுமையைச் செய்தவர்.

வண்டனை இருப்பிடமாகக் கொண்ட அந்நிய கம்பெனிகளான இண்டர்நேஷனல் வோட்டர் லிமிடெட், அதோடு இணைந்து செயல்படும் இத்தாலியன் யுடிலிட்டி எடிசன் மேலும் அமெரிக்காவை இருப்பிடமாகக் கொண்ட பாச்டட் எண்டர்பிரைசஸ் - பொலிவியாவுக்கு சொந்தமான தண்ணீரை மொத்தமாக குத்தகைக்கு எடுத்து விட்டன. எடுத்த எடுப்பில் சாதாரண மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டார்கள். மாதம் உணவுக்கு ஆகும் செலவை விட தண்ணீருக்கு ஆகும் செலவு அதிகரித்தது. நீரின் விலை திடீரென 35 சத விகிதம் ஏற்றப்பட்டு விட்டது.

2000 ஜனவரி மாதம் கொதித் தெழுந்த மக்கள், வேலைநிறுத்தம் செய்தார்கள். சாலைகள் மறிக்கப் பட்டன. நான்கு நாட்கள் கோச்ச பாம்பினாஸ் நகரம் ஸ்தம்பித்தது. வேலை நிறுத்தத்தின் வீச்சு, சாலை மறியல் அரசை அதிர வைத்தது. உடனே தண்ணீர் விலையைக் குறைப்பதாக அரசு செய்தி வெளியிட்டது. ஆனால் வாக்குறுதி அமல்படுத்தப் படவில்லை.

மக்கள் போராட்டக்குழுவை உருவாக்கி விட்டனர். இதனை முறியடிக்க ஜனாதிபதி இராணுவ சட்டத்தைப் பிரகடனப்படுத்தினார். விளைவு, இது உள்நாட்டுப்போராக மாறி விட்டது. இதற்கு வோட்டர் வார் எனப்பெயர் சூட்டப்பட்டது. இந்தச் சொல் உலகம் முழுவதும் ஒலித்தது.

இதனால், சர்வதேச மட்டத்தில் பொலிவிய அரசுக்கு எதிராக கண்டனக் கணைகள் அனல் பறந்தன. நிலைமையை சமாளிக்க முடியாது பொலிவிய அரசு திணறியது.

ஆட்சி மாற்றப்பட்டது. மக்களின் பிரச்சனைக்கும் தீர்வு ஏற்பட்டது. பொலிவியா, இந்திய மக்களுக்கு தெரிவிக்கும் படிப்பினையும் இதுதான்.

மக்களுக்குத் தண்ணீர் வழங்கும் திட்டத்தைத் தனியார் கையில் தாரைவார்க்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இந்த சதி நிறைவேறினால், அடுத்து இயற்கை தந்த வரமான காற்றையும் ஒரு பண்டம் என்று கூறி அதன் மீதும் தனியார் கம்பெனிகள் பாத்தியதைத் கொண்டாட தனியாருக்கு சொந்தமாகச் சட்டம் கொண்டு வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

மக்களுக்கும், அனைத்து உயிர்களுக்கும் அடிப்படையாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கலாச்சார சிக்கலான ஆடைகளின் மத்தியில் கிராமத்துக் கிளிக் குஞ்சொன்றைக் கண்டான். அவளை அறியாமல் அவனுக்குள் எழுந்த மின்சாரத் தூண்டல் அவளிடம் அத்தனை கிராமத்து அழகுகளும் குவிந்திருப்பதைக் கண்டான். அவன் மனம் காதலை சுவாசிக்கத் துணிந்தது. ஓவியனாகத் துடித்தான். கவிஞனாக முயற்சித்தான் இப்படி எத்தனை எத்தனையோ மாற்றங்கள்... இவளின் அடி மனதில் பற்றியெரிந்த காதல் நெருப்பு அவனது வாழ்க்கைப் பாதையை எவ்வாறு புரட்டிப்போட்டது என்பதுதான் மீதிக்கதை.

01

கிண்ணியா ஜே. பிரோஸ்கான்

தனக்குள் மோதி விழுந்த ஞாபக நுரைகளை தொழுதவனாய், சூரியன் உண்ட மஞ்சள் வெயில் நேரப் பொழுதொன்றில் நேற்று தன் மனதை கீறிவிட்டுச் சென்ற இரத்தச் சுவடுகளை பாதிக் கண்ணீருடன் வரவேற்றான் குமரன்.

வற்றாத அந்த நினைவுகள் இல்லறப சந்தோசிப்புக்களுடன் சேர நியாயமில்லை. வேதனைகளில் சல்லாப மின்னல்களால் மலைப்பாம்பாய் விழுங்கிய முழு நிஜத் துகள்களையும் சல்லடையாக்கப்பட்ட வாழ்தலின் சிறகுடைப்பையும் விஷமத்தனமான காதலின் முள் குத்துதலையும், மீட்டுப் பார்ப்பதில் அவ்வளவு பெரிய குற்றம் கிடையாது.

விடியலைத் தொலைத்த அந்த கிராமத்து ஆனங்களின் கனவு அவ்வளவு புலம்பலின் சூட்சும காலத்தில் வேரூன்றி தனம் தனக்குள் சுற்றிக் கொள்ள முடியாமல், மழையைத் தொலைத்து சூரியக் கதிர்களை கட்டாயக் குத்தகைக்கு எடுத்து பசுமையை தூசாக்கி பல தசாப்தமாகிவிட்டது. சோறு தண்ணீருக்கு வானுக்கு தூவல் எழுப்புவது போலாகிறது.

அப்படி அந்நிமம் கண்ட யாசக குடும்பத்திலிருந்து விதையாய் தூவப்பட்டவன் நான். இலவம் பஞ்சுகளை நூலாக்கி எனக்கு அதை பாவாக்கி செறிக்க வைத்த பயிர் நான். நான் செழித்த காலம் என்னவோ என் ஊருக்கு மழை பாவியமாய் கொட்டியது. அதனால் என்னவோ குமரன் ஊர்ப் பிள்ளை ராசியில் கொண் டெழுந்தவனிய் காலை வசந்தம் போல் விடியாமல் தூங்கியிருக்கும் எம் கிராமம், இன்று 'கண்ணாடிச் சோலை'யாய் ஒளி விட்டுச்சிரிக்கிறது.

தரிசு நிலங்கள் பெயர் பொறிக்கப்பட்டு பசுமையை பொழிந்தது. வயல் செழித்து வளர்ந்தது. யாசகன் வீட்டுப் பிள்ளை என்னை ஊர் பாசகனாய் தத்தெடுத்தது. வரட்சி என்னைக் குடுஞ்சமையாம் விட்டு, கல்விகளாய் பரிமாணித்து விட்டு அகன்றது. ஆத்தனைக்கு எதிர்ப்பட்ட சூரியன் அப்பப்போ விடுமுறைக்காய் வீட்டினுக்கு வந்து போனது.

மழைக்காலத்தின் இசையின் பரிமாணம் பசுமைப்பாடல் சிகரம் நோக்கி ஒலித்தது. எல்லா வீட்டிலும் புன்னகை உழைப்பினால் உயர்ந்தது. அப்போது என் அம்மா அப்பாவுக்கு ஏற்பட்ட பேராசை எண்ணத்தை ஆசை என்றுதான் சொல்ல வேண்டும்.

நான் ஒரு நீண்ட கல்வியை அருந்த வேண்டும் என்றென்னை நகரத்திற்கு அனுப்பிவைக்க ஊர் கூடி நான் படிப்புக்காய் செல்லும் நாளை திருவிழா கோலமாய் கிராமமே அலங்கரிக்கப்பட்டு குதிரை வண்டியில் என்னை அனுப்பி வைத்தார்கள்.

ரொம்பவும் குனிய வாழ்க்கைக்குள் சிறைப்பட்டு வாழ்ந்த குமரனுக்கு இந்த நாகரிக வாழ்க்கை பிரமாண்டமானது. ஆண்களின் கலாசார சிக்கனம் இவன் விழிகளை மூடிச்சென்றது.

பெண்களின் கைகளில் கைக்குட்டை இருப்பதற்கு பதிலாக கைபடக்கத் தொலைபேசியை கண்டான். முழுமையாய் வெட்கப்பட்ட கிராமத்து குமரிகளின் மத்தியில் பெண்மை நுகரத்துடித்தான் இந்த நாகரிக குமரிகளிடம்.

இத்தனையும் இவனால் ஜீரணிக்க முடியவில்லை. மௌனத்தோடு சிலகாலம் தனிமை வாழ்க்கை நடாத்திப் பார்த்தான். அவனால் முடியவில்லை. மௌனம் இரைச்சலிட்டது. மனதுக்குள் ஒரு விரிசல் விரிவலையாய் ... பொங்கியது.

சமூகத்தில் பூசணம் பூசப்பட்ட கலாசாரப் போர்வையை கத்தரிக்க வேண்டும்... வேண்டும் அவனது இரத்த நாளம் துடித்தது. ஆனால் முடியாது எப்படி இது ஒருத்தனால் சாத்தியமாகும்? படைத்தவனுக்கு மட்டுமே இது சாத்தியமான ஒன்று.

நெருப்பு மனதை ஆறுதல் நீரால் அணைத்துக்கொண்டான். அமைதி கண்டான். இப்படி தன் படிப்பு உயர்வு காலமும் தனிமையில் தான் அந்த விரமான அருபர்வைத் அவன் விழிகள் பறித்துக்கொண்டன. அவனது அசப்பின் ஆழத்தினை பொத்திவைக்க முடியவில்லை.

கலாசார சிக்கன ஆடை அழகிகளின் மத்தியில் கிராமத்து கிளிக் குஞ்சொன்றை கண்டான்.

அவனால் வார்த்தைகளை சிறைவைக்க முடியவில்லை அந்த தாரகையிடம் பேசவே துடித்தான். அவளை அறியாமல் அவனுக்குள் எழுந்த மின்சாரத் தூண்டல் அது அவனது கிராமத்து குமரிகளின் அத்தனை அழகையும் இவளிடம் கண்டான்.

அப்போது அவனுக்கு பெண் மீது ஏற்பட்டு இருந்த வெறுப்புக்களை நியாயப் படுத்திப் பார்த்தான். இவளின் அடக்கத்தை பணிவை அழகை பார்க்கும் போது அது பிழையாகவே தோன்றியது.

அவனுடைய முன்வைப்பை கோபம் தணிந்தது. காதலை சுவாசிக்க துணிந்தது. சமூகப்பார்வை காதல் பார்வையாய் மாறியது.

இப்போது குமரன் கிழமை மேலாக துதித்தான் கூச்சலிட்டான் மனதுக்குள் இவ்வளவு காலமும் வெறுத்து வாழ்க்கை வாழ்ந்ததாக உணர்ந்தான். ரோஜாச் செடியின் முட்களை மட்டும் பார்த்தவன், இன்றுதான் ரோஜாவின் இதழ்களின் மென்மையை ரசிக்கத் தொடங்கினான்.

ஓவியனாகத் துடித்தான். கவிஞனாக முயற்சித்தான் இப்படி அவளைத் தான்புடைய பரிமாண மாற்றத்திலுள் புதுத் தினம் எழுந்து சாதித்தான்.

என்ன ஆச்சரியம்! காதல் கற்றுக்குள்ளும் வந்து விட்டது. அவனே மனதுக்குள் மனமிரங்கினான் தன்னைத் தானே ஒரு புதியவனாய் புதிய பாதை வகுத்தான்.

(தொடரும்...)




கிண்ணியா நஸார் இஜாஸ்

இம்ரான் திருமணம் முடித்து மூன்று வருடங்கள் பூர்த்தியாகிவிட்டது. ஆனால் இன்று வரை தன்னைப் பெற்றெடுத்த பெற்றோர் உட்பட தன்னுடைய மனைவி முஜாகிதாவின் பெற்றோர் மற்றும் முஜாகிதாவின் தங்கை நஸ்ஹா என அனைவரையும் அவனே கவனித்து வருகின்றான். அன்று அரச விடுமுறையாகையால் தன் பிள்ளைகளின் வேண்டுகோளிற்கிணங்க தனியார் வங்கியொன்றின் முகாமையாளராகக் கடமை புரியும் இம்ரான் தன் இரு பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு வெளியில் உலாச் சென்றான். சென்றவன் ஆங்குமிங்குமாக பல இடங்களை முத்தமிட்டு இறுதியாக இரு மணி நேரங்களின் பின் கடற்கரை மண்ணை முத்தமிட்டான். கடற்கரை வளாகத்திற்குள் சென்று தன்னுடைய காரை நிறுத்தவும் தன்னுடைய பிள்ளைகள் காரிலிருந்து கீழே இறங்கவும் சரியாக இருந்தது.

தன் பிள்ளைகள் இருவரும் கடலிலிருந்து பாய்ந்து வரும் அலைகளோடு விளையாடி கொண்டிருந்ததை இரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் இம்ரான். இப்படியே ஓர் சில நிமிடங்கள் கழிந்திருக்கவே எதேச்சையாகத் தன் பார்வைகளை வேறு திசையில் திருப்பினான். இவ்வாறு வேறு திசைகளில் தன் பார்வையைத் திருப்பிய இம்ரானுக்கு அங்கு கண்ட காட்சி பெரும் அதிர்ச்சியைத்தான் ஏற்படுத்தியிருக்கும். உள்ளம் இருட்டுக்குள் புதைத்திருப்பதைப் போன்றதொரு உணர்வு அவனுள் புகுந்து கொண்டது. இந்தக் காட்சியைக் கண்டதிலிருந்து வேறு ஒரு சிந்தனைக்குள்ளாய் மூழ்கிப் போனவனை அவனுடைய குழந்தைகளின் பேச்சுக்குரல்தான் சுய நினைவுக்குக் கொண்டு வந்தது.

"டாடி... வாங்க டாடி வீட்டுக்குப் போகலாம்."

"ஓ.கே. ஏறுங்க போகலாம்." காரும் புறப்பட்டது பதினைந்து நிமிட ஓட்ட வேகம் கார் வீட்டை வந்தடைந்தது. வீட்டுக்குள் நுழைந்து சோபா செட்டில் உட்கார்ந்திருந்த வேளையிலும் கடற்கரைப் பூங்காவில் கண்ட காட்சியே அவனை அவன் மண்டைக்குள் ஆணியாய் சொருகப்பட்டுக் கொண்டிருந்தது. இப்படியிருக்கையில் இம்ரானின் மனைவி முஜாகிதாவும் அவ்விடம் வந்து கணவனின் உணர்வுகளைப் புரிந்து கொண்டவளாய் கணவனிடம் வினாதொடுத்தாள்.

"என்னங்க! என்ன ஏதோ பெரிய சிந்தனை போல இருக்கு."

"அது ஒன்னுமில்ல முஜாகிதா. இப்ப ஒரு அரை மணிநேரத்துக்கு முன்னாடி சிஸ்ரன் பார்க்ல நம்ம பிள்ளைகளைக் கூட்டிப் போயிருந்தப்போ ஒரு காட்சியைக் கண்டேன். அந்தக் காட்சி என்னை ரொம்பவே தாக்கிடுச்சி."

"அப்படி என்னத்தங்க கண்டீங்க. உங்கள இப்படி கவலைப்பட வெச்ச விசயம் என்னன்னு சீக்கிரமா சொல்லுங்க நானும் கேக்கிறேன்" என்றாள் இம்ரானின் மனைவி முஜாகிதா.

"இல்ல அதை எப்படி உங்கிட்ட சொல்றதுன்னுதான் தெரியல."

"புதிர் போடாம சீக்கிரமா சொல்லுங்க எனக்கு ரொம்ப வேலை இருக்கு."

"முஜாகிதா, சிஸ்ரன் பார்க்ல மையப்பில ஓர் ஆணும் பொண்ணும் உட்கார்ந்து பேசிக்கிட்டிருந்தாங்க. ரெண்டு பேருமே லவ்வர் மாதிரிதான் தெரிஞ்சாங்க. அவங்க அருகப் பக்கமாத் திரும்பியிருந்தால அவங்க யாருன்னு என்னால தெரிஞ்சிக்க முடியல."

இவ்வாறு கூறிக் கொண்டிருந்தவனை நோக்கி "இப்ப நீங்க என்னதான் சொல்ல வாறீங்க?"

"அப்புறம் அந்த ரெண்டு பேர்ல அந்தப் பொண்ணோட தோற்றத்தைப் பின்புறத்தால பார்க்க போதே அந்தப் பெண்ணையே எங்கேயோ கண்ட ஞாபகம் எனக்கு."

இம்ரானே தொடர்ந்து பேசினான்.

"நானும் அது யார்ன்னு பார்ப்பதற்காக பல முயற்சிகளை மேற்கொண்டு ஒருவாறு அது யாருன்னு பார்த்தேன். உடனே எனக்கு மனம் உடைஞ்சு போச்சு. ஏன் தெரியுமா? அங்க நான் பார்த்தது வேற யாருமில்ல நம்ம நஸ்ஹாவைத் தான்."

இவ்வாறு இம்ரான் கூறியதும் முஜாகிதா சற்று கோபம் கொண்டவளாய் "என்னங்க பேசுறீங்க. நஸ்ஹா மாதிரி அவ பண்றதாவது..."

"அப்ப நான் சொல்றது பொய்ன்னு நினைக்கிறியா?"

"அது இல்லங்க நீங்க இப்பதான் பார்க்ல கண்டன்னு சொல்றீங்க. ஆனா அவ காலையில இருந்து தலைவலிக்கிறதால வெளியிலேயே போகலைங்க."

இரு பக்கமும் பேச்சு கலவரம் போல மாறவே இருவருமாய் நஸ்ஹாவின் அறையை நோக்கி நடக்கலானார்கள். அங்கே அறையில் அவள் உறங்கிக் கொண்டிருந்தாள்.

முஜாகிதா தற்போது பேசத் தொடங்கினாள்.

"அப்ப இது யாருங்க? நீங்க யாரையோ பார்த்து நஸ்ஹான்னு கண்டுக்கிட்டு பேசுறீங்க." என்றவள் சமையலறையை நோக்கி நடந்தாள். சமூகத்தை சீரழிப்பவர்களுக்கு ஆதரவு கொடுப்பவர்கள் இருக்கும் வரை சமூகம் சீரழிந்து கொண்டுதான் இருக்கும் என இம்ரான் தன் மனதுக்குள் நினைத்தவனாய் தன் அறைக்குள் நுழைந்துவிட்டான்.

ஆனால், சமையலறைக்குள் நுழைந்த முஜாகிதாவும் சிந்தித்துக் கொண்டு தான் இருந்தாள். தன் தங்கைக்கு தலைவலிக்கு மாத்திரை கொடுக்கச் சென்ற போது தன் தங்கை அணிந்திருந்த ஆடைக்கும் தற்போது அணிந்திருந்த ஆடைக்கும் உரிய வித்தியாசம் பற்றி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்மொழி



மூட கொள்கைகளை விடாப் பிடியாகப் பற்றிக் கொள்ள வேண்டாம். புதிய நன்மைகளை ஏற்க ஆயத்தமாய் இருங்கள். பிறர் வெட்டிய கிணறு என்பதற்காக, அதில் ஊறும் தீர்த்தத்தை நிராகரிக்க வேண்டாம். நம் முன்னோர் தோண்டிய கிணறு என்பதற்காக, உவர் நீரைப் பருகி முட்டாளாக வேண்டாம்.

# சிந்தியா பதில்கள்

✉ சிந்தியா! ஜெனிவா செல்லாத கூட்டமைப்பின் தீர்மானம் பற்றி என்ன நினைக்கிறீர்?
பி. ஆறுமுகநாதன், ஹற்றன்.

▲ இதுநாள் வரை நீத்தி வைக்கப்பட்ட கூட்டமைப்பின் புகைச்சல் இப்போது வெளிக் கிளம்பியுள்ளது.
இது ஆரம்பம் மட்டும் தான். தலைமைப் போட்டிக்கான பனிப்போர் இனிப் பகிரங்கமாகவே நடக்கும்.
சுரேஷ் பிரேமச்சந்திரனின் முக்கியத்துவத்தை இல்லாமல் செய்து, சுமந்திரனை முதன்மைப்படுத்தும் தமிழரசுக் கட்சியினரின் தகிடுதத்தம் இது.

✉ சிந்தியா! வன்னியில் மீள் குடியேறிய மக்கள் அரச அதிகாரிகளின் இலஞ்ச மோகத்தில் சிக்கியிருப்பதாகச் செய்திகள் வருகின்றனவே...?
எம். பூலோகராசா, திருநகர், கிளிநொச்சி.

▲ ஆம்! நீங்கள் சொல்கின்ற செய்திகள் எனது கண்களிலும் பட்டது.
முன்னர் இரத்தம் சிந்தும் அரசியல் சூழலில் தமது வாழ்வை அடகு வைத்திருந்த அப்பிரதேச மக்கள் இப்பொழுது அரச அதிகாரிகள் எனப்படும் ஒரு சில பணப்பிசாசுகளின் கரங்களில் தங்கள் வாழ்வை இழந்து கொண்டிருக்கின்றனர்.

✉ சிந்தியா! மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் வெற்றிபெற்றால் நிலைமை எவ்வாறு இருக்கும்?
ஏ. வேலுப்பிள்ளை, கொழும்பு 06.

▲ வெளியில் பேசப்படுகின்றது போன்று பாரிய தாக்கங்கள் வருவதற்கான வாய்ப்பில்லை.
ஏனெனில், குறித்த கூட்டத் தொடரில் கண்டனத் தீர்மானம் ஒன்றே மேற்கொள்ளப்பட இருக்கின்றது. இதனால், உடனடியாகப் பாதிப்புக்கள் எதுவும் வருவதற்கு சந்தர்ப்பமில்லை.
குற்றஞ்சாட்டப்படுகின்ற மனித உரிமை மீறல் தொடர்பான நீதியான விசாரணையைக் கோரிய அழுத்தங்கள் மட்டுமே அதிகரிக்கப்படும். அப்போதும் சர்வதேசத்தை திருப்திப்படுத்தக்கூடிய பொறிமுறை ஒன்றை நடைமுறைப்படுத்தத் தவறினால், அடுத்தடுத்த கட்டங்களில் சில சங்கடங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உருவாகலாம்.

✉ சிந்தியா! நம் நாட்டு அரசியல்வாதிகளைப் பற்றி என்ன நினைக்கின்றீர்?
எஸ். லோகீஸ்வரன், வவுனியா.

▲ லோகீஸ்வரன்! நம் நாட்டில் என்று இல்லையா எதற்காகச் சுருக்கிவிட்டீர்கள். அரசியல்வாதி என்பது உலகப் பொதுச்சொல். அவர்களைப் பற்றி ஷெக்ஸ்பியர் என்ன சொல்கிறார் தெரியுமா?
"அரசியல்வாதி கடவுளையும் ஏமாற்றக்கூடியவன்"
லோகீஸ்வரனுக்கு இப்ப புரிகிறது தானே!

✉ சிந்தியா! தற்போது பாரதி இருந்தால் பெண்களைப் புகழ்வாரா? அல்லது இகழ்வாரா?
ஜி. தாமரை, மட்டக்களப்பு.

▲ அவரைப் பார்த்து ஆண்கள்தான் கண்டனக் கணைகளைத் தொடுப்பார்கள் 'எனப்பா பெண் சுதந்திரம் வேண்டி நின்றீர்! அதனால், அடிமைகளாய் அவதியுற்று அமைதியை இழந்து அலைவது நாமன்றோ!" என்று.

✉ சிந்தியா! இரவில் நித்திரை வருவதில்லையே. என்ன செய்யலாம்?
வி. பிரேமலதா, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

▲ பிரேமலதா! உங்களது இந்தக் கேள்விக்குப் பதிலளிப்பதற்கு சில அடிப்படை விபரங்கள் தேவைப்படுகின்றன. அவை யாவென, நீர் காதலிக்கின்றீரா? கடன்பட்டவரா? கடன் கொடுத்தவரா? வாழ்க்கைத் துணையைத் தேடிக் கொண்டவரா?... இப்படி கேட்டுக்கொண்டே போகலாம். அதனால் இத்துடன் நிறுத்திக் கொள்வோம்.

✉ சிந்தியா! காதலரிடம் கண்டிப்பாக கேட்க முடியாதது எது? கண்டிப்பாகக் கொடுக்க வேண்டியது எது?
ஆர். கமலநாதன், பருத்தித்துறை.

▲ கேட்கக்கூடாதது! "இன்னொரு பெண்ணையும் காதலிப்பதற்கான அனுமதி" கொடுக்க வேண்டியது நிறையவே இருக்கின்றது அதில் முதன்மையானது நம்பிக்கை!"

✉ சிந்தியா! புத்தகப் பூச்சியாய் இருப்பதால் சாதித்துவிட முடியுமா?
செ. விஜிதா, நெடுந்தீவு.

▲ முடியாது! அறிவை வளர்த்துக் கொள்ள, தகவல்களைப் பெற்றுக் கொள்ள வாசிப்பு இன்றியமையாதது என்பது ஏற்றுக்கொள்கின்றேன். ஆனால், சாதிப்பதற்குப் பெற்ற அறிவினையும் கிடைத்த தகவல்களையும் சமூகத்தின் போக்கோடு இணைத்து பரீட்சித்துப் பார்த்தால்தான் சாதனைகளுக்கான வழி பிறக்கும்.

✉ சிந்தியா! பெண்கள் சிறந்த காரியத்தை சாதித்து விடுகிறார்களே?
கே. நிரஞ்சன், சங்கானை.

▲ நிரஞ்சன்! எங்கோ வசமாக மாட்டி பிய்ந்து நூலாகிவிட்டீர் என்பதை மட்டும் நன்றாகத் தெரிகிறது. இது உமக்கு மட்டும் கிடைத்த அனுபவம் அல்ல. நடிக்கும் வயதைத் தாண்டும் பலர் கடந்து வருகின்ற அனுபவங்கள் தான்.
"அனுபவம்தான் உற்ற ஆசான்" என்று எப்பொழுதோ யாரோ சொன்ன ஞாபகம். அது உங்களுக்கும் பொருந்தும். எதிர்காலத்தில் அவசரப்படாமல் சிந்தித்துச் செயற்படுங்கள். சிக்கல்கள் குறையும்.

✉ சிந்தியா! '3' படத்தில் சூப்பர் ஸ்டார் நடிக்கிறாரா என்று கஸ்தூரி ராஜாவின் கேட்டபோது மழுப்பிவிட்டுச் சென்றுவிட்டாரே?
ரி. கலைவாணி, மூளாய்த்தீவு.


▲ சூப்பர் ஸ்டாருக்கு இருக்கின்ற மவுசை வைத்து படத்திற்கு விளம்பரம் செய்ய முயற்சிக்கின்றார் போலும்.
செய்தி உண்மையாயின் துணிச்சலாக ஆம் என்று பதிலளித்திருப்பார். இல்லை என்று பதிலளித்தால் அத்துடன் செய்தியில் இருக்கின்ற சுவை குறைந்துவிடுமே! அதனால்தான் மழுப்பலாக பதிலளித்திருக்கின்றார் முன்னாள் இயக்குநர் கஸ்தூரி ராஜா. ஆக, இதிலிருந்து விளங்கிக் கொள்வது யாதெனில் 3 படத்தில் சூப்பர் ஸ்டார் நடிப்பது என்ற செய்தி இட்டுக்கட்டப்பட்ட வதந்தியே ஆகும்.



ஸ்ருதி, தனுஷ்

# இலக்கிய நயம் 67

**கே.வி. குணசேகரம்**



## 'பிணமென்று பெயர்'

**சமயங்கள்** வாழ்வில் நடப்பவற்றை உள்ளபடி கூறுபவை. அவை கூறாத எதுவும் உலகில் நடப்பதில்லை. ஆனால், பெரும்பான்மையான மனிதர்கள் தாம் சமயம் கூறியபடி வாழ்கிறோம் என்று கூறிக்கொண்டு வாழ்கிறார்களே தவிர உண்மையாகச் சமயம் கூறும் வழிவகைகளைப் பின்பற்றி வாழ்வதில்லை.

திருமந்திரம் சைவ சமய சாத்திர நூல். எனினும், அது கூறும் தத்துவங்கள் உலகில் வாழும் எல்லா இன மக்களுக்கும் பொருந்தும். உடல் நிலையில்லாதது. அத்துடன் அது என்று எப்படி அழியும் என்று யாருக்கும் தெரியாது. உயிர் நீங்கிய உடல் எதற்கும் பயன்படாது. சில மணித்தியாலங்களில் அது கெட்டுத்துர்நாற்றம் வீசத் தொடங்கிவிடும்.

ஒருவர் இறந்தவுடன் குடும்பத்தவர்கள் பெரும் துன்பமடைவர். ஊரவர், அயலவர், உறவினர், நண்பர்கள் எல்லோரும் கூடிப் பெரும் துக்கமடைவர். அவர் செய்தவற்றையும், செய்யாதவற்றையும் கூடியிருந்து பேசுவார்கள். அதன் பின் அவரது சொந்தப் பெயர், புனைப் பெயர்கள், கௌரவப் பெயர்கள், கல்வியால் வந்த பெயர்கள் யாவற்றையும் விட்டுவிட்டு 'பிணம்' என்பர். சவம் என்பர். உயிரோடு இருக்கும் வரை தான் யாவும் நிலைக்கும். உயிர் போனபின் நிலைப்பது எதுவுமில்லை.

இரங்கல் கூட்டம் வைப்பர். பல பிரமுகர்கள் பேசுவார்கள். பின் உயிர் நீத்த உடலைச் சுடலையில் கொண்டு சென்று தீக்கிரையாக்கி விட்டு, வீடு திரும்பி நீரில் மூழ்குவர். அதன் பின் ஊரவர்கள், நண்பர்கள், இனத்தவர்கள் அவரை மறந்துவிடுவார்கள். குடும்பத்தினர் முப்பத்தொரு நாட்களுக்குத் துக்கம் அனுஷ்டித்துக் கிரியைகள் செய்வர். அதன் பின் அவர்கள் தத்தமது கடமைகளைச் செய்யச் சென்றுவிடுவர்.

உலகில் பாவம், புண்ணியம் இரண்டும் தான் நிலையானவை. மற்றவையெல்லாம் போலியானவை. நல்ல முறையில் வாழவேண்டும். அடுத்தவர்களைத் தன்னைப் போல நேசிக்கல் வேண்டும். உதவிகள் செய்யாவிட்டாலும் உபத்திரவங்கள் செய்யாதிருத்தல் வேண்டும். தர்மமான முறையில் கடும் முயற்சி செய்தல் வேண்டும்.

முயற்சிதான் தெய்வம். முயற்சிக்க முயற்சிக்கப் பொருள் முயற்சிப்பவனை தேடிவரும். இதை நாம் வீட்டில் நட்டுண்டாக்கும் மரங்களைக் கொண்டே உணர்ந்து கொள்ளலாம். ஒரு தென்னையை நட்டு நன்கு பராமரித்தால் அத்தென்னை காய்க்கும் காய்கள் குடும்பத்திற்குப் போதும். தென்னையை நட்டுவிட்டுப் பராமரிக்காதுவிட்டால் அழுகிப் பட்டுவிடும். இது போன்றுதான் வாழ்க்கை. உயிருள்ள போது பயனுள்ள கருமங்களைச் செய்பவன் இறந்த பின்பும் வாழ்வான். திருவள்ளுவர், கம்பர், ஔவையார் போன்ற புலவர்கள் இன்றும் வாழ்கின்றார்கள். ஊரில் உள்ள பலர் உயிரோடு இருக்கும்போதே வாழ்வதில்லை. இறந்த பின் எப்படி வாழ்வார்கள்.

பெரும்பெரும் சேவைகள் செய்தவர்களின் பெயர்களைக் கூட அவர் இறந்ததும் மக்கள் நீக்கிவிட்டுச் சவம், பிரேதம் என்கிறார்கள். அதனால் வாழும்போது அவதானமாக வாழவேண்டும்.

அவர் அந்த ஊரில் பெருமதனவந்தன். கொடையாளி. ஊரில் அவரில்லாமல் எக்கருமங்களும் நடைபெறாது. அவருக்கு அரசு கலாபூசணம் விருது வழங்கியது. ஊரவர்கள் செஞ்சொல் வேந்தர், தமிழ் வித்தகர், அறிஞர் என்று நாமம்சூட்டி அழைத்தனர். திடீரென்று அவர் இறந்துவிட்டார். அயலவர், ஊரவர், நண்பர்கள், இனத்தவர்கள் எல்லோரும் கூடினர். அழுது புலம்பினர். மாலை இரண்டு மணிக்கு இறுதிக் கிரியைகள் செய்வதென்று குடும்பத்தவர் தீர்மானித்தனர். ஐந்து மணியளவிலும் கிரியைகள் தொடங்கவில்லை.

ஒருவன் சொன்னான்; "இரண்டு மணிக்கு சவம் எடுக்கிறதென்றார்கள். ஐந்து மணியாச்சு நான்போறன்."

"இப்போதைக்குப் பிரேதம் எடுக்கமாட்டினம் எனக்கு வேலை இருக்கு" என்றான் இன்னொருவன்.

இரண்டு மணித்தியாலம் சென்றால் அந்த நேரம் 'பொடி' எடுக்கவேணும் என்றார் ஒரு வயோதிபர். அவர் இறந்தவரின் நண்பர். ஐந்து மணிக்குச் சனங்கள் வீடுநோக்கிச் செல்லத் தொடங்கினர்.

இறந்தவருடன் சுடலைக்குச் சிலரே சென்றனர். இதை பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் திருமூலர் என்ற சித்தர் சொல்லியுள்ளார். அதனால், உண்மை நிலையை உணர்ந்து வாழ்ந்தால் கவலைகள் இருக்கமாட்டாது. அந்த அருமையான பாடல் இது.

> "ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
> பேரினை நீக்கி பிணமென்று பேரிட்டுச்
> சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
> நீரினில் மூழ்கி நினைப்பொழிந்தார்களே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய மேடையில் சர்வதேச எதிர்ப்புகள்!

**வெளிநாட்டுச்** சக்திகளில் இருந்து தாய்நாட்டைப் பாதுகாப்போம் என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் போராட்டம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஏற்பாட்டுக் குழுவினரைத் திருப்திப்படுத்தும் வகையில் நடந்து முடிந்திருக்கின்றது.

ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவைக்கான கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில் அங்கு இலங்கைக்கு எதிரான பிரேரணையைக் கண்டித்தும் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை ஆதரிக்கும் வகையில் இந்த மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்த ஆர்ப்பாட்டங்களின் போது அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, ஐ.நா.வின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் ஆகியோரின் கொடும்பாவிகள் எரிக்கப்பட்டதுடன் பல்வேறு வகையான சுலோகங்களைத் தாங்கியவாறு மக்கள் அணி திரண்டிருந்தனர். கடந்த 27 ஆம் திகதி காலையிலிருந்து நாட்டின் பல்வேறு பாகங்களிலும் உள்ள முக்கிய நகரங்களில் ஆர்ப்பாட்டப்பேரணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இவற்றில் அந்தந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண, பிரதேச சபைகளின் உறுப்பினர்கள் என அரச சார்பு அரசியல் பிரதிநிதிகள் பெருமளவில் கலந்து கொண்டிருந்தனர்.

பிரதான ஆர்ப்பாட்டமாக கொழும்பு கோட்டைப் பிரதான புகையிரத நிலையத்திற்கு முன்பாக நடைபெற்றது. பிற்பகல் 3மணியளவில் ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டதுடன் குறித்த ஆர்ப்பாட்டத்தை சிரேஷ்ட அமைச்சர்கள் முன்நின்று வழிநடத்தியதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

அதைத்தவிர கண்டி, நுவரெலியா, குருநாகல், இரத்தினபுரி, பலாங்கொடை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, களுத்துறை, கம்பஹா, நிகவெரட்டிய, ஜாஎல, சீதுவ, கேகாலை ஆகிய பிரதேசங்களில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் கணிசமான அளவு பொதுமக்கள் கலந்து கொண்டிருந்தமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டங்களில் எதிர்பார்க்கப்பட்டதை விட அதிகமான மக்கள் கலந்து கொண்டிருந்ததை காணக் கூடியதாகவிருந்தது. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஊர்வலம் யாழ் முனியப்பர் ஆலயப் பகுதியில் ஆரம்பித்து சத்திரச் சந்திக் கூடாக வைத்தியசாலை வீதி வழியாக வேம்படிச் சந்தியை அடைந்த போது கோயில் வீதியில் ஆரம்பித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆர்ப்பாட்டமும் வேம்படிச் சந்தியை அடைந்து ஈ.பி.டி.பி. யினால் ஒழுங்கு செய்யப்பட்ட ஊர்வலத்துடன் இணைந்து கொண்டது. இரு பகுதியினரும் யாழ் பஸ் நிலையத்தை சென்றடைந்தனர். இதன் போது "எமது தேவைகளை நாமே பார்த்துக் கொள்வோம், அந்நிய நாடே தலையிடாதே. நாம் இழப்புக்களைச் சந்தித்த போது வல்லரசுகள் எங்கே போயின" போன்ற பல்வேறு கோஷங்கள் எழுப்பப்பட்டன.

அதேபோன்று கிளிநொச்சியில் நடாத்தப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியிலும், பொதுக்கூட்டத்திலும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான சந்திரகுமார் கலந்து கொண்டு உரையாற்றியிருந்தார்.

கிழக்கு மாகாணத்திலும் பல்வேறு ஆர்ப்பாட்டங்களும், பேரணிகளும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. இவற்றில் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், மட்டக்களப்பு மேயர் சிவகீதா பிரபாகரன் உட்படப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். திருகோணமலையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணிக்கு பிரதியமைச்சர் சுசந்த புஞ்சி நிலமேயும் அம்பாறையில் சிரேஷ்ட அமைச்சர் அதாவுல்லாவும் கலந்து கொண்டிருந்தனர்.

பல்வேறு விமர்சனங்களுக்கு மத்தியில் ஜெனீவா தீர்மானத்துக்கு எதிராக அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த ஆர்ப்பாட்டப் பேரணிகள் வெற்றியளித்துள்ளதாகவே கருதப்படுகிறது.

பொருட்களின் விலையேற்றம் காரணமாக பல்வேறு பொருளாதார சிக்கல்களுக்கு முகங்கொடுத்து வருகின்ற மக்களைத் திசை திருப்புவதற்காகவும், அரசாங்கத்தின் மீதுள்ள குற்றங்களை மறைத்துக் கொள்வதற்காகவும் இவ்வாறான போராட்டங்கள் அரசாங்கத்தினால் முன்கொண்டு செல்லப்படுவதாகவும், ஜெனீவா தீர்மானம் பூதாகரமாக்கப்படுவதாகவும் எதிர்க்கட்சிகளினால் குற்றம் சாட்டப்படுகின்ற போதிலும், குறித்த போராட்டத்தில் கலந்து கொண்ட மக்களின் உணர்வுகளைப் பார்க்கின்ற போது நாட்டில் பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வந்தமையுடன் ஒப்பிடுகின்ற போது ஏனையவை எல்லாம் இரண்டாம் பட்சமாக இருப்பதாகவே தோன்றுகின்றது.

அதைவிட குறித்த ஆர்ப்பாட்டப் பேரணிகளில் கலந்து கொண்ட மக்களின் உணர்வலைகளானது இலங்கை மீதான சர்வதேச அழுத்தங்களுக்கு எதிரானவை மட்டுமல்ல. இதன் எங்களது பிரச்சினைகளை நாங்களே பார்த்துக் கொள்ள வேண்டும். எம்மை நாமே ஆள வேண்டும். எமது திட்டங்களில் வெளியாரின் திணிப்புகள் இருக்கக் கூடாது என்ற எதிர்பார்ப்புகள் இவற்றையெல்லாம் செய்யக் கூடிய தகுதி தற்போதைய மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு இருக்கின்றது என்ற நம்பிக்கையும் பொதிந்திருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

அந்தவகையில் பார்க்கின்ற அரசாங்கத்தின் மீது மக்களின் எதிர்பார்ப்புக்களை நியாயமான முறையில் தீர்த்து வைக்க வேண்டும் என்ற பொறுப்பு அரசாங்கத்தின் மீது சுமத்தப்படுகின்றது. இதனை புரிந்து கொண்டு மக்களின் எதிர்பார்ப்புகளை விரைந்து செயற்படுத்தி வெளியாரின் தலையீடுகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு தேவையான அனைத்துவிதமான நடவடிக்கைகளும் துணிந்து, விரைந்து மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

---

**(04 ஆம் பக்கத் தொடர்ச்சி... புதிய...)**

அமைச்சரின் இந்த அணுகுமுறைகள் இலங்கை அரசுக்கும், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கும் எதிரானதல்ல.

கூட்டமைப்பு ஜெனீவாவுக்குப் போய் எதிர்ப்புக்காட்டினால் அதன் விளைவு இங்கே மீண்டும் வன்முறைகளுக்கே வழிவகுக்கும் என்றும் ஆகையாலேயே நாம் ஜெனீவாவுக்குப்போவதை தவிர்த்ததாகவும் சம்பந்தர் கூறியுள்ளார். அப்படியென்றால் இங்கே மீண்டும் இவ் வன்முறைகள் வெடிப்பதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்துவிட்டதாக இவர் சொல்லாமல் சொல்கின்றாரா?

சர்வதேச சமூகத்திடம் தமிழ் மக்களின் பிரச்சினைகளை கொண்டு செல்வோம் என்று கூறும் கூட்டமைப்பு வெறுமனே கற்றுலாக்களைச் செய்கின்றதே தவிர ஜெனீவா போன்ற சர்வதேச மையங்களில் தமிழ் மக்களுக்காக பேசத்தயாராக இல்லை. பதுங்கிக் கொண்டிருக்கப் பார்க்கின்றது. அங்கே இலங்கை அரசுக்கு ஏதாவது தீமை நடந்தால் அது தமது ஏற்பாட்டினாலேயே நடந்ததாக கூறவும். அப்படியேதும் நடக்காவிட்டால் வன்முறை வெடிக்காமல் இருப்பதற்காகவே தாம் நேரில் சென்று மோதாமல் இருந்துவிட்டதாக அறிக்கைவிட்டால் விடயம் முடியும். இதில் சம்பந்தன் ஆளுக்கு அரசியல் சுயநிலைத் தகுதிக்கு இல்லை என்று தெரிகின்றது.

ஈ.பி.டி.பி இலங்கை அரசோடு இணக்க அரசியல் நடத்துகின்றது அதேவேளை சர்வதேச சமூகத்திடமும் தமிழ் மக்கள் சார்பில் பேசுகின்றது. இந்த அணுகுமுறை காலத்தின் அவசியமாகும். இதை புலம்பெயர்ந்த புலி ஆதரவாளர்களும் கூட்டமைப்பின் ஆதரவாளர்களும் எப்படி எடுத்துக் கொள்வார்கள் என்று நாம் கவலைப்படவில்லை. ஆனால் தற்போதைய உலக ஒழுங்கோடும் இலங்கையின் நடைமுறை அரசியலோடும் சிந்தித்து நியாயத்தைப் புரிந்து கொள்ளவேண்டும். விமர்சனங்களை விடவும் தம்மை சுயவிமர்சனம் செய்து கொள்ளவேண்டும் என்றும் கூறுகின்றார் ஈ.பி.டி.பியின் ஊடகச் செயலாளர் ஸ்டாலின்.

இவற்றைப் பார்க்கும்போது கடந்தவாரம் அமைச்சர் தேவானந்தாவின் பிரத்தியேகச் செயலாளர் தயானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பியின் உயர் மட்டக்குழுவினர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பில் நடத்திய பேச்சுக்களும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஜெனீவா பயணத்திற்கும் தொடர்புகள் உண்டு.

விரிசலடையும் கூட்டமைப்பு அரசு பேச்சுவார்த்தைகள் ஒரு புறமும் நெருக்கமடையும் ஈ.பி.டி.பி அரசு உறவும் புதிய நகர்வுத் தளமொன்றை நோக்கியதாகவே உள்ளது. தயானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி தூதுக்குழுவினர் நடாத்திய பேச்சுவார்த்தையில் பல்வேறு விடயங்களைப் பகிர்ந்து கொண்டபோதும் தீர்வில் விருப்பமற்ற கூட்டமைப்பை எதிர்பார்க்காமல் ஏனைய தமிழ் கட்சிகளுடன் அரசு பேச்சுக்களை நடத்த வேண்டுமென்று வலியுறுத்தியதற்கு ஜனாதிபதி சாதகமான சமிக்ஞை காட்டியிருப்பதும் நடைமுறை அரசியலில் புதிய பாதையைத் திறந்து விடக்கூடும்.

ஜெனீவா நெருக்கடியை இலங்கை அரசு லாவகமாக கையாண்டுள்ளது. பெப்ரவரி 27ஆம் திகதி இலங்கைக்கு எதிராக பெரும் பிரளயம் நடக்கப்போகிறது என்று எதிர்பார்த்தவர்களின் கனவு தவிடுபொடியாகியுள்ளது. இதுவரையில் இலங்கைக்கு எதிராக எந்தத் தீர்மானமும் கொண்டுவரப்படவில்லை. இருப்பினும் மார்ச் 10ஆம் திகதிவரை தீர்மானமொன்றைக் கொண்டுவரக்கூடிய வாய்ப்பு அங்கத்துவ நாடுகளுக்கு இருக்கின்றது. இன்னும் 47 நாடுகள் அங்கம் வகிக்கும் ஐ.நா மனித உரிமைப் பேரவையில் அமெரிக்காவை விடவும் இலங்கைக்கு ஆதரவான நாடுகளே அதிகமாகவுள்ளன. ஆகையால் எந்தச் சவாலையும் எதிர்கொள்ளும் நிலையில் இலங்கை அரசு உள்ளது.

**(05 ஆம் பக்கத் தொடர்ச்சி... பழைய ...)**

இந்த விதிமுறைகள், 2001இற்கு முன்பு நடைபெற்ற பணப் பரிமாற்றங்களுக்கும் பொருந்தும்.

அப்படிப்பொரு வழியில் சில தகவல்கள் பெற்ற உற்சாகத்தில்தான், சி.பி.ஐ. இந்த வழக்கை மீண்டும் உயிர்பெற வைக்க போராடியது என்கிறார்கள் விஷயம் அறிந்தவர்கள். அவர்கள் கூறுவதன்படி, சி.பி.ஐ.யின் கைகளில் புதிதாக ஒரு பிடி உள்ளது.

2000ஆம் ஆண்டில் இல்லாத அந்த பிடியை, அடுத்த நாடாளுமன்றத் தேர்தலுக்குமுன் மேஜையில் போடுவார்கள்.

**(15 ஆம் பக்கத் தொடர்ச்சி... பிரச்சினைகளின் ...)**


கடந்த நான்கு ஆண்டுகளில் இஸ்ரேலால் கொல்லப்பட்ட ஐந்தாவது அணு விஞ்ஞானி இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேலின் கொள்கைகளுக்கு எதிராகவும் தங்களுக்கு மேம்பட்ட வாழ்க்கைத் தரம் வேண்டும் என்பதற்காகவும் இஸ்ரேல் அரசுக்கு எதிராக அதன் சொந்த குடிமக்களே ஆர்ப்பாட்டம் நடத்துகின்றனர். இஸ்ரேலில் உள்ள மத்திய தர வர்க்கத்தினர் அகண்ட இஸ்ரேலை விட நிம்மதியான வாழ்க்கை மற்றும் தங்கள் வாழ்க்கை தரம் மேம்படுத்தப்பட வேண்டும் என்பதற்கே முன்னுரிமை கொடுக்கின்றனர்.

எனவே பிரச்சினையை திசை திருப்ப இஸ்ரேலியர்கள் கேட்கும் வசதியைச் செய்து கொடுக்க முடியாத இஸ்ரேல், இஸ்ரேல் மக்கள் கேட்காத போரை அவர்கள் மேல் திணிக்கின்றனர். போர் செய்வதற்கு ஒரு எதிரி தேவை என்பதால் ஈரானை எதிரியாக கட்டமைக்கின்றனர்.

மத்திய கிழக்கின் ஒரே அணு ஆயுதம் வைத்துள்ள நாடான இஸ்ரேல் யதார்த்தத்துக்கு முகம் கொடுக்க முடியாமல் தானே தேவையற்ற ஒரு போரை ஏற்பாடு செய்து அப்போரை தன் குடிமக்கள் மீது திணிக்கிறது.

இஸ்ரேலின் நிறுவனர்களில் ஒருவரும் அதன் தேசிய ஹீரோவுமான மோசே தயானின் மனைவி ருத் தயானின் வார்த்தைகளில் சொல்வதென்றால் "இன்று இஸ்ரேல் ஓர் கனவு தேசமல்ல. மாறாக பிரச்சினைகளின் நடுவே தத்தளிக்கும் ஓர் தேசமே இஸ்ரேல்."

ஸ்ரீ ராம் ஜெயம்

சகல பரிகாரங்களுக்கும் மலையாள மாந்திரீகம்

கேட்ட வரத்தை எனக்கு கொடுத்தது ஸ்ரீ துர்க்காபரமாத்மாவே!

தேசபந்து, பேராசிரியர், ஜோதிடமாமணி P.K. சாமி, J.P.

அருள்ஞான சித்த இல்லம், ஸ்ரீ துர்க்காதேவி ஆலயம்.

23, பேலியகொடை ரோட், கொழும்பு - 13 தொ.பே: 011 - 2342463, 011 - 2342464, 011 - 2470615

நுவரெலியா கிளை: ஸ்ரீ துர்க்கா தேவி இல்லம்

இல: 33, தினசரி சந்தை கட்டடம், நுவரெலியா, 052 - 2222508

நுவரெலியாவிலும் ராகு கால பூஜை தினந்தோறும் நடைபெறும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Regd. as a News paper at the G.P.O. (QD/86/NEWS/2012)



## டைட்டானிக் பொக்கிஷம்

உலகிலேயே மிகப் பிரமாண்டமான முதல் சொகுசு கப்பலான டைட்டானிக், தனது முதல் பயணத்திலேயே வடக்கு அட்லாண்டிக் கடலில் மிகப்பெரிய பனிப்பாறையில் மோதி விபத்துக்குள்ளானது. கப்பலில் பயணம் செய்த 2,223 பேரில் 1517 பேர் உயிரிழந்தனர். இது உலக வரலாற்றிலேயே மிகப்பெரிய கப்பல் விபத்தாக இன்றளவும் உள்ளது.

ஆய்வின்போது டைட்டானிக் கப்பலில் இருந்து அரிய மொடல் வயலின் ஒன்று கிடைத்துள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. இதை அக்கப்பலில் இருந்த பேண்ட் மாஸ்டர் வாலஸ் ஹர்ட்லி பயன்படுத்தி இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. வாலஸ் ஹர்ட்லி என்ற இசைக் கலைஞர், தனது வயலினை அணைத்த நிலையிலேயே கடலில் மூழ்கினார்.

அந்த நிலையிலேயே அவரது உடல் மீட்கப்பட்டதாகவும் கூறப்பட்டது. அந்த வயலின்தான் தற்போது கிடைத்திருக்கிறது என்று கூறப்படுகிறது. இங்கிலாந்தை சேர்ந்த ஒருவரிடம் இந்த வயலின் பல ஆண்டு காலமாக இருந்துள்ளது.

வாலசுக்கு நிச்சயிக்கப்பட்டிருந்த பெண் மரியா ராபின்சன், டைட்டானிக் விபத்து நடந்த சில ஆண்டுகளில் இதை தன்னிடம் கொடுத்ததாக அவர் கூறியுள்ளார்.

## மர்மமனிதன்...

இலங்கைக்கு அண்மைய நாட்களில் வேற்றுக்கிரகவாசிகள் வந்திருக்கின்றனர் என்கிற சந்தேகம் ஏற்பட்டு உள்ளது. குருநாகல் மாவட்டத்தில் உள்ள வெலகல என்கிற இடத்தில் சில மர்ம உருவங்கள் சில தோன்றி இருக்கின்றன என்று சிங்கள ஊடகங்கள் செய்தி வெளியிட்டு உள்ளன. இம்மர்மக் காட்சிகளை கொண்ட புகைப்படங்களையும் இவ்வூடகங்கள் வெளியிட்டு உள்ளன. இப்புகைப்படங்களில் தெரிகின்ற மர்ம உருவங்கள் வேற்றுக் கிரகவாசிகளாக இருக்கக் கூடும் என்று சந்தேகம் கிளம்பி உள்ளன. பொலிஸார் புலனாய்வு விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளார்கள். இலங்கைக்கு ஏற்கனவே முந்தைய வருடங்களில் வேற்றுக் கிரகவாசிகள் வந்திருந்தனர் என்று கதைகள் அடிபட்டு இருக்கின்றன.





## சாதனை!

சீனாவைச் சேர்ந்த நபரொருவர் பலகையிலான 23 கதிரைகளை தனது பற்களால் தூக்கி வைத்திருந்து புதிய சாதனையொன்றை நிலைநாட்டியுள்ளார்.

லீ ஹோங்க்சியோ ஏனும் 30 வயதான நபர், சீனாவின் சோங்கிங் நகரில் இச்சாதனையை நிகழ்த்தினார். அவர் 23 கதிரைகளையும் தனது பற்களின் மூலம் 11 விநாடிகள் தூக்கி வைத்திருந்தார். மேற்படி நீண்ட கதிரைகளின் மொத்த நிறை 70 கிலோகிராம்களாகும்.

இவர் இதற்கு முன் 14 கதிரைகளை தூக்கி வைத்திருந்தமையே சாதனையாக இருந்தது. சீனாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் ஜின்ஸி உலக சாதனைப் பதிவு அலுவலகமானது புதிய சாதனைக்கான சான்றிதழை லீ ஹோங்சியோவுக்கு வழங்கியுள்ளது.

## வழிகாட்டல்....

அவுஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கும் இலங்கை அணி கங்காருகளின் கோட்டையில் வைத்து தமது மீள்எழுச்சியை நிரூபித்திருக்கின்றன. உலகக் கிண்ணப் போட்டிகளின் இறுதித் தோல்வியுடன் இலங்கை அணிக்குள் ஏற்பட்ட குத்துவெட்டுக்கள் முகங்கோணல்கள் உட்பட்ட வெளித் தலையீடுகளால் இலங்கைக் கிரிக்கெட்டின் எதிர்காலம் அஸ்தமனமாகிவிட்டதோ என்று இலங்கை ரசிகர்கள் அச்சம் கொண்ட வேளையிலே...

'அஞ்சற்க' என்று தமது ரசிகர்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தியிருக்கிறது இலங்கை அணி. இதில் சிறப்பம்சம் என்னவென்றால் இந்த முக்கோணத்தொடரில் இலங்கையின் வெற்றிகளில் குறிப்பிடத்தக்க ஆதிக்கம் செலுத்துபவர்கள் இளம் வீரர்கள். அனுபவ வீரர்களின் அனுசரணையுடன் தூள் கிளப்பு கிறார்கள். இது குமார் சங்கக் கார, மஹேல போன்றோருக்குப் பின்னரும் பலமான இலங்கை அணி இருக்கிறது என்பதை பறை சாற்றுகிறது. ஆட்டத்திலே கலக்குகின்ற இந்த இளம் வீரர்களுக்கு ஆலோசனை-களை அள்ளி வழங்கும் மூத்த கிரிக்கெட் வீரர் சங்கக்கார பொழுதுபோக்கு வேளைக-ளில் சிட்னி நகரத்தையும் சுற்றிக் காட்டுகிறார். அவ்வாறானதொரு தருணத்தில் கிளிக் செய்யப்பட்ட புகைப் படத்தையே இங்கு காண்கிறீர்கள்.



## எல்லாமே நான்தான்







பயங்கரமான தோற்றத்தினை வெளிப்படுத்தும் உயிரினம் உலகில் இதுவரையில் பல இலட்சக்கணக்கான உயிரினங்கள் கண்டறியப்பட்ட போதிலும் இன்னும் அறியப்படாத உயிரினங்கள் ஏராளம் காணப்படுகின்றன. இவை தொடர்பான ஆராய்ச்சிகள் தொடர்ந்து கொண்டே இருக்கும் சூழ்நிலையில் இதுவரை பார்த்திராத பயங்கர தோற்றமுடைய உயிரினம் பற்றிய தகவல் ஒன்று வெளியாகியுள்ளது. பொலி சீற்ஸ் என்றழைக்கப்படும்

இவ்வினோத உயிரினங்கள் கடலின் 1000 மீற்றர்கள் தூரத்தில் காணப்படுவதாக விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். தமது வடிவத்தை மாற்றக்கூடிய இந்த உயிரினமானது 375 டிகிரி வெப்பநிலையிலும் வாழக்கூடியது என்று அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org